பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 23 ஞாயிற்றுக்கிழமை 06.05.2018 கதிர் 181

## வாள்வெட்டு; ஐவர் கைது

யாழ்ப்பாணம், மே 06

யாழ்ப்பாணத்தில் அண்மைய நாள்களில் முன்னெடுக்கப்பட்ட வாள்வெட்டு வன்முறைகளுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் ஆவா குழுவைச் சேர்ந்த 5 பேர் வாள்களுடன் நேற்று

பக்கம் 18 >>>

# கையூட்டை முற்றாக ஒழிக்கும் நல்லாட்சி

## ஜனாதிபதி மைத்திரி நேற்று அறிவிப்பு



கொழும்பு, மே 06

"அரச சேவையிலும் ஏனைய சகல துறைகளிலும் காணப்படும் கையூட்டு, ஊழல், மோசடிகளைத் தடுப்பதற்கும் அவற்றை முற்றாக இல்லாதொழிப்பதற்குமான சகல நடவடிக்கைகளும் அரசால் மேற்கொள்ளப்படும். நல்லாட்சி அரசு இதற்காக முழு அளவில் செயற்படும்."

- இவ்வாறு நேற்று அறிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

பக்கம் 18 >>>

## பெற்றோல் 20 ரூபா, டீசல் 12 ரூபா விலை அதிகரிக்க முன்மொழிவு

கொழும்பு, மே 06

பெற்றோலின் விலையை 20 ரூபாவாலும் டீசலின் விலையை 12 ரூபாவாலும் அதிகரிப்பதற்கு ஏதுவாக விலைச் சூத்திரம் அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த விலைச்சூத்திரம் கடந்த செவ்வாய்க்கிழமை

பக்கம் 18 >>>

## நாட்டைப் பிரிக்கும் '20'!
### மகாசங்கம் போர்க்கொடி

கொழும்பு, மே 06

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கும் 20 ஆவது திருத்தச் சட்டம், நிறைவேற்றப்பட்டால் நாடு பிளவுபடும் என்று பௌத்த பிக்குகளைக் கொண்ட தேசிய விஸ்வத் சங்க சபா எச்சரித்துள்ளது.

கொழும்பில் நடந்த மகாசங்கத்தின் தேசிய மாநாட்டில்,உரையாற்றிய மகாசங்கத்தைச் சேர்ந்த பேராசிரியர் இந்துரகரே தம்மரத்ன, வண. மெடகம தம்மானந்த தேரர், வண. மெடகொட அபேதிஸ்ஸ

பக்கம் 18 >>>

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்; வடக்கு மாகாண அரசும் ஆராய்வு

யாழ்ப்பாணம், மே 06

மே – 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் நாளை திங்கட்கிழமை கூடவுள்ளனர்.

கைதடியிலுள்ள முதலமைச்சரின் அமைச்சில் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இது தொடர்பில் கலந்துரையாடப் படவுள்ளது. மாகாண சபையின் அவைத் தலைவர், அமைச்சர்கள் மற்

பக்கம் 18 >>>

## மீண்டும் அமைச்சரவை மாற்றம்?

அமைச்சரவையில் மீண்டும் மாற்றம் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள்காணப்படுவதாக அரசியல் ஆய்வாளர்கள்

பக்கம் 18 >>>

## வடக்குக் கல்வி அமைச்சின் செயலாளராக சத்தியசீலன்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 06

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளராக எஸ்.சத்தியசீலனும் மாகாண விவசாய அமைச்சின் செயலாளராக தெய்வேந்திரனும் நியமிக்கப்பட்டுள்

பக்கம் 18 >>>

## பொலிஸாருக்கு வாள்வெட்டு

யாழ்ப்பாணம், மே 06

ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நாரந்தனைப் பகுதியில் வைத்து நேற்று முற்பகல் வாள் வெட்டுக்குள்ளானார் எனப் பொலிஸார்

பக்கம் 18 >>>

## தமிழகத்திலிருந்து படகு மூலம் தாயகம் திரும்பிய 14 பேர் கைது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே.06

தமிழகத்திலுள்ள ஈழ அகதிகள் முகாமிலிருந்து சட்டவிரோதமாக முறையில் தாயகம் திரும்பிய ஒன்பது மாதக் குழந்தை உட்பட 14 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பக்கம் 18 >>>



## வடக்கில் 23 பட்டதாரிகளுக்கு அபிவிருத்தி அலுவலர் நியமனம்



யாழ்ப்பாணம், மே 08

வடக்கு மாகாண சபையின் கீழ் 23 பட்டதாரிகளுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் நேற்று வழங்கப்பட்டது.

வடக்கு மாகாணப் பொது நிர்வாக சேவைகள் திணைக்களத்தின் கீழ்

பக்கம் 18 >>>

## கண்டி வன்முறைகள்: மேலும் மூவர் கைது

கொழும்பு, மே 06

கண்டியில் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைகளுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்

பக்கம் 18 >>>

### இனிது ரகசியம்

அலே!

கூட்டமைப்புக்குள்ளும் 'ஸேம் சைட் கோல்' அடிக்கிற மாதிரி சுமந்திரன் நடந்து கொள்கின்றார் என்ற சாரப்பட நேற்று நான் எழுதிய இந்தப் பத்தி எதிர்பார்த்த மாதிரி சம்பந்தப்பட்ட தரப்பை உசுப்பேத்தி விட்டது.

இதை, சிண்டு முடிகிற வேலை என்று நீங்கள் திட்டினால் நான் ஒன்றும் செய்ய முடியாது. எது, எப்படி என்றாலும்

பக்கம் 03 >>>

## மாட்டிறைச்சிக் கடை நீர்வேலியில் தீக்கிரை



யாழ்ப்பாணம், மே 06

யாழ்ப்பாணம் – பருத்தித்துறை வீதியில் நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயிலுக்குச் செல்லும் வீதிக்கு அருகில் இருந்த மாட்டு இறைச்சிக் கடை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு

பக்கம் 18 >>>

# இடிந்து விழும் நிலையில் இந்திய வீட்டுத் திட்டம்; உயிலங்குளம் பிரதேச மக்கள் பெரும் ஆர்ப்பாட்டம்





முல்லைத்தீவு, மே 06

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட உயிலங்குளம் கிராம அலுவலர் பிரிவில் அமைக்கப்பட்ட இந்திய வீடுகள் மக்கள் வாழ முடியாத நிலையில் இருக்கின்றன என்றும் அதனை திருத்த அதிகாரிகள் முன்வராத பட்சத்தில் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கப்போகிறோம் எனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், நேற்றுமுன் தினம் மாலை துணுக்காய் பிரதேச செயலகம் முன் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

அத்துடன், பிரதேச செயலாளருக்கான மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய்ப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட உயிலங்குளம் கிராம அலுவலர் பிரிவில் இந்திய அரசின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட வீடுகள் மக்கள் வாழ முடியாத நிலையில் சுவர்கள் வெடித்து யன்னல் நிலைகள் அனைத்தும் பழுதடைந்து காணப்படுகின்றன.

அத்துடன், எந்த ஒரு மழை காற்று வந்தாலும் இடிந்து விழக்கூடிய அபாயம் காணப்படுகிறது. இதனால், அங்கு வசிக்க அச்சப்படுகிறோம் என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2012 ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் அமைத்துக் கொடுக்கப்பட்ட 50 வீடுகளில் யுத்தத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மாற்றுத் திறனாளிகளின் குடும்பங்கள் முன்னாள் போராளிக் குடும்பங்கள் என குடியமர்த்தப்பட்டனர்.

இவர்கள் குடியமர்த்தப்படும் போது 5 ஆண்டுகளில் காணிக்கான ஆவணங்கள் வழங்குவதாகவும், வீதிகள் புனரமைத்து குடிநீர் விநியோகம் உள்ளிட்ட சகல வசதிகளையும் ஏற்படுத்தி தருவதாக கூறியபோதும் இதுவரை காணிக்கான ஆவணங்கள் வழங்கப்படவில்லை .

வீதிகள் திருத்தப்படவில்லை. குடிதண்ணீர்வசதிகள் உள்ளிட்ட ஏனைய வசதிகள் எதுவும் செய்துதரப்படவில்லை. இதனால் இங்கு வாழமுடியாத நிலையில் பல குடும்பங்கள் வேறு இடங்களில் உறவுகளில் வீடுகளில் சென்று வாழ்ந்து வருகின்றனர். தமது வீடுகளை உரிய முறையில் புனரமைத்து இதர வசதிகளையும் ஏற்படுத்தி தருமாறு மக்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்த நிலையில் இதுவரை யாரும் இந்த விடயத்தில் அக்கறை காட்டவில்லை என மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், நேற்றுமுன் தினம் மாலை துணுக்காய் பிரதேச செயலகம் முன் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்து பிரதேச செயலாளருக்கான மகஜர் ஒன்றினையும் கையளித்துள்ளனர்.

முன்னதாக துணுக்காய் பஸ் நிலையத்துக்கு அருகில் ஒன்று கூடிய மக்கள் அங்கிருந்து பிரதேச செயலகம் வரை பேரணியாகச் சென்று பிரதேச செயலாளருக்கான மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இந்த மகஜரை பிரதேச செயலாளர் இல்லாத காரணத்தால் நிர்வாக உத்தியோகத்தரிடம் கையளித்தனர்.

மகஜரை பெற்றுக்கொண்ட நிர்வாக உத்தியோகத்தர் பிரதேச செயலாளரிடம் கையளித்து உரிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்வதாக தெரிவித்தார்.

இதன்போது மக்கள் எதிர் வரும் 15 ஆம் திகதிக்கு முன் தமக்கான தீர்வு கிடைக்கவில்லை எனில் பிரதேச செயலகம் முன்பாக சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கப் போகிறோம் எனத் தெரிவித்துள்ளனர்.

(க-81)

# 20ஆவது திருத்தச் சட்டம் நாட்டைப் பிளவுபடுத்தும்!


மகா சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மே 06

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் 20 ஆவது திருத்தச் சட்டம், நிறைவேற்றப்பட்டால் நாடு பிளவுபடும் என்று இலங்கையின் பௌத்த பிக்குகளைக் கொண்ட தேசிய விஸ்வத் சங்க சபா எச்சரித்துள்ளது.

கொழும்பில் நடந்த மகாசங்கத்தின் தேசிய மாநாட்டில், உரையாற்றிய மகாசங்கத்தைச் சேர்ந்த பேராசிரியர் இந்துரகரே தம்மரத்ன, வண. மெடகம தம்மானந்த தேரர், வண. மெடகொட அபேதிஸ்ஸ தேரர், வண. கோன்கஸ்தெனியெ ஆனந்த தேரர், அகுரதியே நந்த தேரர், உள்ளிட்ட பலரும், நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

இங்கு உரையாற்றிய பேராசிரியர் இந்துரகரே தம்மரத்ன தேரர், இலங்கையில் உள்ள சில பிரிவினைவாதிகள் நாட்டைப் பிளவுபடுத்தலாம் என்று நம்புகிறார்கள். அவர்கள் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள 20 ஆவது திருத்தச்சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று கூறினார்.

13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறையில் இருக்கும் போது, நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பது ஆபத்தானது என்றும் பௌத்த பிக்குகள் சுட்டிக்காட்டினர்.

நாட்டைப் பிளவுபடுத்தக் கூடிய இந்த திருத்தச் சட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு, ஜனாதிபதியோ, பிரதமரோ ஆதரவு அளிக்கக் கூடாது என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

## இந்திய - இலங்கைக் கடற்படைகள் நடுக் கடலில் நீண்ட நேரப் பேச்சு!



இலங்கை - இந்திய கடற்படைகளுக்கு இடையிலான, 29 ஆவது அனைத்துலக கடல் எல்லைக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

காங்கேசன்துறைக்கு அப்பாலுள்ள கடலில், இந்தியக் கடற்படைக் கப்பலான சுமித்ராவில் நடந்த இந்தக் கூட்டத்தில், கடல்சார் பாதுகாப்பு, குறித்து நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.



11 அதிகாரிகளைக் கொண்ட இலங்கை தரப்புக்குழுவுக்கு வடபிராந்திய கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் முடித்த கமகே, தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு கடற்படை பிராந்தியத்துக்கான கட்டளை அதிகாரி றியர் அட்மிரல் அலோக் பட்னாகர் தலைமையிலான இந்திய அதிகாரிகள் குழுவில் 9 அதிகாரிகள் இடம்பெற்றிருந்தனர்.

## கிளிநொச்சி சந்தை அருகிலுள்ள வீதி புனரமைப்பு

முல்லைத்தீவு, மே 06

கிளிநொச்சி நகரில் சந்தை அருகே செல்லும் வீதி நீண்ட காலத்திற்குப் பின்னர் கரைச்சிப் பிரதேச சபையினரால் மக்களின் இலகு போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் புனரமைக்கப்படுகிறது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் பின்புறமாக இருந்து பொதுச்சந்தை வரை செல்லும் இந்த வீதி மிக நீண்ட காலமாக குண்டும் குழியுமாக போக்குவரத்து நெருக்கடியான வீதியாக காணப்பட்டு வந்தது.

எனவே இந்த வீதியை புனரமைத்து தருமாறு பொது மக்கள் கரைச்சிப் பிரதேச சபையினரிடமும், கிளிநொச்சி நகர கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்களான ரஜனிகாந் மற்றும் மோகன்ராஜ் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்று பிரதேச சபையினரால் மக்களின் இலகு போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் சீரமைக்கப்பட்டு வருகிறது.

இதன்போது புனரமைப்பு பணிகளை கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்கள் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளனர்.



போதைப்பொருள் கடத்தலை தடுக்க

## இலங்கை - இந்தியா கூட்டு நடவடிக்கை

கொழும்பு, மே 06

போதைப்பொருள் கடத்தலை தடுப்பதற்காக இலங்கையும், இந்தியாவும் இணைந்து கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளன.

இந்தியத் தலைநகர் டில்லியில் நேற்றுமுன் தினம் ஆரம்பமான இரு நாடுகளுக்கு இடையிலான கலந்துரையாடலில் இந்த விடயம் குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவின் சார்பில் இந்திய போதைப் பொருள் தடுப்பு பணியகத்தின் அதிகாரிகளும், இலங்கை போதைப்பொருள் தடுப்பு பணியக அதிகாரிகளும் இதில் பங்கேற்றுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளை தடுப்பதற்கான திட்டங்களை வகுப்பது குறித்து இதன்போது இருநாடுகளினதும் அதிகாரிகள் கலந்துரையாடியுள்ளனர்.

கடந்த ஆண்டில் ஹெரோயின், கஞ்சா மற்றும் கொக்கேய்ன் போன்ற போதைப் பொருள்களை கடத்த முற்பட்ட போது ஆறு இலங்கையர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தங்கக் கடத்தல் தொடர்பில் கடுமையான சட்டங்கள்

கொழும்பு, மே 06

சட்ட விரோதமான முறையில் தங்கத்தை நாட்டிலிருந்து எடுத்துச் செல்வதை தடுப்பதற்கான கடுமையான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

இதற்கமைய, அடைவு வைக்கப்பட்ட தங்க ஆபரணங்களை ஏலத்தில் மொத்தமாக கொள்வனவு செய்வது பற்றிய தகவல்களை வழங்குமாறு அங்கீகாரம் பெற்ற வங்கிகளை இலங்கை மத்திய வங்கி கேட்டுள்ளது.

# சிங்களக் குடியேற்றங்கள் வடக்கில் தொடர்கின்றன

## மாகாண அமைச்சர் குற்றச்சாடு

வவுனியா, மே 06

பெரும்பான்மை இனத்தவர்களின் குடியேற்றங்கள் தொடர்ந்தும் நடைபெற்றுக்கொண்டு தான் இருக்கின்றன. ஆனால் எமது மக்கள் காணியில்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் தெரிவித்தார்.

நேற்று வவுனியா, தரணிக்குளத்தில் இடம்பெற்ற மக்களுடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மக்களுக்குக் காணி இல்லை. ஆனால் வேறு மாகாணங்களில் இருந்து குடியேற்றுகின்ற திட்டங்கள் தொடர்ந்தும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மணலாறு போன்ற இடங்களில் தொடர்ச்சியாகப் பெரும்பான்மை இன மக்களைக் குடியேற்றும் செயற்பாடுகளைக் காணக்கூடியதாகவுள்ளன.

அத்துடன் கொக்கிளாய் பிரதேசத்தில் தமிழ் மக்களுடைய ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் மக்களைக் குடியேறவிடாமல் பெரும்பான்மையினக் குடியேற்றங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் யுத்தத்துக்கு முன்பு பாவித்த பல குளங்களையும் காணிகளையும் அங்கு குடியேற்றப்பட்ட பெரும்பான்மையினக் குடியேற்றவாசிகளுக்கு வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதேபோல் எங்கள் இடங்களில் வனவளப் பிரச்சினை இருக்கிறது. ஆனால் பெரும்பான்மை இனத்தவர்களின் குடியேற்றங்கள் நடைபெறும் மணலாற்றில் அந்தப் பிரச்சினை இல்லை என்பது ஒரு பக்கச்சார்பான நிலைமையாகும். நாங்கள் சரியான அரசியல் ரீதியாக அணுக வேண்டிய தேவை இருந்தாலும் எந்த அரசு வந்தாலும் இதைத்தான் செய்துகொண்டு இருக்கின்றது - என்றார். (ஐ)

# மே 7 தனியாருக்கு விடுமுறை இல்லை

## அரச அறிவிப்பில் குழப்பம்

கொழும்பு, மே 06

எதிர்வரும் மே 7 ஆம் திகதி தனியார் துறைக்கு விடுமுறை என்பது வர்த்தமானி அறிவிப்பில் வெளியாகவில்லை என உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.


வெசாக் தினத்தினை முன்னிட்டு மே 1 தொழிலாளர் தினத்தை, மே மாதம் 7 ஆம் திகதி அன்று கொண்டாட அரசு முடிவுசெய்து, அன்றைய தினத்தைப் பொது விடுமுறை தினமாக அறிவித்திருந்தது.

இந்த நிலையில், 7 ஆம் திகதி அன்று தனியார் துறைக்கான விடுமுறையைப் பற்றிய எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை என அமைச்சர் கூறியுள்ளார்.

1971 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விடுமுறைச் சட்டத்தின் கீழ் உள்நாட்டலுவல்கள் அமைச்சில் உள்ள அதிகாரங்களின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டுக்கான அனைத்து விடுமுறைகளும், 2017 ஆம் ஆண்டு ஜுன் 24 திகதி சனிக்கிழமை வெளியான அறிவித்தலில் இலக்கம் 2024/55 இல் அரசு மற்றும் தனியார் துறை தவிர அனைவருக்கும் விடுமுறை என அறிவிக்கப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் தனியார் துறையினருக்கான விடுமுறைகள் தொடர்பிலான சுற்றறிக்கை, தொழிலாளர் அமைச்சினால் வெளியிடப்படும் எனவும் அமைச்சர் வஜிர அபேவர்தன கூறினார். (ஐ)

# வலி.வடக்குக்கு இன்று முதல்வர் விக்கி விஜயம்



யாழ்ப்பாணம், மே 06


வலி.வடக்கில் அண்மையில் மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் இன்று முற்பகல் 10.00 மணிக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

வலிவடக்கு 2015 மார்ச் மாதம் மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்டதில் இருந்து இன்று வரையான காலத்தில் முதல்வரின் இரண்டாவது விஜயம் இதுவாகும்.

இந்த மூன்று வருட காலத்தில் மாகாண சபையானது மீள் குடியேற்றப் பிரதேசத்துக்கென தனியான நிதி ஒதுக்கீடுகள் எதனையும் மேற்கொள்ளப்படவில்லை எனக் குற்றச்சாட்டு உள்ளது.

அத்துடன் வலி.வடக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவர்களில் ஒருவரான முதல்வர், ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டங்களிலும் கலந்துகொள்வதில்லை எனக் கூறப்பட்டது.

இந்நிலையில் முதலமைச்சரின் இன்றைய விஜயம் மீளக் குடியேறிய மக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளதுடன் பல எதிர்பார்ப்புக்களையும் தோற்றுவித்துள்ளது. (ஐ)



தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறீ சபாரட்ணத்தின் 32ஆவது வருட நினைவஞ்சலி நிகழ்வு அவர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட இடமாகக் கருதப்படும் கோண்டாவில் அன்னங்கை ஒழுங்கையில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. சிறீ ரெலோ கட்சியின் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் இது இடம்பெற்றது. (ஐ)

# மேதின நிகழ்வுக்கு எதிராக கவன ஈர்ப்புப் போராட்டம்!



மட்டக்களப்பு, மே 06

மட்டக்களப்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ள மே தின நிகழ்விற்கு எதிராக அமைதியான முறையில் கவனஈர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவி அ. அமலநாயகி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு அரச சார்பற்ற இணையக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது உறவுகளைப் படுகொலை செய்வதில் மற்றும் காணாமல்போக செய்வதில் பெரும்பங்காற்றிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இம்முறை மட்டக்களப்பில் தமது மே தின நிகழ்வினை நடத்துவதற்கு நாம் எமது எதிர்ப்பினை தெரிவிக்கவுள்ளோம்.

அந்த வகையில் மே தினம் நடைபெறும் பகுதியில் அன்றைய தினத்திலேயே அமைதியான முறையில் எமது கவனவீர்ப்புப் போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளோம்.

அத்துடன், எதிர்வரும் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு வடக்கில் நடத்தப்படவுள்ளது. யாழ். பல்கலைக் கழகம், காணாமல் போனவர்கள் சங்கம் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'நாரதர் கலகம் 'நன்மையில்தானே முடியும்?'

எங்கள் எழுத்தும் கடைசியில் நன்மையில் முடியும் என்று நம்புவோம்.

இனி விடயத்துக்கு வருகிறேன்.

நேற்று எங்களின் இந்தப் பத்தியைப் பார்த்துவிட்டு புளொட் அமைப்பின் முக்கிய தூண் ஒருவர் அழைப்பு எடுத்தார். சுமந்திரன் குறித்து அவர் சீறினார்.

"சுமந்திரன் எங்களைத்தான் நோண்டியிருக்கின்றார். அந்த ஊடக நிகழ்வில் மட்டுமல்ல, முதல் நாள் கூட்டமைப்பின் மே தினத்திலும் இதனை அவர் பிரஸ்தாபித்தார். ஏன் ஒளிவு, மறைவு? அவர் ஊடகவியலாளர் சிவராம் படுகொலை விடயத்தை புளொட் மீது சுமத்தி, எங்களுடன் உரசிப் பார்க்க முயல்கின்றார். அவர் சட்டத்தரணிதானே? அதுவும் ஜனாதிபதி சட்டத்தரணி அல்லவா? அவருக்கு சட்டம் தெரியாதா? சிவராம் படுகொலை தொடர்பில் விசாரணை நடைபெற்றுவிட்டது. புளொட் உறுப்பினர் ஒருவர் மீதான குற்றச்சாட்டையும் நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது. பிறகும் ஏன் அவர் புளொட்டை இப்படிச் சீண்டுகின்றார்?

"முதலில் அவர் தமது கட்சியின் முதுகில் இருக்கும் புண்ணைப்பார்க்கவேண்டும்.'அவரது கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான அமிர்தலிங்கம் படுகொலை விடயத்தில் அவரது இப்போதைய கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவுக்குத் தொடர்பு உண்டு. கொலைக்கு முன்னரே மாவை சேனாதிராசா அதனை அறிந்திருந்தார், சம்பவம் நடைபெற்ற சமயம் அந்தக் கட்டடத்தில் இருந்த மாவை சேனாதிராசா அங்கு செல்வதைத் தவிர்த்து இருந்தார்' - என்றெல்லாம் அவ ரது கட்சியில் இருந்த முக்கிய பிரமுகர் ஒருவரே அப்பட்டமாகக் குற்றம் சுமத்தியிருந்தார். குற்றம் சுமத்தியவரும் சுடக் கொலை நடந்த சமயம் அப்பகுதியில் இருந்தார் என்று கூறப்படுகின்றது. இப்படிப் பகிரங்கமாக அவர் மாவை சேனாதிராசாவின் தொடர்பை அம்பலப்படுத்தியமைக்காக அந்தப் பிரமுகரை மாவை இலங்கைத் தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றினார். அதற்குச் சுமந்திரனும் ஒத்துழைத்தார்.

"அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் படுகொலைகளுடன், மாவையின் பெயர் அடிபடுகின்றது. அமிர்தலிங்கம் படுகொலையுண்டமையினால் ஏற்பட்ட தேசியப் பட்டியல் எம்.பி. நியமனத்தைப் பெற்றுக்கொண்டவரும் மாவைதான். இந்த விடயம் குறித்து அவரது கட்சியில் - அவருடன் அங்கு கூடவிருந்தவரே குற்றம் சுமத்தியிருக்கின்றார். இது குறித்து விசாரிக்க வேண்டும் என்று சுமந்திரன் வலியுறுத்துவாரா? வற்புறுத்துவாரா?

"திருகோணமலையில் எம்.பியாகவிருந்த தங்கத்துரை படுகொலை குறித்தும் பல விடயங்கள் பேசப்படுகின்றன. அந்தத் தேர்தலில் சம்பந்தரை வென்று தங்கத்துரை எம்.பியாகியிருந்தார். அவரை விலகித் தமக்கு இடமளிக்கவேண்டும் எனச் சம்பந்தன் வலியுறுத்தியும் தங்கத்துரை இணங்கவில்லை என்றும், அதையடுத்து தங்கத்துரை கொல்லப்பட சம்பந்தன் எம்.பியானார் என்றும், அந்தப் படுகொலைக்குப் பின்னணியிலும் பல சூட்சுமங்கள் பொதிந்து கிடக்கின்றன என்றும் கூறப்படுகின்றது.

"இது குறித்தும் புலன் விசாரணை நடத்தும்படி சுமந்திரன் கேட்பாரா?

"அவரைக் கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கொண்டு கல் எறிய வேண்டாம் என்று கூற விரும்புகின்றோம்.

"அவரும் முதல்வர் விக்னேஸ்வரனும் தமிழரின் விடுதலைப் போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பிய காலத்தில் இருந்து அது முடிவடையும் வரை இதனுடன் சம்பந்தப்பட்டவர்களே அல்லர். அதனால் இத்தகைய விடயங்களில் தங்களுக்கு ஒரு குற்றச்சாட்டும் இல்லை என்பதை தங்களின் விசேட தகுதியாக வைத்துக்கொண்டு மற்றவர்களை கொச்சைப்படுத்தும் வகையில் அவ்வப்போது கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

"தமிழரசுக் கட்சியினர் எங்கள் மீது வீணாகச் சேறு வாரி இறைக்கத் தொடங்கினால் அதன் விளைவுகளை அவர்கள் சந்திக்க வேண்டியிருக்கும். சம்பந்தர், மாவை போன்றோர் கூட காந்திய வாதிகளாக நடிக்க முடியாது. நாங்களும் உண்மைகளை அம்பலப்படுத்த வேண்டி வரும்."

- இப்படி சீறினார் அந்தப் புளொட் தூண்.

சும்மா கிடந்த சங்கை சுமந்திரன் ஊதிக் கெடுக்கிறார் என்று தான் எனக்குத் தோன்றுகின்றது.

உங்களுக்கு ...?

-மின்னல்-

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இராணுவ ஆக்கிரமிப்பின் பின்னால் புதைந்து கிடக்கும் ஆபத்துக்கள்!

இலங்கை இராணுவத்தின் செயற்போக்குக் குறித்து வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனும், முன்னாள் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் வெளியிட்ட கருத்துகள் நேற்றைய பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தன.

மிகவும் முக்கியமான – விரைந்து அவதானிக்கப்பட வேண்டிய – அதிக அவசரமான விடயத்தையே இருவரும் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை இனப் படுகொலைப் போக்கில் நடந்து கொண்டு, அதன் மூலம் முறியடித்த இலங்கை இராணுவம் இன்று உருத்திராட்சப் பூனை போன்று சாமியார் வேடம் பூணுகின்றது என்றே தமிழர்கள் கருதுகின்றார்கள்.

தனது இராணுவத்தை ஏவி, அதன் மனிதாபிமானமற்ற – கொடூர – இனவழிப்புச் செயற்பாடுகள் மூலமே தமிழர்களின் நியாயமான உரிமைப் போராட்டத்தில் ஆயுத முனையில் துவம்சம் செய்தது தென்னிலங்கை அரசு.

அந்த ஆயுதப் படைகளின் கொடூரங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுலைப் புறந்தள்ளி – தமிழர்களுக்கு – இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி செய்ய மறுத்து – இப்போது வேறு வழியில் 'பிராயச்சித்தம்' செய்ய முனைகிறது தென்னிலங்கை ஆட்சிப்பீடம்.

எந்த இராணுவம் தமிழ்த் தாயகத்தை அழித்ததோ, அந்த இராணுவத்தின் கொடூர ஆக்கிரமிப்பு தமிழர் தாயகத்தில் தொடர, அதே இராணுவத்தின் மூலம் இந்துக் கோயில்களை புனரமைத்தல், இரத்த தானம் செய்தல், தமிழர் தாயகத்தில் மக்கள் நலநோன்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தல் என்று நாடகம் நடத்துகின்றது அரசு.

ஆனால், உண்மையில் தமிழர் தாயகத்தில் இலங்கை இராணுவம் என்ன செய்கின்றது என்ற அதிர்ச்சித் தகவலை புள்ளி விவரங்களுடன் அம்பலப்படுத்துகின்றார் வடக்கு மாகாண முதல்வர் சி.வீ.விக்னேஸ்வரன்.

'சட்டக் கோட்பாட்டுக் கற்கைகளுக்கான தெற்காசிய மையம்' என்ற அமைப்பு இலங்கை இராணுவம் தமிழர் தாயகத்தில் செய்யும் 'பிஸ்னஸ்' விடயங்களைப் புட்டுப் புட்டு வைத்திருக்கின்றது. அதனை விலாவாரியாக அம்பலப்படுத்தியிருக்கின்றார் முதல்வர் விக்னேஸ்வரன்.

வடக்கில் தனியார் காணிகளுக்குப் புறம்பாக அரச காணிகள், அரச பண்ணைகள், பொதுக் கட்டடங்கள், காடுகள் போன்றவற்றைப் பிடித்து ஆக்கிரமித்து வைத்துக் கொண்டு, நமது தாயகத்தை இராணுவம் எவ்வாறு சூறையாடுகின்றது என்பதை முதல்வர் விக்னேஸ்வரன் அம்பலப்படுத்தியுள்ளார்.

காட்டு மரங்கள் தறிக்கப்பட்டு ஏற்றுமதியாகின்றன. கொழும்பு அனுமதிப் பத்திரங்களுடன் கருங்கற்கள் வெட்டி அகற்றப்படுகின்றன. நமது பாரம்பரிய மீனவர்களின் தொழிலிடங்கள் வல்வந்தமாகத் தென்னிலங்கை மீனவர்களுக்குத் தாரை வார்க்கப்படுகின்றன. 'ஏ9' வீதியின் இரு மருங்கிலும் பிரதான காணிகள், கடைகள் தென்னிலங்கையால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. உணவகங்கள், சுற்றுலா விடுதிகள், வரவேற்பு மண்டபங்கள், சிற்றுண்டிச் சாலைகள் போன்றவற்றை நடத்துதல், சுற்றுலாத்துறை வர்த்தகத்தை முன்னெடுத்தல், அரச விவசாய நிலங்கள், தோட்டங்கள், பண்ணைகள் போன்றவற்றை நடத்துதல், பறவைகள் சரணாலயத்தை இயக்குதல் என்று இலங்கையின் முப்படைகளும் தமிழர் தாயகத்தில் வணிக வேலைகளைத்தான் செய்து கொண்டிருக்கின்றன என்ற அதிர்ச்சித் தகவலை புட்டுப் புட்டு வைத்திருக்கின்றார் முதலமைச்சர்.

அதேசமயம் –

தமிழர் தாயகத்தில் தமிழரைக் கொன்றொழித்த இராணுவம் இங்கு அரசியல் பேசுவதிலிருந்தும் – அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்தும் – இன்னும் விலகவில்லை என்பதை அம்பலப்படுத்தியிருக்கின்றார் வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் ஐங்கரநேசன்.

இருளாட்சிக் காலத்தில் – 2015 ஜனவரி வரை – தமிழர் தாயகத்தில் நிலை கொண்டிருந்த படைகளின் அதிகாரிகளில் இருந்து ஆளுநர் வரை இங்கு அரசியல்தான் செய்தார்கள். கடந்த மாகாணசபைத் தேர்தலில் இராணுவத்தினரின் பரிந்துரையில் வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டமை வரை விடயங்கள் நடந்தன.

2015 ஜனவரி ஆட்சி மாற்றத்தின் பின்னர் இந்தப் போக்கில் மாற்றம் ஏற்படும் என எதிர்பார்த்தோம். ஆனால் இராணுவத்தைத் திருத்துவது 'நாய் வாலை நிமிர்த்துவது' போன்றது என்பதை ஐங்கரநேசனின் அறிக்கை தெளிவுபடுத்துகின்றது.

வடக்கில் தமிழ் அரசியல் கட்சிகள் குறித்து நையாண்டி தெரிவித்து கருத்து வெளியிடும் இராணுவ அதிகாரிகள், அதே விதமான கருத்துக்களைத் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் குறித்து மூச்சு விட முடியுமா எனக் கேட்க விரும்புகிறோம்.

இராணுவத்தினரின் இந்தப் போக்குக்குப் பின்னால் புதையுண்டு கிடக்கும் மாபெரும் மோசத்தை முதல்வர் அப்பட்டமாக எடுத்துரைத்து எச்சரிக்கின்றார். தமிழ் மக்களின் மனதைத் தவறான முறையில் திருப்பி, அதன் மூலம் தாங்கள் தமிழர் தாயகத்தில் என்றும் ஆக்கிரமிப்புப் படைகளாக நிலைத்திருக்கின்றமையை உறுதிப்படுத்த படைத்தரப்பு விரும்புகின்றது. அதற்குப் பின்னால் புதைந்து கிடக்கும் காரண, காரியங்களை – சூட்சுமங்களை – ஆபத்துக்களை – முதல்வர் தெளிவாக விவரிக்கின்றார்.

தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் தாங்கள்தான் என்று கூறிக் கொண்டு, தேசிய மட்டத்திலும், சர்வதேச ரீதியிலும் ஊடாட்டங்களை நடத்துவோருக்கு இந்த உள்சூக்குமங்கள் புரியாதா? முதல்வர் போல இந்த உள்விடயங்களை விவரமாக அம்பலப்படுத்தி, தமிழர் தாயகத்தைச் சூழ்ந்து வரும் போராபத்தை பகிரங்கப்படுத்த அவர்கள் பின் நிற்பதேன்? புரியவில்லை!

# 4 மணிநேர போராட்டத்தின் பின் அகற்றப்பட்டன குளவிகூடுகள்

பண்டாரிக்குளம் பாடசாலை வளாகத்தில் இருந்து



வவுனியா, மே 06

வவுனியா - பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரியில் பல மாதங்களாக ஆபத்தான முறையில் காணப்பட்ட குளவிக்கூடுகள் நேற்றுமுன்தினம் பாடசாலை வளாகத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளன.

இதற்கு பாடசாலை நிர்வாகத்தினர், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பண்டாரிக்குளம் சிவில் பாதுகாப்பு குழு, பண்டாரிக்குளம் கிராமசேவகர் ஆகியோரின் ஒத்துழைப்புக்கள் கிடைத்திருந்தன.

சுமார் 4 மணி நேர பலத்த போராட்டத்தின் பின் பாடசாலை வளாகத்திலிருந்து இந்த குளவிக்கூடுகள் அகற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

2000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் இந்தப் பாடசாலையில் அண்மைக்காலமாக ஆபத்தான குளவிகள் கூடு கட்டி வருவதாகவும், அதனை தம்மால் அழிக்க முடியாதுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் என்பனவற்றுக்குக் கடந்த ஒரு சில வாரங்களுக்கு முன்னர் பாடசாலை அதிபர் உத்தியோகபூர்வமாக தகவல் வழங்கியிருந்தார்.

இருப்பினும் அவர்கள் இது வரையிலும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமையினால் இவர்கள் அனைவரும் இணைந்து அகற்றியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# 4ஆவது அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் அமைச்சர்களில் பலர் கடும் அதிருப்தியில்!

கொழும்பு, மே 06

நல்லாட்சி அரசின் நான்காவது அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் பதவிகளைப் பெற்றுக் கொண்ட அமைச்சர்களில் பலர் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர் என்றும் அவர்கள் பதவியைக் கைவிடும் நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் அரசின் உட்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதிருப்தியடைந்துள்ள அமைச்சர்கள் சிலர் தமது அமைச்சு பதவியைக் கைவிட்டு அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகச் செயற்படுவது குறித்து கலந்துரையாடி வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 அமைச்சர்கள் பதவிகளில் இருந்து விலகி எதிர்க்கட்சி வரிசையில் அமரவுள்ளமையைச் சுட்டிக்காட்டி, நாடாளுமன்ற உறுப்பினர்களாக மாத்திரம் செயற்படுவதன் மூலம் அடுத்த தேர்தலில் மக்கள் மத்தியில் செல்ல அது வழியை ஏற்படுத்திக்கொடுக்கும் என அந்த அமைச்சர்கள் கருதுகின்றனர் என தெரியவந்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியுடன் தொடர்புடைய அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சர்கள் மத்தியில் இந்த அதிருப்தி காணப்படுகிறது என்றும் அவர்களில் சிலர் அமைச்சு பதவிகளைக் கைவிட்டு எதிரணியில் அமர்வது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதுடன் ஜனாதிபதியைச் சந்தித்து அனுமதியை பெற தீர்மானித்துள்ளனர் எனவும் பேசப்படுகிறது.

# இலங்கையில் நிலவும் வெப்பநிலை; நாட்டு மக்களுக்கு அவசர எச்சரிக்கை

கொழும்பு, மே 06

இலங்கையில் நிலவும் கடுமையான வெப்பநிலை தொடர்பில் நாட்டு மக்களுக்கு அவசர எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது அதிகமான வெப்பநிலை நிலவுவதால் நாளொன்றுக்கு 2 லீற்றர் நீர் அருந்த வேண்டும் என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் ஊட்டச்சத்து நிபுணர் ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நீர் அதிகமாக அருந்துவது கட்டாயமாகும். அத்துடன் நீர் அருந்தும் போது தேசிக்காய் அல்லது வெள்ளரிக்காய்களை நீரில் கலந்து பருகினாலும் நல்லது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெப்பமான காலநிலையின் போது அதிகமாக நீர் பருகவில்லை என்றால் தலை வலி, தலைச்சுற்று, உடல் வலி, நீர்ப்போக்கு போன்ற நோய்கள் தாக்கக் கூடும். எனவே இது தொடர்பில் அவதானமாக இருந்து அதிகமாக நீர் பருக வேண்டும். அத்துடன் இளநீர் போன்றவைகளையும் பருகலாம்.

அதேபோன்று, சிறு பிள்ளைகளுக்கு ஒரு நாளைக்கு ஒன்றரை லீற்றர் நீர் வழங்குங்கள். இந்த நாள்களில் அடிக்கடி குளிப்பதும் நல்லது.

அத்துடன், அதிக வெப்பமான காலநிலையின்போது பயணங்களில் ஈடுபட வேண்டாம். கூடியளவு குடைகளைப் பயன்படுத்த வேண்டும். தொப்பி மற்றும் வெள்ளை நிறத்திலான ஆடைகளைப் பயன்படுத்துங்கள்.

இந்த வெப்பம் உடலுக்கு ஏற்றதல்ல என்பதனால் சிந்தித்துச் செயற்படுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

(க)

# வடமராட்சியில் நேற்று இடியுடன்கூடிய மழை!

பருத்தித்துறை, மே 06

நேற்று முற்பகல் சுமார் 10.30 மணியளவில் வடமராட்சிப் பிரதேசத்தில் இடிமுழக்கத்துடன் ஒரு மணி நேரமாக கடும் மழை பெய்துள்ளது.

கடந்த மூன்று மாத காலமாக நிலவி வரும் கடும் வெப்பத்தில் சிக்கித் தவித்த மக்களுக்கு நேற்றுப் பெய்த மழை சற்று ஆறுதலைக் கொடுத்துள்ளது. அதனால் மக்கள் மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர்.

கடந்த ஓரிரு நாள்களாக கொழும்பு வானிலை அவதான நிலையம் வடக்கு கிழக்கில் இடியுடன்கூடிய மழை பெய்ய வாய்ப்பிருப்பதாகவும் மின்னல் தாக்கம் அதிகமாகக் காணப்படும் எனவும் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

அத்துடன், தற்போது அக்கினி நாள் காலமாகவிருந்த போதிலும் நேற்று ஒரு மணி நேரமாக கடும் மழை பெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாளை

07.04.2018
திங்கட்கிழமை
நட்சத்திரம்: திருவோணம் முழுவதும்
திதி: ஸப்தமி பிப 4.57 வரை
சுபநேரம்: 11.55 – 1.25 வரை
இராகுகாலம்: 7.25 – 8.55 வரை

# DISTRICT SECRETARIAT, JAFFNA
# INVITATION FOR BIDS

1. **The Chairman,Dept Procurement Committee, District Secretariat, Jaffna on behalf of the Government Agent / District Secretary, Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for the **works below in the schedule.**

2. Bidding will be conducted through National Competitive Bidding, however, limited to the bidders who registered within the administrative boundary of the Northern Province.

3. To be eligible for contract award, the successful bidder should not have been black listed and should be registered in the field of building construction at the Construction Industry Development Authority (CIDA), valid until the date of closing of the bids. Further, the registration should be valid at the date of award.

4. Interested bidders may obtain further information from the **Procurement Unit, District Secretariat, Jaffna** and inspect the Bidding Documents at the same address on any working day from **9.00 a.m to 3.00 p.m from 08.05.2018.**

Contact numbers are : phone – 021 222 2233, 021 222 2234 (Ext. – 140) Facsimile : 021 222 3674

5. A complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders on the submission of a written application to the **Procurement Unit, District Secretariat, Jaffna from 08.05.2018 until 22.05.2018 from, 9.00 a.m to 2.00 p.m** upon payment of a non- refundable fee as described in the schedule below.

6. Sealed bids shall be sent by registered post addressed to the **Chairman, Procurement Committee, District Secretariat, Jaffna** or deposited in the Tender Box available at the Procurement Unit, District Secretariat, Jaffna on or before **2.30 p.m on 23.05.2018.** Late bids will be rejected. Bidders should write the job description and bid No. on the top left hand corner of the envelope. Bids will be opened at **2.30 p.m at same day** in the presence of the bidders or bidders' representatives who choose to attend. Original and duplicate should be submitted separately.

7. Procurement Committee will keep the right to make final decision in regard to accept or reject Bids and it will be the final regarding the bids.

8. Bid shall be valid for a period of **90 days** from the last date fixed for receiving of Bids or any extended period & bid security should be valid for **120 days** from the bid opening.

9. Prebid meeting will be heldat District Secretary, Jaffnaon **14.05.2018 at 10.00 a.m**

10. The details of the bids are given below :


| Bid ID. | Description of work | Estimated Amount (million) (Excluding VAT) | Contract Period (month) | Minimum Grade of ICTAD (Building) | Bids Security (Rs.) | Non Refundable Fee (Rs.) |
|---|---|---|---|---|---|---|
| JF/PROC/JAF.ADM/5/01/2018 | CONSTRUCTION OF PUBLIC,COMMON TOILETS & INFILTRATION TANK AT DIVISIONAL SECRETARIAT, JAFFNA | 3.78 | 03 | C8 | 40,000 | 1,750 |
| JK/PROC/MRW/4/12/2018 | CONSTRUCTION OF GYM CENTER, ELECTRICAL WORKS &REPAIR WORK OF TOILET AT DISTRICT SECRETARIAT, JAFFNA | 1.33 | 02 | C9 | 15,000 | 1,000 |
| JF/PROC/MIN-TANK/5/02/2018 | IMPROVEMENT OFSWE SCHEME AT ARIYALAI IN NALLUR DS DIVISION | 7.23 | 03 | C7 | 75,000 | 2,750 |
| JF/PROC/MIN-TANK/5/03/2018 | IMPROVEMENT OF FLOOD PROTECTION BOND FROM MULLI TO MIRUSUVIL NORTH AT CHAVAKACHCHERI DS DIVISION | 7.23 | 03 | C7 | 75,000 | 2,750 |
| JF/PROC/MIN-TANK/5/04/2018 | IMPROVEMENT OF RAIN WATER HARVESTING SCHEME (KALLUNDAIKULAM BALANCE WORK)IN SANDILIPAY DS DIVISION | 2.56 | 03 | C8 | 27,500 | 1,250 |
| JK/PROC/MRW/4/14/2018 | CONSTRUCTION OF BOUNDARY WALL AT FEMALE QUARTERS ATDISTRICT SECRETARIAT, JAFFNA | 0.69 | 02 | C9 | 7,000 | 1,000 |

**Nagalingam Vethanayahan**
District Secretary,
District Secretariat, Jaffna

# காணாமற்போன ஜேம்ஸ் பீரிஸின் விருது அதி சொகுசு பஸ்ஸில் இருந்து மீட்பு!

கொழும்பு, மே 06

மறைந்த சிரேஷ்ட கலைஞர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் இறுதிக் கிரியைகளின் போது காணாமற்போயிருந்த இந்தியாவில் வழங்கப்பட்ட தங்கமயில் (ரண்மயூரா) என்றழைக்கப்படும் கௌரவ விருது நேற்றுக் காலை கொள்ளுப்பிட்டி - கடுவலை, 177ஆம் வீதி இலக்க அதி சொகுசு பஸ் ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.



ரண்மயூரா வாழ்நாள் விருது 2000 ஆம் ஆண்டு இயக்குநர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸுக்கு அவர் ஆற்றிய சேவையைப் பாராட்டும் வகையில் 31 ஆவது சர்வதேச இந்திய சினிமா விருது வழங்கும் விழாவின்போது வழங்கப்பட்டது. இந்த விருது அன்னாரின் இறுதிக்கிரியைகளின்போது பூதவுடலுக்கு அருகில் வைக்கப்பட்டிருந்தபோதே திருடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.இந்த நிலையில் பொலிஸாரால் தீவிரமாக தேடப்பட்டு வந்த இந்த விருது நேற்று மீட்கப்பட்டுள்ளது.

# பங்களாதேஷில் நடக்கும் கல்வி சம்மேளனத்திற்கு 160 மாணவர்கள் தெரிவு

கொழும்பு, மே 06

பங்களாதேஷில் நடைபெறும் 21 ஆவது சர்வதேச மாணவர் கல்வித்தர வட்ட சம்மேளனத்தில் கலந்துகொள்ள அகில இலங்கையிலிருந்து 160 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

டாக்கா - டெபோடில் பல்கலையில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகிய மேற்படி சம்மேளனம் இன்று ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும்.

அகில இலங்கை ரீதியாக 160 மாணவர்கள் இதில் கலந்து கொண்டுள்ளனர். இதில் சப்ரகமுவ மாகாணத்திலிருந்து 120 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 20 ஆவது சர்வதேச மாணவர் கல்வித்தர வட்ட சம்மேளனம் எம்பிலிப்பிட்டியவில் நடைபெற்றது. இதில் சப்ரகமுவ மாகாண மாணவர்கள் அதிகமானோர் திறமையை வெளிக்காட்டியமையால் அதிகமான மாணவர்கள் இம்மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என சப்ரகமுவ மாகாண கல்வி செயலாளர் மஹிந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.


இலங்கை, இந்தியா, இங்கிலாந்து, சீனா, மலேசியா, ஜப்பான், பல்கேரியா உட்பட 15 நாடுகளை சேர்ந்த மாணவர்கள் இதில் கலந்து கொள்கின்றமையுடன் இலங்கை மாணவர் அணிக்கு சப்ரகமுவ மாகாண கல்வி செயலாளர் மஹிந்த வீரசூரிய தலைமை தாங்குவார். அதிபர்கள், அதிகாரிகள் 10 பேரும் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

# சிங்கப்பூருடனான வர்த்தக உடன்பாடு இலங்கைக்கே கூடுதலான நன்மை!

## மலிக் சமரவிக்கிரம கூறுகிறார்

கொழும்பு, மே 06

சிங்கப்பூருடனான புதிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இலங்கைக்கு கூடுதலான வருமானத்தையும் தொழில் வாய்ப்புகளையும் ஏற்படுத்தும் என மூலோபாய அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.



உலக வர்த்தக மையத்தில் உள்ள அமைச்சின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது நாட்டின் தொழில்வாண்மையாளர்கள் உட்பட கூடுதலானோருக்குத் தொழில் வாய்ப்புகளை இந்த உடன்படிக்கை ஏற்படுத்தும்.

இந்தப் புதிய உடன்படிக்கையின் மூலம் சிங்கப்பூர் பிரஜைகள் சுதந்திரமாக இலங்கையில் தொழில்வாய்ப்புக்களைப் பெற முடியும் என்ற குற்றச்சாட்டு ஓர் அப்பட்டமான பொய் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

காலைக்கதிர்



# அபிவிருத்தியின் நன்மைகளை துரிதமாக மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதே இலக்கு!



## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே 06

அரசு ஆரம்பித்துள்ள அபிவிருத்தி திட்டங்களின் நன்மைகள் விரைவில் மக்களைச் சென்றடையும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை தெரிவித்தார்.

மில்லனிய பிரதேச செயலகத்தின் புதிய அரங்கக் கட்டடத்தொகுதியை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசு ஆரம்பித்துள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளன.

அபிவிருத்தியின் நன்மைகளை துரிதமாக மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வது இலக்காகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## தொழிற்படையில் வளர்ச்சி!

கொழும்பு, மே. 06

இலங்கையின் தொழிற்படையில் வளர்ச்சி காணப்படுகிறது என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், கடந்த ஆண்டு தொழிற்படை 3 சத வீதத்துக்கு மேலான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக முன்னெடுக்கப்பட்ட பொருளாதார கொள்கைகளின் பிரதிபலன்களாக, 2016ஆம் ஆண்டு இலங்கையின் தொழிற்படை 83 லட்சத்தை தாண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது 2017ஆம் ஆண்டு 85 லட்சத்தைத் தாண்டியதாக மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மாணிக்க கற்களை கொள்ளையிட்ட மூவர் கைது!

180 லட்சம் பெறுமதியான மாணிக்க கற்களை கொள்ளையிட்ட மூவர் பேருவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நபர்கள் பேருவளை - சபுகொட - விகாரை வீதியில் மோட்டார் சைக்களில் பயணித்த நபரை தடுத்து நிறுத்தி, துப்பாக்கியை காட்டி அச்சுறுத்தி இந்த மாணிக்க கற்களைக் கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நபர்கள் 24, 31 மற்றும் 35 வயதான எம்பிலி பிட்டிய மற்றும் அனு ராதபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை பேருவளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

## ஜனாதிபதி தலைமையில் அரச நடன விருது விழா

கொழும்பு, மே 06

2018 அரச நடன விருது விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் கொழும்பு தாமரைத் தடாக கலையரங்கில் நடைபெற்றது.

உயர் கல்வி கலாசார அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இந்த விருது விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் நடனக் கலைக்காக பங்களிப்பு செய்த கலைஞர்கள் பாராட்டப்பட்டனர்.



'நர்த்தன திலக' வாழ்நாள் விருது பிரபல நடனக் கலைஞர் எஸ்.பி.கவிசேன மற்றும் பிரபல நடனக் கலைஞர் வசந்தி குஞ்சிதபாதம் ஆகியோருக்கு ஜனாதிபதியினால் வழங்கப்பட்டது.

அமைச்சர்களான விஜேதாச ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் மொஹான் லால் கிரேரோ, பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவித்தான, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அனுஷா கோகுல, அரச நடன ஆலோசனை சபையின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் ஆரியரத்ன களுவாரச்சி ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## ஹெரோயினுடன் யுவதி கைது!

கொழும்பு, மே 06

களனி - பேதியாகொட பிரதேசத்தில் ஹெரோயினுடன் யுவதியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேதியாகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர் .23 வயதான யுவதியே கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## சாயி நிலையத்தில் ஈஸ்வரம்மா தின விழா இன்று

யாழ்ப்பாணம், மே.06

யாழ். திருநெல்வேலி சேர். பொன். இராமநாதன் வீதி, சத்திய சாயி சேவா நிலையத்தில், இன்று ஞாயிற்றுக்கிழமை காலை தெய்வீக அன்னை ஈஸ்வரம்மா தின விழா இடம்பெறும்.

காலை 8.45 மணிக்கு வழமையான நிகழ்வுகளுடன் ஆரம்பமாகி பாலவிகாஸ் மாணவர்களின் 'விநாயகர் ஸ்துதி' நடனம், நாடகம் போன்றவை இடம்பெறம்.

முற்பகல் 11.40 மணிக்கு சிறப்புரையை யாழ். பல்கலைக்கழக உளவளத் துணையாளர் திருமதி சாவித்திரி ரவிச்சந்திரன் ஆற்றுவார். 12.30 மணிக்கு மதிய போசனத்துடன் நிகழ்வுகள்நிறைவுறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர் சாயி நிலையத்தினர். (இ)

## சர்வதேச இறப்பர் மாநாடு கொழும்பில்!

கொழும்பு, மே 06

சர்வதேச இறப்பர் மாநாடு World Rubber Summit இம்மாதம் 7ஆம், 8ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் நவீன் திசாநாயக்கவின் வழிகாட்டல் மற்றும் அமைச்சரின் தலைமையில் சர்வதேச இறப்பர் அய்வுக் குழுவின் The International Rubber Study Group (IRSG) மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 2018 இறப்பர் மாநாடு 'தடைகன்ள முறியடித்து நிலையான அபிவிருத்தியை நோக்கி' என்ற தலைப்பில் இம்முறை முதல் முறையாக இலங்கையில் நடைபெறவுள்ளது.

பெருந்தோட்டத்துறை அமைச்சின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாட்டில் 36 அங்கத்துவ நாடுகளின் பங்களிப்புடன் எதிர்வரும் 7ஆம் திகதி கொழும்பு தாஜ் சமூத்திரா ஹோட்டலில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.




இறப்பர் தொழிற்றுறையுடன் தொடர்புபட்ட இறப்பர் உற்பத்தி நாடுகள் விற்பனையாளர்கள் விநி யோகஸ்தவர்கள் இரசாயன துறையைச்சார்ந்தோர் தயாரிப்பாளர்கள் தனியார் துறையி- னர், அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளை பிரதிநிதித்துவப் படுத்தி பலர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

தெற்காசியாவில் முக்கிய கேந்திர நிலையமாக இலங்கை வளர்ச்சியடைந்து வரும் நிலையில், இந்த மாநாடு இலங்கையில் நடைபெறுவது மாத்திரமின்றி உலகின் இறப்பர் துறையில் இறப்பர் கேந்திர நிலையமாக இலங்கை எதிர்காலத்தில் திகழும் என்பதனால் இந்த மகாநாடு சர் வதேச ரீதியில் முக்கியத்து வம் பெற்றுள்ளது என்று பெருந்தோட்டத்துறை அமைச்சின் ஆலோசகர் லக்ன பரணவிதான தெரிவித்துள்ளார்.

## மரக்கறி பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் பிரச்சினைகளில் அதிக கவனம்

கொழும்பு, மே 06

மரக்கறி பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்ப்பதில் விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர் சரத் அமுனுகம கூடுதல் கவனம் செலுத்தியுள்ளார்.

பொலன்னறுவை, அனுராதபுரம் மற்றும் தம்புள்ளை ஆகிய பிரதேசங்களில் மரக்கறி பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை உடனடியாக தீர்த்துவைக்க அமைச்சர் அமுனுகம நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன் அடிப்படையில், விவசாயிகளின் விளைச்சலுக்கு உத்தரவாத விலையில் பொருள்களை கீல்ஸ் மற்றும் கார்கில்ஸ் பூட்சிற்றி நிறு வனங்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விற்பனை தொடர்பில் உள்ள சிக்கல்களையும் தீர்த்து வைக்க அமைச்சர் அமுனுகம தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் விசேட பேச்சு ஒன்று இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க)

## கண்டி – குடிதண்ணீர் வழங்குவதற்கான திட்டங்களை விரிவுபடுத்த நடவடிக்கை

கண்டி மாவட்டத்தில் குடிதண்ணீர் வழங்குவதற்கான திட்டங்களை விரிவுபடுத்தும் நோக்கில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உயரதிகாரிகளுடன் நகரத்திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கலந்துரையாடினார்.



கெட்டம்பே அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற இந்த கலந்துரையாடல் கண்டி மாவட்டத்திலுள்ள குண்டசாலை ஹாரகம, மரஸன்ன, கலகெதர, பூஜாப்பிட்டிய, அக்குறணை, பொல்கொல்ல, யட்டிநுவர பன்வில, உடுநுவர, தெல்தோட்டை, கினிகத்தென்ன போன்ற பிரதேசங்களுக்கு சீராக குடிதண்ணீர் வழங்குவதற்கான திட்டங்களை விரைவுபடுத்தும் நோக்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மத்திய மாகாண சபை உறுப்பினர் சாந்தினி கோங்கஹகே, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவர் கே.ஏ. அன்சார், பிரதித்தலைவர் எம்.எச்.எம். சல்மான், பொது முகாமையாளர் தீப்தி சுமணசேகர, கண்டி மாவட்ட பொது முகாமையாளர் மீகொட, அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் எம். நயீமுல்லாஹ், உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்துகொண்டனர். (க)

காலைக்கதிர் Kalaikkathir



# மாகாண சபையை பொறுப்பெடுத்து அர்த்தமுள்ள நிர்வாகமாகச் செயற்படுத்த விரும்புகின்றேன்

கொழும்பு, மே 06

மாகாணசபையை பொறுப்பெடுத்து அதை அர்த்தமுள்ள நிர்வாகமாக செயற்படுத்த விரும்புகின்றேன் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: –

ஆரம்பகாலங்களில் புலிகள் இந்த சபை முறைமையை நிராகரித்திருந்தார்கள். இது அவர்களுடைய அரசியல் நிலைப்பாடாகும்.

அதன்பின்னர் நெருக்கடிகள் நிறைந்த சந்தர்ப்பத்திலும் அதைப் பொறுப்பேற்று நிர்வாகம் செய்தவர்கள் அதனை சரியாக நிர்வகிக்காததன் விளைவாக அது செயலற்றுக் கிடந்தது.

இக்காரணங்களால் தமிழ் மக்களது பெரும் தியாகங்களுக்கு மத்தியில்



டக்ளஸ் எம். பி தெரிவிப்பு

கிடைக்கப் பெற்ற இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பலாபலன்களையும் மாகாண சபையின் நன்மைகளையும் இறுதி இலக்கை நோக்கி பயணிக்கும் வாய்ப்பை தமிழ் மக்கள் இழந்திருந்தனர்.

நெருக்கடியற்ற ஒரு சூழ்நிலையில் அந்த வாய்ப்பு மீண்டும் தமிழ் மக்களை நோக்கி வந்தபோது சந்திரனை கொண்டுவந்து அருகில் தருவோம், நட்சத்திரங்களை உடைத்து தருவோம் என உணர்ச்சிப் பேச்சுக்களை பேசி அதிகாரங்களை பெற்றவர்கள் கிடைக்கப்பெற்ற அரிய வாய்ப்பையும் சரியாக நிர்வகிக்கவில்லை.

அவர்கள் குற்றச்சாட்டுக்களையும் குறைகளையும் முன்வைப்பதனூடாக தமது இயலாமையை வெளிப்படுத்துகிறார்களே தவிர மாகாணசபையின் உச்ச பலாபலன்களை தமிழ் மக்கள் பெற்றுக் கொள்வதற்காக அர்த்தமுள்ள முயற்சிகளையோ அல்லது விருப்பமுடனோ அவர்கள் செயற்படவில்லை.

இவ்வாறு முடங்கிக் கிடக்கும் மாகாண சபை முறைமையை மீண்டும் திறம்பட செயற்படுவதற்கு மீண்டும் தமிழ் மக்களுக்கு ஒரு வாய்ப்பு வெகு விரைவில் வரவுள்ளது. அதை தமிழ் மக்கள் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

நடைபெறவுள்ள மாகாணசபை தேர்தலில் மக்களோடு வாழ்ந்து மக்களுக்கான சேவைகளைச் செய்தவர்கள் என்ற அடிப்படையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கரங்களுக்கு வடக்கு மாகாணசபை கிடைக்கப்பெறுமாக இருந்தால் நான் ஏற்கனவே கூறியதுபோல எமது தாயக பிரதேசத்தை வளம் கொழிக்கும் பூமியாக மாற்றியமைப்பதுடன் எமது மக்களது பொருளாதார வறுமைகளை இல்லாதொழித்து தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு இறுதித் தீர்வை அடையும் திசை நோக்கி வழி நடத்துவேன் என்ற நம்பிக்கையும் அதற்கான உழைப்பும் உள்ளார்ந்த விருப்பும் எம்மிடம் உள்ளது.

இந்த அடிப்படையிலேயே நடைபெறவுள்ள வடக்கு மாகாணசபை தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று விரும்புகின்றேன். நான் மக்களை விட்டு ஓடியதும் இல்லை. ஓடப் போவதும் இல்லை. குறை கூறிக்கொண்டு இருக்கவும் போவதில்லை.

மாகாணத்தில் அதிகாரங்கள் குவிந்து கிடக்கும்போது மத்திய அரசுகளை எவ்வாறு கையாளவேண்டும் என்ற நீண்ட நாள் அனுபவம் எனக்குண்டு.

இதற்கிணங்கவே ஈ.பி.டி. பியின் வெற்றி மக்களின் வெற்றி மக்களின் வெற்றி ஈ.பி.டி.பியின் வெற்றி என்று கடந்த தேர்தலில் நான் கூறியிருக்கின்றேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நீரில் மூழ்கி மாணவர் பலி !

காலி, மே 06

அக்குரெஸ்ஸ - அதுரலிய - கதனா வல கங்கையில் நீரில் மூழ்கி பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அத்துரலிய கல்லூரியில் கல்வி கற்ற 16 வயதுடைய மாணவரே நண்பர்களுடன் கங்கைக்கு நீராடச் சென்றிருந்தபோது நீரில் மூழ்கி காணாமற்போயுள்ள நிலையில், அந்தப் பிரதேச மக்கள் முன்னெடுத்த தேடுதல் நடவடிக்கையின் பின்னர் மாணவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஆளுநரால் நியமனங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், மே 06

வட மாகாண ஆளுநரால் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 23 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் குரே அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றுள்ளது. இதன் போது முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கே நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.



## அல்லைப்பிட்டி பராசக்தியில் உயர்தரத்தில் கலைப் பிரிவு

### அயற் பாடசாலை மாணவரும் இணையலாம்

யாழ்ப்பாணம், மே 06

யாழ். அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் முதன் முதலாக ஆரம்பமாகும் க.பொ.த உயர்தர கலைப்பிரிவில், மாணவர்கள் இணைந்து கொள்ள முடியும் என அதிபர் கே.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அதிபரின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:–

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளதற்கு அமைய எமது பாடசாலையில் 2017 ஆம் ஆண்டில் க.பொ.த (சாதாரண) பரீட்சையில் தோற்றி க.பொ.த. (உயர்தரம்) கற்கத் தகுதியுடைய மாணவர்களையும் ஏனைய அயற் பாடசாலைகளில் சித்தி பெற்று உயர்தரத்தில் கலைப் பிரிவில் கல்வி கற்கவுள்ள மாணவர்களையும் இணைத்து கலைப்பிரிவை 2018 ஆம் ஆண்டில் முதன்முதலாக ஆரம்பித்து செயற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முன்பதிவு செய்த மாணவர்கள் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூரணப்படுத்திச் சமர்ப்பிக்குமாறும் புதிய பதிவுகளை மேற்கொள்ள விரும்புவோர் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்திச் சான்றிதழ்களுடன் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்.– என்றுள்ளது.

## நாட்டின் சில பகுதிகளில் இன்றும் கடும் வெப்பம்!

கொழும்பு, மே 06

நாட்டின் சில பகுதிகளில் இன்றும் அதிக வெப்பநிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்கு, வட மத்திய, கிழக்கு மாகாணங்களிலும், குருநாகல், கம்பஹா, மாத்தளை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களிலும் இந்த வெப்பநிலை நிலவும் எனவும் திணைக்களம் அறிவித்துள்ளது.

## 20ஆவது திருத்தச் சட்டத்தை மு.காங்கிரஸ் ஆதரிக்காது!



கொழும்பு, மே 06

நிறைவேற்று அத்திகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை மாத்திரம் ஒழிக்கும் வகையில் கொண்டு வரப்படும் 20 ஆவது அரமைப்பு திருத்தச் சட்டத்தை, கட்சி என்ற வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கின்றது என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கண்டிக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த அவர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டிற்கு புதிய அரமைப்புச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்ற நிலைப்பாடுகள் இருந்து வரும் நிலையில், நிறைவேற்று அதிகாரத்தை மாத்திரம் ஒழிக்கும் வகையில் திருத்தச் சட்டத்தை கொண்டு வருவது ஏற்புடையதல்ல.

நாட்டின் தேசியப் பிரச்சினை உட்பட முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையிலான முனைப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குடிதண்ணீர் கட்டணங்கள் எதிர்காலத்தில் அதிகரிக்கப்படும் எனவும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

## திருமலை மாதிரிக் கிராமங்கள் நேற்றுமுன்தினம் கையளிப்பு

கொழும்பு, மே 06

திருகோணமலை மாவட்டத்தின கோமரங்கடவெல கல்யாணபுர பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட பொகுனுகம, ரன்சிரிகம ஆகிய மாதிரிக் கிராமங்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டன.

மாதிரிக்கிராமத்திலுள்ள 49 வீடுகளை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அமைச்சர் சஜித் பிரேமதாச உரையாற்றுகையில்-

எமது நோக்கம் மக்கள் சேவையை எவ்வித வேறுபாடின்றி அனைவருக்கும் நன்மை பயக்கும் வகையில் செய்வதாகும்.

வீடற்றவர்களுக்கு வீடு வழங்குவது தொடர்ச்சியாக நடைபெறும்.



தற்போது 706 மாதிரிக்கிராமங்களின் வேலை ஆரம்பித்துள்ளது. தமது எதிர்பார்ப்பு 2500 மாதிரிக் கிராமங்களின் வேலைகளை அடுத்த வருடம் நிறைவு பெறுவதற்குள் ஆரம்பிப்பதாகும் என்று குறிப்பிட்டார்.

## மின் தடை

யாழ்ப்பாணம், மே 06

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக –

**இன்று மேலதிகத் தடை -**

ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு மேலதிகமாக இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி வரை 5 மணி வரை –

**யாழ். பிரதேசத்தில்** –உடயகதிர்காமம், வல்லிபுரம், வல் லிபுரம் நீர்ப்பாசனம் ஆகிய இடங்களிலும் –

**நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை –**

**மன்னார் பிரதேசத்தில் -**

முருங்கனிலிருந்து சிலாவத்துறை வரை, முள்ளிக்குளம், அரிப்பு, நானாட்டான் நகரம், அச்சங்குளம், நொச்சிக்குளம், மயிலங்கேணி, முருங்கன்பிட்டி, ஆத்திக்குளி, செம்மண்தீவு நெற்களஞ்சியம், சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம், டொன் பொஸ்கோ, தலைமன்னார் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

06.05.2018 - 12.05.2018

சந்திராஷ்டம நாள் - மிருகசீரிடம் 3ஆம், 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

2018 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 23 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஷஷ்டித் மாலை 3.55 மணி வரை பின்னர் ஸப்தமி. நட்சத்திரம். உத்தராடம். பி.இ 4.39 மணி வரை. பின்னர் திருவோணம். அமிர்தயோகம் முழுவதும்.

ராகுகாலம் - மாலை 4.47 மணி முதல் 6.20 மணி வரை

சுபநேரம் - காலை 8.54 மணி முதல் 10.22 மணி வரை இன்று

திவசம் செய்ய வேண்டிய திதி - சித்திரை மாத தேய்பிறை ஷஷ்டி.

பிறந்த நட்சத்திர வழிபாடு - உத்தராடம்.

கணிப்பு: 'ஜோதிடமணி' பிரம்ம ஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)



## மேஷம்:

சமபலன்கள் உள்ள வாரம். பொருளாதாரம் சுமாராக இருக்கும். குடும்பத்தில் கலகலப்புடன் சலசலப்பும் கலந்து காணப்படும். குடும்ப நிர்வாகத்தில் பெண்களுக்கு பொருளாதாரப் பிரச்சினை தலை காட்டும். அக்கம் பக்கத்தினருடன் அளவாகப் பேசி நிறுத்திக் கொள்வது நல்லது. உடல் நலத்திலும் அக்கறை செலுத்த வேண்டியது அவசியம். தொழில், வியாபாரம் ஏற்ற இறக்கமாக இருந்து வரும். மாணவர்கள் சோர்வுக்கு இடம் தராமல் கல்வியில் ஊக்கம் கொள்ள வேண்டும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.



## ரிஷபம்:

யோகமான வாரம். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் நிம்மதியான சூழ்நிலை நிலவி வரும். வேலையின் நிமித்தம் வெளியூர்ப் பயணம் ஏற்படும். தனியார் நிறுவனத்தில் பணிபுரிவோர் சம்பள உயர்வு போன்ற சலுகைகள் பெற்று மகிழ்வார்கள். சொந்த வீடு இல்லாது இருந்த சிலர் சொந்த வீடு, அரச குடியிருப்பு போன்ற வசதிகளைப் பெற்று மகிழ்வார்கள். செய்து வரும் தொழில் நாளுக்கு நாள் நல்ல முறையில் வளர்ச்சியைக் காணும். வாகனம் வாங்கும் யோகம் உண்டு. பெண்கள் விரும்பிய மண வாழ்க்கையைப் பெறுவார்கள்.



## மிதுனம்:

அலைச்சல் மிகுந்த வாரம். பொருளாதார நெருக்கடியில் கடன் வாங்க அலைவார்கள். சிலர் உடல் நலக் குறைவால் மருத்துவ உதவியை நாடுவார்கள். சிலர் தொழில் இடமாற்றத்தால் குடியிருக்க வாடகைக்கு வீடு தேடி அலைவார்கள். சிலர் கொடுத்த கடனை மீளப் பெறுவதற்கு அலைந்து திரிவார்கள். பெற்றோர் சிலர் தம் பிள்ளைகளை ஆரம்பப் பள்ளியில் சேர்ப்பதற்கு அலைவார்கள். தொழிலாளர்கள் தொழில் வாய்ப்புக்களைத் தேடி அலைவார்கள். கலைஞர்கள் வெளியூர்ப்பட வாய்ப்புக்களைத் தேடித் திரிவார்கள்.



## கடகம்:

மத்திம பலன்கள் காணப்படுகின்றன. எதிலும் ஏற்றமும், இறக்கமும் கூடிய நிலையே காணப்படும் தொழில் வியாபாரம் போன்ற எதுவாயினும் பெரும் ஆதாயங்களை எதிர்பார்க்க முடியாது. குடும்ப நிலையிலும் நிம்மதி குறைந்து காணப்படலாம். சுப நிகழ்ச்சி தொடர்பான முயற்சிகளில் தடங்கலுக்குப் பிறகு வெற்றி கைகூடும். பெரும்பாலும் கவலை அதிகமாகவும் களிப்பு குறைவாகவும் காணப்படும். உத்தியோகத்தர்கள் பணியில் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு வருவது அவசியம்.



## சிம்மம்:

உயர்வான வாரம். பொருளாதாரம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். உத்தியோகத்தர்கள் அலுவலகம் தொடர்பான விடயங்களில் திருப்தியைக் காண்பார்கள். இடமாற்றம், பதவி உயர்வு, ஊதிய உயர்வு என்பன பெற்று மகிழ்வார்கள். சகோதர உறவு பலப்படும். அலுவலகத்தில் இவர்களின் செல்வாக்கு நாளுக்கு நாள் வளர்ந்து வரும். சொந்த வீடு வாங்க வேண்டும் என்ற நீண்ட காலத் திட்டம் செயல் வடிவம் பெறும். இதுவரை வேலை தேடித் திரிந்தவர்களுக்கு வேலை கிடைக்கும்.



## கன்னி:

மகிழ்ச்சியான வாரம். பொருளாதாரம் வளமடையும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு முழு நிறைவைப் பெறக் கூடிய வகையில் லாபம் கணிசமான அளவுக்கு உயரும்.மாணவர்களுக்கு வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி பயிலும் வாய்ப்பைப் பெறக் கூடிய நிலை உண்டாகும். சகோதர வழியால் பல நன்மைகள் உண்டாகும். பெண்களுக்கு ஆடை, ஆபரணங்கள் சேர்க்கை உண்டாகும். வேலை தேடுவோருக்கு திறமைக்கு ஏற்ற வேலை கிடைக்கும்.



## துலாம்:

சஞ்சலமான வாரம். பணம் பற்றாக்குறையாக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். குடும்பத்தில் குழப்ப நிலை காணப்படும். உத்தியோகத்தில் கவனக் குறைவால் அதிகாரிகளின் கெடுபிடிக்கு ஆளாக நேரும். சுய தொழில் ஆதாயம் குறையும். வசதியற்ற இடமாற்றமும், வேலைப் பளுவும் அதிகமாக இருக்கும். உடல் நலத்திலும் கவனம் செலுத்துவது அவசியம். செய்தொழிலில் முன்னேற்றம் குறையும். வருமானத்தில் எதிர்பார்த்த நிறைவு கிடைக்கக் கடினம் என்பதால் சிக்கனம் தேவை.



## விருச்சிகம்:

சமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் காணப்படும். உத்தியோகத்தர்கள் பணிகளில் கவனம் எடுக்க வேண்டும். வியாபாரிகளுக்கு எதிரிகள் போட்டியாக இயங்குவதால் வருமானம் குறையும். மாணவர்களுக்கு எதிர்பார்த்த கல்விப் பிரிவில் இடம் கிடைக்காத நிலை சிலருக்கு ஏற்படக் கூடும். பிறர் விஷயங்களில் தலையிட வேண்டாம். பிள்ளைகளால் கலக்கம் ஏற்பட்டு பின் நிவர்த்தியாகும். பெண்கள் எதிலும் நிதானத்துடன் இருக்க வேண்டும்.



## தனுசு:

இன்பமான வாரம். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். எண்ணங்கள் யாவும் நிறைவேறும். ஆடை, ஆபரணங்கள் சேரும். பெண்களுக்கு மண வாழ்க்கை கனிந்து வரும். பிரிந்திருந்த குடும்பத்தவர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள். நண்பர்கள், உறவினர்களின் அனுசரணை கிடைக்கும். வியாபாரம் அபரிதமான வளர்ச்சி அடையும். உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் நிறைவேறும். கொடுக்கல் வாங்கலில் இணக்கநிலை காணப்படும்.



## மகரம்:

அதிர்ஷ்டமான வாரம். தனலாபம் அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்கள் சிலருக்குக் கிடைக்கும். சிலருக்கு அரச சலுகையால் வீடு, தோட்டம் என்பன கிடைக்கும். அரசியல் வாதிகளுக்கு கௌரவப் பதவிகள் தேடி வரும். சகோதர உறவு வலுவடையும். விட்டுப் பிரிந்த உறவுகள் வலிய தேடி வருவார்கள். இவர்களின் பெரும்பாலான விருப்பங்கள் நிறைவேற்றப்பட்டு மகிழ்வார்கள். உறவினர்கள், நண்பர்கள் பக்க பலமாக இருப்பார்கள்.



## கும்பம்:

யோசனையான வாரம். வருமானம் குறைவடையும். குடும்பத்தில் சிறுசிறு உட்பூசல்கள் உண்டாகும். மன நிம்மதி கெடும். குடும்பச் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் கடன்பட நேரும். தொழில் வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் மனக் கசப்பு நேரலாம்.உடல் நலத்தில் அக்கறை செலுத்த நேரும். வெளியூர்ப் பயணத்தின்போது தகுந்த துணையுடன் பாதுகாப்பாகச் சென்று வருவது நல்லது. வாக்குறுதி கொடுப்பதால் அவப்பெயர் ஏற்படக் கூடிய நிலை உண்டாகும்.



## மீனம்:

கீர்த்தியான வாரம். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவில் பாசமும், நேசமும் கலந்து இருக்கும். சமூகத்தில் செல்வாக்கு மதிப்பு உயரும். புதிய சொத்துக்கள் அமையும் வாய்ப்பு உருவாகும். குடும்பத்தினரின் தேவைகளை நல்ல முறையில் நிறைவேற்றி அவர்களைத் திருப்திப்படுத்துவார்கள். நல்லவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைப்பதன் மூலம் இவர்களுக்கு நன்மைகள் கிடைக்க இடமுண்டு. சிலருக்கு வெளிநாட்டுப் பயணங்கள் அமையக் கூடும். திருமண யோகம் கிட்டும்.

# 'அக்கினி' நட்சத்திரம்:


# வெயில் அகோரம்! உச்சம், அதி உச்சம்!!

தமிழகத்தில் இந்த ஆண்டு கோடைக் காலம் தொடங்குவதற்கு முன்னரே வெயில் சுட்டெரிக்க ஆரம்பித்துவிட்டது. ஏப்ரல் மாதத் தொடக்கத்திலேயே பல மாவட்டங்களில் வெயில் சதமடித்தது. இப்போது அனல்காற்றும் சேர்ந்து வாட்டி எடுக்கிறது. இரவு நேரங்களில்கூட வெப்பம் குறையாமல் இம்சைப்படுத்துகிறது.



இந்த நிலையில், 'அக்னி நட்சத்திரம்' எனப்படும் கத்திரி வெயில் கடந்த வெள்ளி தொடங்கி 28 ஆம் திகதி வரை நீடிக்கிறது. ஏற்கெனவே வெயில் சுட்டெரித்துவரும் நிலையில், அக்னி நட்சத்திரத்தை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்பதுதான் இப்போது பெரும்பாலானவர்களின் அச்சம். தாங்க முடியாத அளவுக்கு சுட்டெரிக்கும் வெயில் ஒரு பக்கம் மற்றொரு பக்கம், இந்த கத்திரி வெயிலில் வியர்க்குரு தொடங்கி அம்மைநோய் வரை சரும வறட்சி மாதிரியான பாதிப்புகளும் சேர்ந்துகொண்டு அச்சுறுத்த ஆரம்பித்திருக்கின்றன. இவற்றை எப்படி எதிர்கொள்வது?

"சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டால் இந்தப் பிரச்சி



னைகளிலிருந்து தப்பிக்கலாம்" என்கிறார் தோல்நோய் மருத்துவர் ரதா. மேலும், கோடை வெயிலில் ஏற்படும் நோய்கள் குறித்தும், அவற்றைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் விவரிக்கிறார்.

### வியர்க்குரு

வெயில் காலத்தில் அதிகம்பேரை பாதிக்கும் முக்கியமான பிரச்சினை வியர்க்குரு. உடலில் வியர்வை தங்குவ



தால்தான் வியர்க்குரு ஏற்படுகிறது. இதைத் தடுக்க, தினமும் இரண்டு வேளை குளிப்பதும், வெயிலில் சென்று வீட்டுக்குத் திரும்பியவுடன் கை, கால்களைக் குளிர்ந்த நீரில் கழுவுவதும் வியர்க்குருவை தவிர்க்க உதவும். வியர்க்குருவைச் சொறிந்தால் அது தொற்றுக்கு வழிவகுக்கும்... கவனம்!

### சீழ்க் கட்டிகள்

நோய் எதிர்ப்புத் திறன் குறைவதாலும், சுகாதாரமற்ற பழக்க வழக்கங்களாலும் ஏற்படக்கூடியவை வெயில்கால சீழ்க் கட்டிகள். சருமத்தில் கிருமித்தொற்று ஏற்படுவதாலும், உடற்சூட்டாலும் கூடச் சீழ்க் கட்டிகள் உருவாகும். முதுகு, கழுத்து, அக்குள் மற்றும் தொடைப் பகுதிகளில் இவை உருவாகும். சிறிய கொப்புளங்கள் போலக் காட்சியளிக்கும் இந்தக் கட்டிகள் வீங்கிக் காணப்படும்; வலியெடுக்கும். இந்தக் கட்டிகளை உடைக்கக் கூடாது. தொற்று ஏற்படுவதற்குள் மருத்துவரை அணுக வேண்டும். எண்ணெயில் பொரித்த உணவுகளை அதிகம் சாப்பிடக் கூடாது.

### அம்மை நோய்

கோடையில் உருவாகும் நோய்களில் முதன்மையானது, 'சிக்கன் பொக்ஸ்' எனப்படும் சின்னம்மை. கோடையில் வீரியமாக செயலாற்றும் இந்தக் கிருமி, எதிர்ப்புச் சக்தி குறைந்தவர்களை விரைவாகத் தாக்கும். நீர்ச்சத்து குறைந்தவர்களுக்கும் சின்னம்மை ஏற்படும்.

பாதிக்கப்பட்ட ஒருவரிடமிருந்து காற்று வழியாக, மற்றவர்களுக்கு எளிதாகப் பரவும். அதிக ஜுரம், பின் கழுத்து, முதுகு, கை போன்ற இடங்களில் சிறுசிறு கொப்புளங்கள் வந்து, ஒரு வாரத்தில் மறைந்துவிடும். கொப்புளங்களை கிள்ளக் கூடாது. வேப்பிலை, மஞ்சள் ஆகியவை இதற்குச் சிறந்த மருந்து. அதனால் கொப்புளங்களால் ஏற்படும் அரிப்பு நீங்கும். அதிக அரிப்போ, காய்ச்சலோ இருந்தால், மருத்துவரிடம் செல்ல வேண்டும். அம்மை நோய்களுக்கு தடுப்பூசி இருப்பதால், குழந்தைகளுக்கு தடுப்பூசி போட வேண்டியது அவசியம்.

### வெயில் 'அலர்ஜி'

சிலருக்கு வெயிலில் சென்றுவிட்டு வந்தால், உடலெங்கும் அரிக்கத் தொடங்கிவிடும். சருமம் சிவந்து தடிப்புகள் தோன்றும். அவற்றில் நீர் கோத்துக்கொள்ளும். அரிதாகச் சருமம் உரியும் பிரச்சினையும் ஏற்படலாம். இதற்கு 'சோலார் அர்ட்டிகேரியா' (Solar Urticaria) என்று பெயர். இந்தத் தொல்லையைத் தடுக்க, முதலில் வெயில் நேரத்தில் வெளியில் செல்வதைத் தவிர்க்க வேண்டும். அதேபோல, அதிக நேரம் சூரிய ஒளியின் புறஊதாக் கதிர்கள் உடலில் படுவதால், சருமச் செல்கள் வீக்கமடைந்து 'சன் பர்ன்' (Sun Burn) என்னும் சருமப் பிரச்சினை ஏற்படும். இந்தப் பிரச்சினைகளுக்கு வெயிலில் செல்வதற்கு முன்பாக, உடலில் வெளியே தெரியும் பகுதிகளில் சன்ஸ்கிரீன் லோஷனைத் தடவிக்கொள்ளலாம், புறஊதாக் கதிர்வீச்சிலிருந்து சருமத்தைப் பாதுகாக்கலாம். உடல் முழுவதையும் மறைக்கிற வகையில் ஆடை அணிவதும் பலன் தரும்.

### சரும வறட்சி

கோடையில் நமக்கு அதிகம் வியர்வை வெளியேறுவதால், சருமத்திலிருக்கும் நீர்த்தன்மை வற்றிவிடும். அதை ஈடுகட்டும் அளவுக்கு அடிக்கடி நாம் தண்ணீர் குடிக்க வேண்டும். இல்லையென்றால், சருமம் வறண்டுவிடும். சருமம் வறட்சி அடையாமலிருக்க, தினமும் குறைந்தது மூன்று லீற்றர் தண்ணீர் அருந்த வேண்டும். பழச்சாறுகள், இளநீர், மோர், பானகம், சர்பத் போன்றவற்றை அருந்தலாம். வறண்ட சருமத்தில் மாயிச்சரைசர்களிம்பைப்பூசிக்கொள்ளலாம்.

### தலைமுடி வறட்சி

கோடையில் தலைமுடியும் வறண்டு போகும். எனவே, குளிப்பதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னர் தலையில் எண்ணெய் தடவி, தலைக்குக் குளிப்பதன் மூலம் இந்தப் பிரச்னையைத் தடுக்கலாம். வெளியில் செல்லும்போது குடை அல்லது தொப்பி அணிந்து செல்வது நல்லது. தலையில் அதிகமாக வியர்த்தால், அழுக்கு சேர்ந்து அரிப்பு ஏற்படும். எனவே, வீட்டுக்கு வந்ததும், தலைக்குக் குளிக்க வேண்டும். தலையில் பொடுகு, பூஞ்சைத் தொற்று பாதிப்புள்ளவர்கள் மருத்துவரிடம் ஆலோசனை பெறலாம்.

### பாதங்களில் வெடிப்பு

கோடையில் ஏற்படுகிற சரும வறட்சி காரணமாக, பாதங்களில் வெடிப்பு ஏற்படலாம். இதைத் தவிர்க்க தினமும் இரவில் பாதங்களைக் கழுவி, சுத்தப்படுத்திவிட்டு, தரமான மாய்ச்சரைசர் களிம்பைப் பூசிக்கொள்ளலாம். கோடைக்காலத்தில் சப்பாத்து அணிவதைத் தவிர்க்கவும்.



இறுக்கமான ஆடைகள் மற்றும் உள்ளாடைகளால் சருமத்தில் வியர்வை தங்கி, படர் தாமரை, அரிப்பு போன்ற பாதிப்புகள் உண்டாகும். படர்தாமரைக்கான க்ரீம்களை மருத்துவர் ஆலோசனையோடு பூசிக்கொள்ளலாம். தளர்வான ஆடைகளை அணிய வேண்டும்.

### மேற்கொள்ளவேண்டிய பொதுவான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

வெயில் கொளுத்தும் நேரமான காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை வெளியில் செல்வதை முடிந்தவரை தவிர்க்கலாம் அல்லது வெளியில் செல்லும்போது குடை மற்றும் சன்கிளாஸ் எடுத்துச்செல்லலாம். அதிக வெயில் என்றாலும் குழந்தைகளின் விளையாட்டுக்குத் தடை போட முடியாது. ஆனால், வெயிலில் விளையாட அனுமதிக்கக் கூடாது. மாலை 5 மணிக்கு மேல்தான் குழந்தைகளை வெளியில் விளையாட அனுமதிக்க வேண்டும். வெயிலில் வெளியே செல்லும்போது ஏற்படும் தாகத்தைத் தணிக்க ஒரு தண்ணீர்ப் போத்தலை எப்போதும் கொண்டு செல்ல வேண்டும்.

குளித்த பிறகு முகப் பவுடர் போடுவதைத் தவிர்க்க வேண்டும். பவுடர் நம் சருமத்தில் சிறிய நுண் துளைகளை மூடிக்கொள்ளச் செய்யும். இதனால் வெப்பம் வெளியேறாமல் சருமப் பிரச்சினைகள் ஏற்படும்.

> கோடையில் நமக்கு அதிகம் வியர்வை வெளியேறுவதால், சருமத்திலிருக்கும் நீர்த்தன்மை வற்றிவிடும். அதை ஈடுகட்டும் அளவுக்கு அடிக்கடி நாம் தண்ணீர் குடிக்க வேண்டும். இல்லையென்றால், சருமம் வறண்டுவிடும். தினமும் குறைந்தது மூன்று லீற்றர் தண்ணீர் அருந்த வேண்டும். பழச்சாறுகள், இளநீர், மோர், பானகம், சர்பத் போன்ற வற்றை அருந்தலாம்.

### சரும வறட்சி

மிகவும் இறுக்கமான ஆடைகளைத் தவிர்த்துவிட்டு, உடலில் ஈரம் தங்காதபடி வியர்வையை உறிஞ்சக்கூடிய, சருமத்தில் அரிப்பு ஏற்படுத்தாத, பருத்தி ஆடைகளையே அணியவும். ஸ்லீவ்லெஸ் ஆடைகளைவிட முழுக்கை, கொலர் வைத்த சட்டைகளை அணிந்தால், தோலில் வெயில்படாமல் இருக்க உதவும்.



வறட்சியால் நோய்த் தாக்கமும் அதிகம்; முன்னெச்சரிக்கையை கடைப்பிடிப்போம்

புற ஊதாக் கதிர்களின் வெப்பத்திலிருந்து தோல்களைக் காக்க, உணவில் விற்றமின் சி அதிகமிருக்கும் பொருள்களை சேர்த்துக்கொள்ளவும். ஆந்தோசயானிடின்ஸ் (Anthocyanidins), பீட்டா கரோட்டின் (Betacarotene), லைகோபீன் (Lycopene) போன்ற ஆன்டிஆக்ஸிடன்ட் அதிகமிருக்கும் ஒரேஞ், கரட், புராக்கோலி, மாம்பழம், பப்பாளி, தர்பூசணி, கீரைகளை அதிகம் சாப்பிட வேண்டும்.

காரமான, அதிகம் எண்ணெயுள்ள உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும். இளநீர், மோர், தர்பூசணி போன்ற குளிர்ச்சியான மற்றும் நார்ச்சத்துள்ள உணவுப் பொருள்களை அதிகம் சேர்த்துக்கொள்ளலாம். நன்றி- விகடன்

# சர்வாதிகாரிகளின் வேடிக்கையான பழக்கவழக்கங்கள்

வரலாற்றில் நாம் நிறைய சர்வாதிகாரிகளைக் கண்டிருக்கிறோம். ஒவ்வொரு வரும் அவர்களது தனிப்பட்ட சட்ட திட்டங்கள், கொடுங்கோல் ஆட்சி மற்றும் விசித்திரமான பழக்க வழக்கங்களால் வரலாற்றில் ஒரு தனிச் சிறப்பிடம் பெற்றுள்ளனர்.

பெரும்பாலும் இவர்களின் கொடூரமான குணங்களை மட்டும் தான் நாம் அறிந்திருப்போம். ஆனால், ஒருசில சர்வாதிகாரிகள் சில வேடிக்கையான பழக்கவழக்கங்களைப் பின்பற்றி வந்துள்ளனர். அதாவது டொல்பின் இரத்தத்தில் குளிப்பது, தங்களை பற்றி புத்தகங்களை ஏலியன்களுக்கு அனுப்பி வைப்பது எனப் பல 'காரியங்களை' இவர்கள் செய்துள்ளனர்.

## சபர்முரத் நியஜோவ் (Saparmurat Niyazov)



துருக்மெனிஸ்தானின் முன்னாள் அதிபர் சபர்முரத் நியஜோவ். இவர் தன்னைப் பற்றிய புத்தகங்களின் பிரதியை விண்வெளியில் ஏலியன்கள் படிக்க அனுப்பி வைத்திருக்கிறார். ருஹ்னமா (Ruhnama) எனக் கூறப்படும் இவரை அந்தப் புத்தகத்தை அந்நாட்டு மாணவர்கள் அனைவரும் கட்டாயம் படிக்க வேண்டும்.

முற்றிலும் மத ரீதியான கோட்பாடுகள் கொண்டிருக்கும் அந்த புத்தகத்தை அனைத்து குடிமகனும் படித்து, பின்பற்ற வேண்டும். அந்த புத்தகத்தின் மீது அதிக ஈர்ப்பு கொண்டிருந்த சபர்முரத் அதை விண்வெளிக்கு அனுப்பி வைத்தார். அதை அண்டிகே இருக்கும் ஏலியன்கள் கண்டெடுத்தால் இவரை பற்றியும், இவரது மத ரீதியான கோட்பாடுகள் பற்றியும் ஏலியன்கள் அறிந்து கொள்ளும் என இவர் கருதினார். இதற்காக ஒரு ராக்கெட்டில் வைத்து இந்தப் புத்தகம் விண்ணில் ஏவப்பட்டது.



## ரொபர்ட் முகாபே

ஜிம்பாவேவின் அதிபர் ரொபர்ட் முகாபே, வெளிநாடுகளுக்கு பரிசாக தன் நாட்டில் விலங்கியல் பூங்காவில் இருக்கும் விலங்குகளை அனுப்பி வைப்பார். வடகொரியாவுக்கு மட்டுமே ஒட்டகச்சிவிங்கி, வரிக்குதிரை மற்றும் 18 மாத குட்டி யானை எனப் பல விலங்குகளை பரிசாக அனுப்பி வைத்திருக்கிறார் ரொபர்ட் முகாபே.

## முவம்மர் கடாபி

லிபியாவின் சர்வாதிகாரியாக இருந்தவர் கடாபி. இவருக்கு முன்னாள் அமெரிக்க செயலாளர் கொந்தளிசா ரைஸ் என்பவர் மீது ஓர் ஈர்ப்பு இருந்தது. அவரை "மை டார்லிங் பிளாக்வுமன்" என்றே அழைத்து வந்தார். ஒரு முறை பேட்டியில், "லீசா, லீசா, லீசா ஐ லவ் யு வெரி மச்...."நான் அவரை விரும்புகிறேன் என்று கூறினார்.



2007 ஆம் ஆண்டில் இவர் வழங்கிய அந்தப் பேட்டியில், ஒரு கறுப்பு பெண் இவ்வளவு உயரிய பதவி யில் இருப்பதை நான் பெருமையாகக் கருதுகிறேன் என்றும் கூறியிருந்தார். ஒருமுறை ரைஸ் லிபியா சென்றிருந்த போது, தனது ப்ரைவேட் கிச்சனுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அங்கே ரைஸ் பல உலக நாடுகளின் தலைவர்களைச் சந்தித்த காணொலிப் பதிவுகளைத் தொகுத்து அதன் பின்னணியில் வெள்ளை மாளிகையின் கருப்பு பூவே என்ற ஒரு பாடலை ஒலிக்க செய்திருந்தார். இதில் என்ன விசித்திரம் என்றால் கறுப்பு பூ என்பது ஒரு கவர்ச்சியான பொருள் கொண்ட வார்த்தை என்று அறியப்படுகிறது.

## நிக்கோலே சௌசெஸ்கு (Nicolae Ceausescu)

ரோமானியாவின் முன்னாள் அதிபர் நிக்கோலே. இவர் தினமும் புதிய உடை மற்றும் ஷு தான் அணிவார். மேலும்,



பயன்படுத்திய பழைய உடைகளை, ஷுக்களை எரித்துவிடுவார். நிக்கோலே தன்னை ஒஸ்மோசிஸ் (osmosis) எனும் முறையில், அதாவது துணியில் விஷம் தடவி கொலை செய்துவிடுவார்களோ என்று அஞ்சினார். இதனால், இவர் தினமும் புதிய உடைகளை தான் உடுத்துவார்.

மற்றும் ஒருமுறை பயன்படுத்திய உடையை தீயில் இட்டு எரித்துவிடுவார். ஒருமுறை இவர் உடையை உடுத்தி கழற்றிவிட்டார் எனில், அது இவரது சாம்பலாக்கக்கூடிய கருவியில் போட்டு எரித்துவிடுவார்கள்.

## கிம் 2 சுங்




முன்னாள் வடகொரிய பிரதமரான கிம் 20 வயதுக்குட்பட்ட ஆண், பெண்களின் இரத்தத்தை தனது உடலுக்குள் செலுத்தி அடிக்கடி புதுப்பித்துக் கொள்வார். இதன் மூலம் தான் இளமையாகவே இருப்பேன் என்று கருதினார் கிம். மேலும், சிலரை நியமித்து தன்னை பற்றிய ஒரு பாடலை எழுதி அதை கொரியன் ஸ்பேஸ் ஸ்டேஷனில் ஒலிபரப்பச் செய்தார். இதன் மூலம் ஏலியன்கள் தன்னைப் பற்றி அறிந்து கொள்ளும் என்று கருதினார்.

## இடி அமின்!

உகாண்டாவின் முன்னாள் அதிபர் சர்வாதிகாரி இடி அமின். இவர் நான்கு வெள்ளையர்களை தன்னைத் தூக்கிச் செல்லப் பணியமர்த்தி வைத்திருந்தார். இனிமேலும் கறுப்பின மக்கள் அடிமைகள் இல்லை என்று காட்ட, இவர் இப்படி நான்கு வெள்ளையர்களை வேலைக்கு அமர்த்தி தன்னை தூக்கிச் செல்ல வைத்தார். இடி அமினுக்கு மொத்தம் ஐந்து மனைவிகள் மற்றும் 43 குழந்தைகள்.



## ரபேல் ட்ருஜிலோ (Rafael Trujillo)



டொமினிக்கன் குடியரசின் சர்வாதிகாரியாக இருந்தவர் ரபேல். இவர் தான் விரும்பும் எந்தப் பெண்ணாக இருந்தாலும், அவர் திருமணமானவராக இருந்தாலும் அவருடன் செக்ஸ் வைத்துக் கொள்வார். ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் இவர் சர்வாதிகாரம் செய்து வந்தார். இந்த கால கட்டத்தில் தன் கண்ணில் படும் எந்த ஒரு பெண்ணாக இருந்தாலும், அவர் திருமணம் ஆனவர், ஆகாதவர் என்றெல்லாம் பாராமல் தூக்கி வந்து செக்ஸ் வைத்துக் கொள்வார். ஒரு வேளை அந்த பெண்களின் கணவர்கள் அல்லது தந்தையர் பெண்களை அனுப்ப மறுத்தால், அவர்களை அடித்தே கொன்று விடுவார்கள்.

### இளசுகளின் இரத்தத்தை உடலுக்குள் செலுத்திக் கொள்ளும் மூடத்தனம்

## நீ வின்!

பர்மாவின் தலைவராக இருந்தவர். இவர் டொல்பின் இரத்தத்தில் குளிக்கும் பழக்கம் கொண்டிருந்தார். இது கொஞ்சம் விசித்திரமான பழக்கம். நீ வின் தன்னை இளமையாகவும், வலிமையாகவும் வைத்துக் கொள்ள இப்படியான ஒரு மூட நம்பிக்கையை பின்பற்றி வந்தார். நீ வின்னின் இந்த பழக்கத்தை சிலர் தீய சக்தி/தீய பழக்கம் என்றும் கருதி வந்தனர்.






# பசி, பசி அகோர பசி! நர மாமிசத்தை நாடிய காரணம் இது தான்!

ஆரம்ப காலங்களில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக பரிணாம வளர்ச்சிப் பெற்று இன்றைக்கு இந்த நவீன யுகத்தில் வந்திருக்கிறோம். அதற்காக நாம் பயணித்த பாதையை மறந்திட முடியுமா? இன்றைக்கு நினைத்தாலும் நடுங்க வைக்கிற சில உண்மைகளை நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும். விலங்குகளை அடித்துக் கொல்வதை விட மனிதர்களை அடித்துக் கொல்லும் அவர்களை உண்பது என்பது மிகவும் கோரமான விஷயமாகவே பார்க்கப்படுகிறது. நரமாமிசம் உண்பது பற்றியும் அவை குறித்த சில சுவாரஸ்யத் தகவல்களையும் பார்ப்போம்.

இன்றைக்கு நர மாமிசம் சாப்பிடுவதை விநோதமாக பார்க்கப்பட்டாலும் ஆரம்பக் காலத்தில் இது மிக இயல்பான ஒரு விஷயமாகவே இருந்திருக்கிறது. சில பருவ காலங்களில் விலங்குகளை வேட்டையாடி உண்பது என்பது இயலாத காரியமாக இருக்கும். அந்த நேரத்தில் பசியை போக்க, உயிரை காக்க தங்கள் கூட்டத்திலிருந்து ஒருவரையே அடித்துக் கொன்று சாப்பிடுவதை வழக்கமாக வைத்திருந்திருக்கிறார்கள்.

நரமாமிசம் சாப்பிடும் பழக்கம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்த வந்ததற்கு இதுவும் ஓர் காரணம் என்றே சொல்லப்படுகிறது. ஏனென்றால் ஒரு மனிதனுக்கு தேவையான அனைத்துச் சத்துக்களையும், நரமாமிசத்திலிருந்து பெற முடியவில்லை. அதோடு சத்துக்காகத் தேவைப்படுகிற கலோரியும் குறைவாகவே கிடைத்திருக்கிறது.

இதனால் என்ன தான் குறைந்தது 80 கிலோவுள்ள ஒர் மனிதனை அடித்துச் சாப்பிடும் போது குறைந்த அளவிலான சக்தியும் கூட கிடைக்கவில்லை எனும் பட்சத்தில் அந்த முயற்சியை கைவிட நினைத்திருக்கிறார்கள்.



### இறப்புக்குப் பின்....

உயிருடன் இருப்பவரை கொன்று அந்த உடலை உண்பது ஒர் வகையென்றால் தங்கள் குடும்பத்தில் யாரேனும் இறந்துவிட்டால், குறிப்பாக வயோதிபம் காரணமாக இறந்துவிட்டால் அவர்களுக்கு இறுதிக் காரியங்கள் செய்யாமல் அவர்களை உணவாக எடுத்துக் கொள்ளும் வழக்கம் இருந்திருக்கிறது. இதனால் அந்த முன்னோர்களின் ஆசிர்வாதம் தங்களுடனே இருக்கிறது. அவர்கள் எங்களோடு கலந்து விட்டார்கள் என்று நினைத்திருந்திருக்கிறார்கள். இதிலேயே சில சடங்கு சம்பிரதாயங்களைச் சேர்த்து அதனைக் கட்டாயமாக்கவும் முயற்சித்திருக்கிறார்கள். முழு உடலை சாப்பிடவில்லை என்றாலும் சம்பிரதாயத்திற்காகவது சாப்பிட வேண்டும் என்று சொல்லி சில காலங்கள் இந்த வழக்கத்தைத் தொடர்ந்திருக்கிறார்கள்.

### விலங்குகள்

மனிதர்கள் தான் இந்த வழக்கம் மிகவும் கோரமானது, மனிதாபிமானமற்றது என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் விலங்கினங்களில் இது சாதாரணமாக நிகழக்கூடிய ஒன்றாகவே இருக்கிறது. பிற விலங்குகளை விட தன் குட்டியை அல்லது தன் இனத்தையே அடித்துக் கொல்லும் வழக்கம் விலங்குகளிடம் சர்வ சாதாரணமாகக் காணப் படுகிறது. சிலந்தி வகைகளில் ப்ளாக் விடோ என்ற வகை சிலந்தி இருக்கிறது. இணை சேரும் காலம் முடிந்தவுடன் தன்னுடன் சேர்ந்த ஆண் இணையை பெண் இணை கொன்று விடுகிறது. இதே போல சில விலங்குகள் தான் ஈன்றெடுக்கின்ற குட்டிகளையே சாப்பிட்டு விடுவதும் உண்டு.

### வேட்டையாடு

இந்த நரமாமிசம் சாப்பிடும் பழக்கம் தங்கள் ஊருக்கு புதிதாக வருகிறவர்கள் அல்லது இவர்கள் போரிடவோ அல்லது உணவு தேடியோ செல்லும் போது எதிர் நாட்டு மக்களைப் பிடித்துக் கொண்டு வந்து சாப்பிடுவது எக்ஸோ கேனிபலிசம் என்று அழைக்கிறார்கள். பப்புவா நியூகினியாவில் இருக்கிற மினாமின் என்ற கிராம மக்களிடையே இந்த வழக்கம் இருந்திருக்கின்றது.

இந்த நரமாமிசத்திற்கு மிகச் சிறந்த உதாரணமாக இந்த சம்பவத்தைக் குறிப்பிடலாம். ஜோர்ஜ் புஷ் சீனியரை கொன்று சாப்பிட்டிருக்கிறார்கள் ஜப்பானைச் சேர்ந்த நரமாமிசம் உண்பவர்கள். இரண்டாம் உலகப் போரின் போது சிச்சி ஜிமா என்ற தீவுப் பகுதியில் தரையிறங்கியிருக்கிறார்கள். விமானத்தில் இருந்த ஒருவர் மட் டும் 'பரசூட்' உதவியுடன் தப்பி விடயத்தை சொல்ல அதன் பிறகு தான் ஜோர்ஜ் புஷ் அங்கே மாட்டியிருப்பது தெரிய வந்திருக்கிறது.

## நினைத்தாலே நடுங்க வைக்கும் சில உண்மைகள்

### பன்றிக் கறி

மனிதக் கறி சுவை எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை அறிய ஆராய்ச்சியாளர்கள் முயன்றார்கள். நரமாமிசம் சாப்பிடுவோரிடத்தில் எல்லாம் கேள்விகள் முன்வைக்கப்பட்டன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு சுவையைச் சொன்னார்கள். ஆனால் பெரும்பாலானவர்கள் சொன்னது என்ன தெரியுமா? முதிர்ந்த பன்றிக்கறியைப் போல இருந்தது என்பது தான்.

1878 ஆம் ஆண்டு, பபுவா நியூ கினியாவில் இருக்கக்கூடிய பழங்குடியினத் தலைவர் டலேலி அங்கு புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் மிஷனரிகளில் இருப்பவர்களை எல்லாம் கொன்று சாப்பிடுங்கள் என்று கட்டளையிட்டார் ஏனென்றால் அவர்கள் எல்லாம் வெளிநாட்டினர் என்று சொல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் நடந்து பல நூற்றாண்டு கடந்து விட்டாலும் இந்த விடயம் தொடர்ந்து சர்ச்சையைக் கிளப்பிக் கொண்டேயிருந்தது. இந்நிலையில் 2007 ஆம் ஆண்டு தங்கள் முன்னோர்கள் செய்த செயலுக்காக இன்றைக்கு வாழ்கின்ற அந்த பழங்குடி மக்கள் மன்னிப்பு கேட்டார்கள்.

கொஞ்சம் கொஞ்சமாக நரமாமிசம் சாப்பிடும் வழக்கம் முற்றிலுமாக குறைந்து போனது. இந்நிலையில் ஆபத்தான காலங்களில் உயிர் பிழைக்க வேறு வழியே இல்லை எனும் பட்சத்தில் உடனிருப்பவர்களையே உண்டு உயிர் பிழைக்கும் அரிதான சம்பவங்கள் நடக்கத்தான் செய்கின்றன.

1972ஆம் ஆண்டு உருகுவே நாட்டைச் சார்ந்த 571 என்ற விமானம் ஏண்டஸ் என்ற மலையில் விழுந்து விபத்திற்குள்ளானது. இந்த ஏண்டஸ் மலை உலகிலேயே மிக நீளமானதாகும். இந்த மலையின் நீலம் மட்டும் 7000 கிலோ மீற்றரைத் தாண்டுகிறது. அகலம் என்று பார்த்தால் 200கி.மீ முதல் 700 கி.மீ வரை இருக்கிறது.

### உயிரையும் காப்பான்

விபத்தில் பலியானவர்கள் போக சிலர் உயிர் பிழைத்திருந்தார்கள் இன்னும் சிலரோ படுகாயங்களுடன் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தார்கள். விமானம் நொறுங்கி கிடக்கிறது இடிபாடுகளில் சிக்கியவர்களை இவர்களே மீட்டு முடிந்தளவு முதலுதவி அளிக்கிறார்கள். நேரம் கடந்து நாள்களாகிறது. திடீரென்று தங்கள் பாதுகாப்பு வளையத்திலிருந்து காணமற்போன விமானத்தை தேடும் பணியைத் தொடர்ந்தார்கள்.

விமானம் எந்தப் பகுதியில் விழுந்திருக்கிறது என்பதே கண்டுபிடிக்க முடியவில்லை. மிகப் பெரிய மலைப்பகுதி



அங்கே விழுந்திருக்கிறது என்று உறுதி செய்தாலும் தேடி அந்த இடத்தை அடைய நீண்ட காலம் பிடிக்கும்... இருந்தும் தொடர்ந்தார்கள். உணவோ குடிதண்ணீரோ இல்லாமல் அங்கிருக்கும் மக்கள் மிகவும் அவதிக்குள்ளானார்கள் தங்களை காப்பாற்றிக் கொள்ள விபத்தில் இறந்தவர்களை உணவாக எடுத்துக் கொள்ள ஆரம்பித்தார்கள். கிட்டத்தட்ட 72 நாள்கள் வரை நர மாமிசத்தை சாப்பிட்டே உயிர் பிழைத்தவர்கள் இறுதியாக மீட்கப்பட்டனர்.

### சிரிப்பின் மரணம்

வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்று தானே வழக்கமாக கேட்டிருப்போம் ஆனால் இங்கே சிரித்து சிரித்தே மரணமடைந்த கதைகளை சொல்கிறார்கள். பபுவா நியூகினியாவில்





வாழுகின்ற குறிப்பிட்ட மக்கள் மத்தியில் க்குரு எனப்படுகிற வைரஸ் தாக்குதல் ஏற்பட்டது. (19 ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir





# கல்விக் கதிர் வெளியீடு


## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

தரம்-5

பகுதி - II

31

20) இவ்வுருவின் சுற்றளவு யாது?





........................................................................................

21) ஒருவர் 50 ரூபாய்த் தாளொன்றை கொடுத்து ரூபாய் 12.00 பெறுமதியுடைய 4 கொப்பிகளை கொள்வனவு செய்தார். எனின் அவருக்கு எவ்வளவு பணம் மிகுதியாக கிடைக்கும்?

........................................................................................

22) இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



........................................................................................

23) 12 ஐ 4 ஆல் பெருக்கி வரும் விடையுடன் 20 ஐக் கூட்டி 2 ஆல் வகுத்தால் வரும் விடை யாது?

........................................................................................

24) ஒரு பெட்டியில் உள்ள தோடம்பழங்களில் 3:4 பங்கு பழுதடைந்த பின்பு 14 பழங்கள் விற்கப்பட்டது எனின் பெட்டியில் ஆரம்பத்தில் இருந்த தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது?

........................................................................................

25) வெற்றிடத்தில் வரவேண்டிய விடையைத் தருக

| பொருள் | அளவு | செலுத்தியபணம் ரூபாசதம் | |
|---|---|---|---|
| பருப்பு | 2 kg | 220 | 00 |
| அரிசி | 1 kg | 200 | 00 |
| சீனி | 3 kg | .............. | |
| மொத்தம் | | 650 | 00 |


26) 2250 ml கொள்ளளவுள்ள ஒரு பாத்திரத்தில் 1900 ml நீர் உள்ளது. அப்பாத்திரத்தில் மேலும் 500 ml நீரை கவனமாக ஊற்றினால் பாத்திரத்தில் இருந்து வெளியேறும் நீர் எவ்வளவு ?

........................................................................................

27) சட்டைஒன்றிற்கு 6 பொத்தான்கள் தேவை ஒரு தையல்காரருக்கு 20 சட்டைகள் தைக்க வேண்டியுள்ளது எனின் அவருக்கு எத்தனை பொத்தான்கள் தேவை ?

........................................................................................

28) கீழேயுள்ள அட்டவணை மற்றும் வரைவினைப் பூரணப்படுத்துக




| ரோஜாக்களின் நிறம் | ரோஜாக்களின் எண்ணிக்கை |
|---|---|
| மஞ்சள் | 20 |
| சிவப்பு | 15 |
| வெள்ளை | 10 |
| ஊதா | ............ |

29) ஒரு தோட்டத்தில் 41 தென்னை மரங்கள் உள்ளன. ஒரு மரத்திலிருந்து தினமும் 2 தேங்காய்கள் வீதம் பறிக்கப்படின் ஒரு வாரத்தில் எத்தனை தேங்காய்கள் பறிக்கப்படும் ?

........................................................................................

30) ஒரு பெட்டியில் உள்ள மாம்பழங்களில் 40 பழங்கள் பழுதடைந்தன. ஒரு மாம்பழத்தின் விலை 12.00. எஞ்சிய பழத்தினை விற்றதில் 720 ரூபாய் கிடைத்தது எனின் விற்ற மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

........................................................................................

மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக

31) "நான் எனது வீட்டிற்கும் எனது பாடசாலைக்கும் செய்ய வேண்டிய பொறுப்புக்களையும் கடமைகளையும் செய்து பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் நல்லதொரு பிள்ளையாகத் திகழ்வேன்" என்று கூறும் படிநிலை ?

1.பிரார்த்தனை 2.மனஉறுதி 3.உடலைத் தளர்த்தல் 4.மனதைத் தளர்த்தல்



# தற்பெருமை



ஒரு தடவை முல்லா ஒரு குளக்கரை ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்தார்.

அப்போது வழியில் இருந்த ஒரு கல் தடுக்கி குளத்தில் விழ அவருக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த ஒரு மனிதர் பாய்ந்து வந்து முல்லாவைக் குளத்தில் விழாமல் காப்பாற்றினார்.

முல்லா அவருக்கு நன்றி சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

ஆனால் முல்லாவைக் காப்பாற்றியவரோ சும்மா இருக்கவில்லை. முல்லாவை எந்த இடத்தில் யாருக்கு நடுவே சந்தித்தாலும் குளத்தில் விழ இருந்த முல்லாவை நான்தான் காப்பாற்றினேன் என்று சொல்ல தொடங்கிவிட்டார்.

அவருடைய தற்பெருமைப் பேச்சைக் கேட்டுக் கேட்டு முல்லாவுக்கு சலிப்பு ஏற்பட்டுவிட்டது. அவருக்கு தகுந்த நேரத்தில் சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்று தீர்மானித்தார்.

ஒரு நாள் பழைய குளக்கரைப் பக்கம் சன நடமாட்டம் அதிகமாக இருந்தது. அந்தப் பக்கம் வந்த முல்லா அந்த தற்பெருமைக்காரர் குளக்கரையில் யாரோ ஒருவருடன் உரையாடிக் கொண்டிருப்பதைக் கண்டார்.



திடீரென முல்லா குளத்தினுள் பாய்ந்து விட்டார்.

முல்லா குளத்தில் விழுந்து விட்டார் என நாலா புறமிருந்த மக்களிடமிருந்து கூக்குரல் எழுந்தன.


பலர் முல்லாவைக் காப்பாற்றுவதற்காக குளத்தில் இறங்கினர்.

முன்னர் முல்லாவைக் குளத்தில் விழாமல் காப்பாற்றியவரும் அவசர அவசரமாகக் குளத்தில் இறங்கினார்.

முல்லாவோ யாரைப் பற்றியும் கவலைப்படாமல் குளத்தில் நீச்சலடித்து விளையாடிக் கொண்டிருந்தார்.

முல்லாவுக்கு நீந்தத் தெரியும் என்ற விஷயம் இதுவரை எவருக்குமே தெரியாது.

முல்லா முன்னர் தம்மைக் காப்பாற்றியதாக தற்பெருமை பேசும் மனிதரைச் சுட்டிக் காண்பித்து என் அருமை நண்பரை உங்களுக்கெல்லாம் அறிமுகப்படுத்த நினைக்கிறேன். நீந்தத் தெரிந்த என்னை இந்தக் கனவான் ஒரு தடவை நீரில் மூழ்கி விடாமல் காப்பாற்றி பேருதவி செய்தார். - என்றார்.




கூட்டிக் கழித்துக் கணக்குப் போடு...
அதற்கு ஏற்ற வண்ணங்களைத் தீட்டிப் பாருங்களேன்



## தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்' சிறுவர் சஞ்சிகைப் பிரிவு 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

# திருட்டுத் தேங்காய் சாபத்திற்கு!! தேங்காயின் விதிப் பயன் என்ன...?


சொல்லத் தவறிய 10 கதைகள்

தெருத்தேங்காய் வழிப் பிள்ளையாருக்கு!

லெ.முருகபூபதி ஆஸ்திரேலியா

பயன்தரும்மரங்களின்பெயர்களையும் எழுதி, அதில் ஒன்றைத்தெரிவு செய்து, அது தரும் நல்ல பயன்களைப்பற்றி எழுதச் சொன்னார் ஆசிரியர். இந்தச்சம்பவம் நான் ஐந்தாம் வகுப்பு படித்த காலத்தில் நடந்தது.

எனது வகுப்பில் பெரும்பாலான



மாணவ மாணவிகள் தென்னை மரம் பற்றியே எழுதியதற்குக் காரணம், எங்கள் ஊரில் அந்த மரங்கள்தான் அதிகம். நாம் பனை மரத்தை படங்களில்தான் பார்த்திருந்த காலம். தென்னையின் பயன்பாடு பற்றி நிறையச் சொல்லமுடியும். ஆனால், அந்த பால்யகாலத்தில் எமக்குத் தெரிந்ததையே எழுதினோம்.

தெங்கு ஆராய்ச்சி நிலையம், தேங்காய் எண்ணெய் தொழிற் சாலை, தேங்காய் துருவல் (Desiccated Coconut) தொழிற்சாலை என்பன எங்கள் நீர்கொழும்பூரில் இருந்தன. தென்னந்தோட்ட உரிமையாளர்கள் பலர் தமக்குள் சங்கமும் வைத்திருந்தனர்.

ஆனால், இவை பற்றிய எந்த ஞானமும் இல்லாமலேயே நானும் சகமாணவர்களும் தென்னையின் பயனை நன்றாக எழுதி ஆசிரியரிடம் சிறந்த மதிப்பெண்களும் பெற்றோம்.

பாடசாலைக்கு அருகில் அமைந்த கோயில்களில் யாராவது பக்தர்கள் வந்து தேங்காய் உடைத்து பிரார்த்தனை செய்தால், எமக்கு கொண்டாட்டம்தான். பாடசாலை இடைவேளை நேரத்தில் சிதறு தேங்காய் பொறுக்கிய அந்தக் காலத்தை மறக்கத்தான் முடியுமா.?

கோயில் அய்யரோ அல்லது பண்டாரமோ வந்து அவற்றை பொறுக்குவதற்கு முன்னர் நாம் முந்திவிடுவோம். சில சமயங்களில் அவர்கள் முந்துவார்கள். கோயில் வெளிவீதியில் சிதறு தேங்காய்களை காயவைத்து கொப்பறையாக மாற்றி, தேங்காய் எண்ணெய் தொழிற்சாலைக்கு அனுப்புவார்கள்.

எங்கள் ஊர் கோயில் ரதோற்சவ காலத்தில், பக்தர்கள் ரதங்களுக்கு முன்னால் அடித்து நொறுக்கும் தேங்காய்களின் எண்ணிக்கை அதிகம். அவற்றைச் சேகரித்து சாக்குகளில் கட்டி கோயிலுக்கே கொடுக்கும் கோயில் திருப்பணித் தொண்டு



களிலும் இளமைப்பராயத்தில் கலந்து கொண்டிருக்கின்றேன்.

பிரதான கடைவீதியில் எந்தக் கடை முதலாளி, ரதங்களுக்கு முன் னால் அதிகம் தேங்காய் உடைத்தார் என்பதை நானும் நண்பர்களும் ஆராய்ந்தது பால்யத்தின் வசந்த காலங்களில்தான்.

**பதுக்கல் வர்த்தகத்துக்கு பாவ சங்கீர்த்தனமா?**

ஆனால், அதில் பதுக்கல் வர்த்தகத்தின் மூலம் பொருளீட்டிவிட்டு பாவசங்கீர்த்தனமாக எத்தனை பேர் தெய்வத்திற்கு தேங்காய் உடைக்கிறார்கள் ???? என்பதை ஆராயும் வயது அல்ல அந்த பால்யகாலம்.

திடீரென்று ஒரு நாள் ஏன் தேங்காய் அடித்து பிரார்த்திக்கிறார்கள்? என்ற கேள்வி மனதில் எழுந்தது. மனதை தூய்மையாக வைத்திருக்கவேண்டும். மனதில் ஈரம் இருக்கவேண்டும். தேங்காயை உடைத்தால் உள்ளே தூய்மையான வெண்மையும் நீரும் இருக்கிறது என்று வீட்டில் விளக்கம் சொன்னார்கள்.

அம்மாவுக்கு தினமும் காலையில் தேங்காய் துருவிக் கொடுத்திருக்கின்றேன். அதில்தான் அம்மா சட்னி, துவையல் செய்வார்கள். தேங்காய் எமது வீட்டின் வறுமையைப் போக்கிய காலத்தையும் மறக்க முடியாது.

நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந் நன்றி என்று தருங்கொல் என வேண்டா – நின்று தளரா வளர் தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தான் தருதலால் என்ற ஔவையாரின் மூதுரையை பாடசாலையில் கேட்டதும் அந்தப் பருவத்தில் தான்.

தென்னையின் பெயருடன் எங்கள் நாட்டில் பல ஊர்கள் (பொல்கஹவெல, பொல்வத்தை, தென்னைமரவடி) திகழ்ந்திருக்கின்றன என்பதை அறிந்தது மற்றுமொரு பருவத்தில்.

கேணியருகினிலே – தென்னை மரம் கீற்று மிளநீரும் பத்துப்பன்னிரண்டு தென்னை மரம் பக்கத்திலே வேண்டும் என்ற பாரதியின் பாடலிலும் தென்னங் கீற்று ஊஞ்சலிலே தென்றலில் நீந்திடும் சோலையிலே சிட்டுக்குருவி ஆடுது தன் பெட்டைத் துணையைத் தேடுது... என்ற ஜெயகாந்த னின் (பாதை தெரியுது பார் - திரைப் படப் பாடல்) பாடலிலும் சொக்கி மகிழ்ந்த பருவம் மற்றும் ஒரு காலம்.



தேங்காய், இளநீர் விற்று குடும்பத்தை காப்பாற்றும் ஏழைகளையும் மத்திய தர வர்க்கத்தினரையும், தென்னந் தோட்டச்சொந்தக்காரர்களான பெரும் தனவந்தர்களையும் வாழ்க்கைப்பாதையில் சந்தித்திருக்கின்றோம்.

நான்கூட ஒரு காலத்தில் தேங்காய் விற்று வருமானம் தேடியிருக்கின்றேன்.

தேங்காயின் உரி மட்டையும் விற்பனைக்குரியது. வடபகுதியில் இதனை பொச்சு மட்டை என்பார்கள்! மலையகத்தில் சொன்னால் அடிக்க வருவார்கள்!

**வடக்கு மக்களும் தேங்காய்ச் சிரட்டையும்**

தேங்காய்ச்சிரட்டை, வடக்கில் மேல் சாதிக்காரர், தாழ்த்தப்பட்ட ஏழை எளிய குடிமக்களுக்கு தண்ணீர், தேநீர் கொடுக்க பயன்பாட்டில் இருந்திருக்கிறது. இதனை அறிந்து கொண்டது எனது மற்றும் ஒரு பருவகாலத்தில். தேங்காயில் பின்வரும் உயிர்ச்சத்துக்கள் இருக்கின்றன என்பதை அறிந்தது தமிழ் விக்கிபீடியா பயன்பாட்டுக்கு வந்த கணினி யுகத்தில்.

நார்ப்பொருள், மாப்பொருள், சர்க்கரை, கொழுப்பு, புரதம், தயமின், ரிபோஃபிளாவின், நியாசின், பான் டோதெனிக் அமிலம், உயிர்ச்சத்து B6, இலைக்காடி (உயிர்ச்சத்து B9 ), உயிர்ச்சத்துளி, கல்சியம், இரும்பு, மக்னீசியம், பொட்டாசியம், துத்த நாகம்.

இவ்வளவு பயன்களைத் தரும் தேங்காயில் மற்றுமொரு அபூர்வ குணம், பயன்பாடு இருக் கிறது என்பதை (தற்காலத்தில்) இலங்கை அரசியல்வாதிகள் மக்களுக்கு சொல்லியிருப்பது 21 ஆம் நூற்றாண்டு காலத்தில்.

தற்பொழுது பீல்ட் மார்ஷல் தரத் துக்கு உயர்த்தப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சே காவுக்கு நாடாளுமன்றில் யூ. என்.பி. செயற்குழு தமது கட்சியின் சார்பில் ஓர் ஆசனத்தை வழங்கியது. அவ்வேளையில் தேங்காய் பற்றியும் சிந்திக்க வேண்டிவந்தமையால்தான் இந்த தேங்காய் மகத்மியம் பதிவின் ஊடாக சொல்லத்தவறிய கதைகளை எழுதுகின்றேன்.



இலங்கையில் ராஜபக்ஷக்களின் முன்னைய அரசு 2009 மே மாதம் புலிகளுடனான இறுதிப் போரில் வெற்றிகண்டு ஒன்பது ஆண்டுகளாகின்றன. கொழும்பில் சரத் பொன்சேகாவும் ராஜபக்ஷ சகோதரர்களும், போர்க் காலத்தில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக இருந்தவருமான (இன்றைய ஜனாதிபதியும்) மைத்திரியும் தேங்காய்ப்பாலில் செய்த பால்சோறு வெட்டிப் பகிர்ந் துண்டு, வெற்றிக்களிப்பைக் கொண்டாடினார்கள்.

சிறிதுகாலத்தில் சரத் பொன்சேகா பதவியிலிருந்து நீக்கப்பட்டு சிறைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அப்பொழுது அவருக்கு அங்கே தேங்காய்ப் பாலில் செய்த கறியுடன் உணவுதரப் பட்டிருக்கலாம். அத்தகைய உணவை மறுத்து, வீட்டிலிருந்து அம்மாவின்கைப்பக்குவத்தில் சமைத்த உணவைத் தருவிக்கும் யோஷித்த ராஜபக்ஷவின் கைதைத் தொடர்ந்து, மஹிந்த அணியினர் தற்போதைய நல்லாட்சிக்கு (?) சாபமிடும் வகையில் சீனிகம தேவாலயத்தில் நூற்றுக்கணக்கான தேங்காய்களை உடைத்தசெய்தியையும் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்!

தமிழர்களும் இந்துக்களும் தேங்காயை நிறைகுடத்திற்கும் பூசைகளுக்கும் (காளாஞ்சி) பயன்படுத்துவதை பார்க்கின்றோம். மக்களுக்கும் பயன்பட்டு, மருத்துவக் குணங்களும் கொண்டிருக்கும். தேசத்தின் பொருளாதார வளத்திற்கும் உதவும் தேங்காய்க்கு, சாபமிடும்சக்தியும்இருக்கிறது என்ற செய்தியை இன்றைய தென்னிலங்கை அரசியல்வாதிகள் தெரிவித்துள்ளனர்.



தேங்காயும் சிவாஜிலிங்கமும்

**இதனை எனது மற்றும் ஒரு பருவ காலத்தில் (அறுபது வயதிற்குப்பின்னர்) பார்க்கின்றேன்.**

ராஜபக்ஷ அரசு போரில் வெற்றி பெற்ற களிப்பில் தேங்காய்பால் சோறு உண்ட போது, தமிழகத்தில் அரசியல்வாதிகள் இவர்களுக்கு கொடும்பாவி எரித்து கண்டனம் தெரிவித்தனர்.

அப்பொழுது தமிழக தலைவர்களை கோமாளிகள் என்று வர்ணித்தவர் சரத் பொன்சேகா. இன்று இலங்கையிலும் அரசியல் கோமாளிகள் இருக்கிறார்கள் என்பதை அவர் எம்.பியாக தெரிவான தருணத்தில் நாம் அறிந்தோம்.

மறைந்த எம்.பி., எம்.கே.டீ. எஸ். குணவர்தனாவுக்குத்தான் சரத் பொன்சேகா நன்றி தெரிவிக்க வேண்டும்.

முன்னர் ஒரு எம்.பி. இறந்தால், அந்தப் பதவி வெற்றிடத்திற்கு இடைத் தேர்தல் நடக்கும். ஆனால், ஜே.ஆரின் புண்ணியத்தால் இன்று நாடாளுமன்றில் ஆசனம் கிடைக்காமல் ஏங்கும் பலரும் அடுத்து யார் மறைவார்கள்? என்று காத்திருக்கின்றனர்!

**சாபமிடவும் தேங்காயா?**

தேங்காயில் சாபமிடும், சூனியம் செய்யும் மகத்துவம் தெரிந்திருப்பின் இன்று எத்தனை பேர் யார் யாருக்காக தேங்காய்களுடன் ஆலயங்களுக்கு இரகசியமாக சென்று வருகிறார்கள் ? என்பது அவ்வாறு செல்பவர்களின் மனச்சாட்சிக்குத் தான் தெரியும்.

எனக்கு இன்னமும் நினைவிருக்கிறது.

எங்கள் ஊருக்கு அருகில் இருக்கும் கட்டான தொகுதியில் கே.சீ. டீ. சில்வா என்ற ஸ்ரீ.ல.சு.க. எம்.பி. காலமானார். அவ்வேளையில் தெரு வெங்கும் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டு, சில்வாவின் படங்கள் சுவர்களில் ஒட்டப்பட்டன. செய்தி சேகரிக்கச் சென்றபோது சில்வாவிடம் முன்னர் தோற்றிருந்த விஜயபால மெண்டிஸ் என்பவர், தமது ஜீப்பில்



வந்துகொண்டிருந்தார். அவரைக் கண்ட அவருடைய கட்சி ஆதரவாளர் ஒருவர்,

மாத்தையாட்ட ஜயவேவா, இதிங் மாத்தாயா தமய் அபே மந்திரிதுமா (துரைக்கு வாழ்த்துக்கள். இனிமேல் துரை தான் எங்கள் மந்திரி) என்று உரத்துச் சொன்னார்.

விஜயபால மெண்டிஸ் எங்கள் ஊர் மேயர் முதலியார் மெண்டிஸின் மகன். இந்தக் குடும்பத்துக்கும் எங்கள் ஊரில் நிறைய தென்னந்தோட்டங்கள் இருந்தன. அந்த ஆதரவாளர் சென்னது கட்டானையில் நடந்த இடைத்தேர்தலில் பலித்தது.

சில வருடங்களுக்கு முன்னர் 68 ஆவது சுதந்திரதினம் கொழும்பில் கொண்டாடப்பட்ட வேளையில் அதனை எதிர்த்தவர்கள், சீனிகம தேவாலயம் சென்று அரசுக்கு சாபமிட்டு தேங்காய்களை உடைத்திருக்கிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், ஒரு காலத்தில் இலங்கையில் மார்க்ஸின் பிதா என வர்ணிக்கப்பட்ட பிலிப் குணவர்தனாவின் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தன இந்த தேங்காய் உடைப்பு சாபமிடும் போராட்டத்தில் முன்னிலை வகித்துள்ளார்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

# பார்வை பறிபோனாலும் அசையாத நம்பிக்கை

## சறுக்கு விளையாட்டிலும் ஆச்சரியப்படுத்துகிறார் அவர்

பார்வையற்றவர்கள் இயல்பான மனிதர்களைப் போல் வாழ்க்கை நடத்த முடியும் என்று பலரும் நிரூபித்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் ஆர்ஜென்டீனாவில் பிறந்து, ஸ்பெயினில் வசிக்கும் 20 வயது மார்சிலோ லுசார்டி. இரண்டு ஆண்டுகளுக்கு இவரது வலது கண்ணில் வலியும் பார்வைக் குறைபாடும் ஏற்பட்டது. மருத் துவப் பரிசோதனை செய்தபோது, மரபணுக் குறைபாடு என்று தெரிந்தது. விரைவில் இடது கண்ணும் பார்க்கும் சக்தியை இழந்துவிடும் என்று மருத்துவர்கள் சொன்னது போலவே நடந்துவிட்டது. மீண்டும் பார்வை கிடைப்பதற்கான வாய்ப்பும் தற்போது இல்லை.

திடீரென்று பார்வை இழந்தவுடன் மார் சிலோ நிலை குலைந்து போனார். பார்வை இல்லாமல் இனி தன்னால் வாழ முடியாது என்ற மனநிலைக்கு வந்தமையால் மிகுந்த மன அழுத்தத்துக்கு ஆளானார். அப்போது இவரது தோழியின் அப்பா, ஆறுதலாகப் பேசினார். நடந்ததை ஏற்றுக்கொள்ளப் பழக்கினார். பார்வை இல்லாவிட்டாலும் உலகில் வாழ முடியும் என்ற நம்பிக்கையை விதைத்தார்.

உடைந்துபோன என்னை விரைவிலேயே மீட்டெடுத்



தனர் தோழியும் அவரது அப்பாவும். வழக்கம்போல் நண்பர்களுடன் ஸ்கேட் பார்க்குக்குச் சென்றேன். எல்லோரும் விளையாடுவதை சத்தத்தை வைத்து உணர்ந்தேன். அவர்களை உற்சாகப்படுத்தினேன். உடனே நண்பர்கள் என்னைச் சறுக்கு விளையாட்டில் பங்கேற்கும்படி வற்புறுத்தினார்கள். இப்படித்தான் மீண்டும் விளையாட ஆரம்பித்தேன். ஆனால் பார்வை இல்லாதவருக்குச் சறுக்கு விளையாட்டு எவ்வளவு கடினம் என்பது அப்போதுதான் தெரிந்தது.

சாதாரணமானவர்கள் ஸ்கேட் போர்ட் மீது சரியாக நின்றுவிட்டால் விளையாட ஆரம்பித்துவிடலாம். ஆனால் நான் முதலில் சுற்றுச்சூழலைக் கவனிக்க வேண்டும். சில நேரங்களில் பார்வையாளர்களின் கரவொலி, கூச்சல் போன்றவற்றால் என்னால் விளையாட்டில் கவனம் செலுத்த முடியாமல் போய்விடும். நான் ஒலியை நம்பியே களத்தில் இருக்கிறேன்.

என்னுடைய விளையாட்டுக்கு ஏராளமான ரசிகர்கள் இருக்கிறார்கள். நான் பார்வையோடு இருந்திருந்தால் கூட இப்படித் தனித்துவமாகப் பிரகாசித்திருப்பேனா என்று தெரியாது. பார்வை இழந்ததில் என் திறமை எனக்குத் தெரியவந்திருக்கிறது. ஏதாவது கஷ்டம் வந்தால் அதோடு வாழ்க்கை முடிந்தது என்று யாரும் நினைக்காதீர்கள். இந்த உலகத்தில் தீர்க்க முடியாத பிரச்சினை என்று ஒன்று இல்லவே இல்லை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பார்வையற்றவனாக மாறுவேன் என்று நினைத்ததில்லை. ஆனால் இன்று அதையும் நேர்மறையாக எடுத்துக்கொண்டேன். என்னுடைய சறுக்கு விளையாட்டைப் பார்ப்பவர்கள் ஆச்சரியத்தில் வாய்பிளந்து நிற்பதாகச் சொல்கிறார்கள். இது போதும் இந்த வாழ்க்கைக்கு. என் வாழ்நாளுக்குள் என் பிரச்சினைக்கான தீர்வை மருத்துவ உலகம் கண்டுபிடித்துவிடும் என்று நம்புகிறேன். அதுவரைக்கும் பிறருக்கு உத்வேகம் அளிப்பவராக இருக்க விரும்புகிறேன். அதுவும் இன்றைய உலகத்துக்கு மிகவும் முக்கியம் என்கிறார் மார்சிலோ லுசார்டி.



# புயல், பேரலைகளுக்கு மத்தியிலும் பயணிக்கும் காகிதக் கப்பல்!

## நம்ப முடியவில்லையா?

காகிதக் கப்பல் செய்து தண்ணீரில் விடுவது என்றால் எல்லாக் குழந்தைகளுக்கும் பிடிக்கும். ஸ்காட்லாந்தைச் சேர்ந்த 8 வயது ஒல்லி ஃபெர்குசன், 5 வயது ஹாரி சகோதரர்கள் இருவரும் சேர்ந்து ஒரு சிறிய கப்பலை உருவாக்கினார்கள். கடந்த ஆண்டு மே மாதம் இந்தக் கப்பல், கடலில் விடப்பட்டது. மழை, காற்று, புயல், பேரலை என்று எல்லாவற்றையும் சமாளித்து இன்றும் கடலில் அழகாகத் தன் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இவர்களின் ஆர்வத்தைக் கண்டதும் பெற்றோருக்கு ஒரே மகிழ்ச்சி. உடனே தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து கொடுத்தார்கள்.

பெரியவர்கள் செய்தது போலவே அத்தனை நேர்த்தியாகக் கப்பல் தயாரானது. இதைக் கடலில் மிதக்க விட வேண்டும் என்று சகோதரர்கள் கோரிக்கை வைத்தவுடன், கப்பல் மிதப்பதற்குத் தேவையான எடையை அதிகப்படுத்தினார்கள். தகவல் தொடர்பு கருவியை இணைத்தனர். பீட்டர்ஹெட் கடல் பகுதியில் மிதக்க விட்டனர். தற்போது கப்பல் கயானா நாட்டுப் பகுதியில் தென் அமெரிக்கக் கண்டத்தில் மிதந்து கொண்டிருக்கிறது.

'அட்வஞ்சர்' என்று பெய ரிடப்பட்டுள்ள இந்தச் சிறிய கப்பல் அவ்வப் போது கரையைத் தொடுவதும் உண்டு. அப் போது கரையில் உள்ளவர்கள் 'கரை ஒதுங்கினால் மீண்டும் கடலில் விட்டுவிடுங்கள்' என்று எழுதப்பட்டிருக்கும் செய்தியைப் படித்து விட்டு மீண்டும் கடலுக்குள் விட்டுவிடுகிறார்கள்.

ஃபெர்குசனும் ஹாரியும் தாங்களாகவே கப்பல் செய்ய ஆரம்பித்தனர். குழந்தைகளின் ஆர்வத்தை நாங்கள் எப்போதும் தடை செய்ததே இல்லை. ஏதோ விளையாட்டுக்காகச் செய்கிறார்கள் என்று தான் நினைத்தோம். ஆனால் அவர்கள் மிக அழகான பொம்மைக் கப்பலை உருவாக்கிவிட்டார்கள். நண்பர்களும் அசந்து போனார்கள். இந்தக் கப்பலைக் கடலில் விட வேண்டும் என்று குழந்தைகள் கோரிக்கை வைத்தனர்.

கடலில் விட்டால் கப்பல் காணாமல் போய்விடும் என்று சொன்னோம். என்ன ஆனாலும் பரவாயில்லை, கப்பல் கடலில் செல்ல வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். அதற்குப் பிறகுதான் கப்பல் மிதந்து செல்வதற்குத் தேவையான எடையை அதிகரித்தோம். ஜிபிஎஸ் கருவியைப் பொருத்தினோம். அதனால் கப்பல் எங்கே செல்கிறது என்ற தகவல் எங்களுக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு நாளும் பள்ளியிலிருந்து வந்தவுடன், கப்பல் குறித்த செய்திகளைத்தான் கேட்பார்கள். கப்பலுக்காக ஒரு ஃபேஸ்புக் பக்கத்தை ஆரம்பித்து, கப்பல் குறித்த தகவல்களை எழுதி வருகிறார்கள்.

உலகம் முழுவதும் ஏராளமானவர்கள் இந்தப் பக்கத்தைப் பின்தொடர்கிறார்கள். கப்பலைப் பார்ப்பவர்கள் படங்கள் எடுத்து அனுப்புகிறார்கள். ஓராண்டை நெருங்கும் நேரத்தில் கடந்த வாரம் கப்பல் தன் பயணத்தை நிறுத்திக் கொண்டு விட்டதாக நினைத்தோம். கப்பல் இடத்தை விட்டு நகரவில்லை. தகவல் தொடர்பு கருவிக்கு அனுப்பிய சமிக்ஞைக்குப் பதில் கிடைக்கவில்லை. வெற்றிகரமாக 300 மைல்களைக் கடந்ததே பெரிய விஷயம் என்று நினைத்தோம். ஆனால் மீண்டும் கப்பல் நகர ஆரம்பித்து விட்டது என்கிறார் மாக்நெயில் ஃபெர்குசன்.

# வலி நிவாரணியால் இப்படியும் நிகழுமா?



இங்கிலாந்தைச் சேர்ந்த 23 வயது ஸ்காட் பர்டி சமீபத்தில் வலி நிவாரணி மாத்திரைகளைத் தொடர்ச்சியாக எடுத்துக்கொண்டார். அதன் விளைவாகத் தற்போது பெண் மேல் உள்ள ஆர்வம் ஆண் மீது திரும்பிவிட்டதாகக் குற்றம் சுமத்துகிறார்.

6 மாதங்களுக்கு முன்பு ஒரு கார் விபத்தில் பாதம் பாதிக்கப்பட்டது. அந்த வலியைக் குறைக்க, மருத்துவர்கள் வலி நிவாரணி மாத்திரையைப் பரிந்துரைத்தனர். வலி தொடர்ச்சியாக இருந் ததால் வலி நிவா ரணியைத் தொடர்ந்து கொண்டிருந்தேன். என் காதலியின் மீது மிகுந்த அன்பும் மரியாதையும் வைத்திருந்தேன். கொஞ்சம் கொஞ்சமாக அவர் மீது இருந்த காதல் குறைந்து கொண்டே வந்தது. அவரிடம் பேச வேண்டும், பழக வேண்டும் என்ற எண்ணமே இல்லாமல் போய்விட்டது. இதனால் என் காதலிக்கு மிகுந்த மன வருத்தம் ஏற்பட்டது. அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டோம். என்னுடைய இந்த மாற்றம் குறித்து ஒன்றும் புரியாமல் மிகவும் குழப்பம் அடைந்தார். எனக்கு காதலி மீது தான் ஆர்வம் குறைந்ததே தவிர, பிற ஆண்களைப் பார்க்கும்போது காதல் ஊற்றெடுத்தது. 6 மாதங்களுக்குப் பிறகு காதலி, உறவை முறித்துக் கொண்டு சென்றுவிட்டார். அது குறித்து எனக்கு வருத்தமோ வலியோ இல்லாததை நினைத்து ஆச்சரியமாக இருந்தது. யோசித்துப் பார்த்தேன். இந்த வலி நிவாரணியைத் தவிர, வேறு எதையும் புதிதாக எடுத்துக் கொள்ள வில்லை. மாத்திரைக்கும் என்னுடைய விருப்ப மாற்றத்துக்கும் தொடர்பு உண்டா என்று ஆராய்ச்சி செய்தேன். இறுதியில் நான் ஓரினச் சேர்க்கையாளராக மாறியதற்குக் காரணம் இந்த மாத்திரைதான் என்ற முடிவுக்கு வந்தேன். என் காதலியை நேரில் சந்தித்து, இனி எப்போதும் உன்னை ஏற்றுக்கொள்ளவே இயலாது என்றும் என்னைத் தவறாக நினைக்க வேண்டாம் என்றும் சொல்லிவிட்டேன். முதலில் நம்ப மறுத்தவர், பிறகு நான் நேர்மையாக ஒப்புக்கொண்டேன் என்று பாராட்டினார். இந்த வலி நிவாரணி மீது நான் குற்றம் சுமத்தினாலும் இப்படி என் விருப்பம் மாற்றம் அடைந்ததில் மகிழ்ச்சியாகவே இருக்கிறேன் என்கிறார் ஸ்காட் பர்டி. ஆனால் இந்தக் குற்றச்சாட்டை மருந்து நிறுவனம் மறுத்திருக்கிறது.



# கோடையில் சருமத்தை பராமரிப்பது எப்படி?

கோடைக்காலத்தில் வெள்ளையாக இருக்கும் பலரது சருமம் நிறம் மாறி பழுப்பு நிறத்திலோ அல்லது கருமையாகவோ காணப்படும். இப்படி வெயில் காலத்தில் உங்கள் சரும நிறம் மாறுபடாமல் இருக்க வேண்டுமானால், இதுவரை மற்ற காலங்களில் சருமத்திற்கு கொடுத்து வந்த பராமரிப்புக்களை விட சற்று அதிகமாக சருமத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

கோடையில் சருமம் கருமையாகாமல் இருக்க வேண்டுமானால், சருமத்திற்கு பேஸ்பேக், பேஸ் மாஸ்க், ஸ்கரப், பேஷியல் போன்ற பராமரிப்புக்களைக் கொடுக்க வேண்டும். அதற்காக கடைகளில் விற்கப்படும் கெமிக்கல் கலந்த பொருள்களால் பராமரிப்புக்களைக் கொடுப்பதை விட, இயற்கையாக வீட்டில் இருக்கும் பொருள்களைக் கொண்டே பராமரிப்பு கொடுத்தால், சரும ஆரோக்கியம் மேம்படுவதோடு, அழகும் மேம்பட்டுக் காணப் படும். அதோடு இயற்கை பொருள்களைக் கொண்டு பராமரிப்புக்களைக் கொடுக்கும்போது, அது சருமத்தில் எவ்வித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.

மஞ்சள் தூள் மற்றும் கடலை மாவு பேஸ் பேக் ஒரு பௌலில் 2 மேசைக் கரண்டி கடலை மாவு, 1 சிட்டிகை மஞ்சள் தூள், ஒரு மேசைக்கரண்டி ஸ்பூன் ஒரேஞ் தோல் பொடி, ஒரு மேசைக்கரண்டி பால் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து, பின் உலர்ந்த பேஸ்பேக்கின் மேல் ரோஸ் வோட்டரைத் தெளித்து, மென்மையாக ஸ்கரப் செய்து; தேய்த்துக் கழுவுங்கள். இப்படி செய்தால், சருமத்தில் இருக்கும் கருமை மறைந்து, சருமம் அழகாக ஜொலிக்கும்.

# பாலியல் வன்முறைகள்: நாளுக்கு நாள் அதிகரிப்பு

கடந்த சில ஆண்டுகளாக பெண்களுக்கு எதிரான குற்றச்செயல்கள் அதிகரித்துக் கொண்டேதான் இருக்கின்றன. மனைவியாக இருந்தாலும் அவரது அனுமதியின்றி உறவு கொள்ள முயல்வது குற்றம் என்கிற அளவு Marital Rape பற்றி விவாதம் வந்துகொண்டிருக்கும் ஒரு நாகரிகமடைந்த சமூகத்தில், தினந்தோறும் தொடர்ந்து நடக்கும் பாலியல் வன்முறைகள் பெரும் கவலையையும், பதற்றத்



தையும் உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன.

"பொதுவாக இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவோர் சிறு வயதில் தாங்களும் உடல் மற்றும் உணர்வு சார்ந்த துன்புறுத்தல்களுக்கு ஆளாகி இருப்பர். பெற்றோரின் அன்பும், பாதுகாப்பும் இல்லாமல் வளர்ந்திருக்கலாம். மேலும் பெண்களை மதிக்காத சமூகத்தில் வளர்க்கப்பட்டிருக்கலாம்.

பெண்களை இவ்வகையில் அடக்கி / அவமானப்படுத்துவதன் மூலம் அவர்களை இழிவுபடுத்தி ஒடுக்கி விட்டோம் என்றும், தங்களை சக்திமிக்கவர்களாகவும் இவர்கள் உணர்கிறார்கள். அப்படி தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும்/ ஒழுங்குபடுத்துவதாகவும், ஆணாதிக்க சிந்தனையிலிருந்தும் பெண் தனக்கு கீழே என்கின்ற சிந்தனை மேலோங்கி இருப்பதாலும் இப்படி செய்வதுண்டு.

## காரணங்கள் என்ன?

ஊடகங்கள் பெண்களை கவர்ச்சிப் பொருளாகக் காட்டி பாலின ஈர்ப்பை ஏற்படுத்திக் கொண்டே இருக்கின்றன. இதுவே, பெண்கள் மேல் மரியாதை இல்லாமல், அவர்கள் ஆண்களின் தேவைக்கென படைக்கப்படும் பொருள்கள் எனும் எண்ணத்தை ஆண்கள் மத்தியில் அதிகப்படுத்தி இருக்கிறது.

நிறைவேறாத பாலியல் தேவைகள் காரணமாகவும் பலாத்காரங்கள் நடக்கின்றன. இனப்பெருக்கத்துக்கு தயாரான ஆண்கள் தங்களுடைய உடல் தேவை தீராத பட்சத்தில் இது அடக்கி வைக்கப்பட்டு எதிர்பாலினத்தினரின் சம்மதம் இல்லாமல் பாலியல் பலாத்காரம் செய்பவர்களாகவும் இருக்கிறார்கள். செக்ஸ் பற்றிய சரியான புரிதல் இல்லாமல் இருப்பதாலும், மது உள்ளிட்ட போதைக்கு உள்ளாகும் போதும் இதுபோன்ற பலாத்காரங்கள் நிகழ்வதற்கு காரணமாக இருக்கிறது.

பெண்களின் உடை பலாத்காரத்துக்கு காரணமல்ல. இது, ஒரு ஆண் செய்த தவறை அர்த்தம் கற்பிக்கக் கொடுக்கும் ஒரு காரணமே தவிர இதில் உண்மையில்லை. இதைத் தடுக்க எடுக்கும் முக்கிய வழி இல்லையெனில், தவறு இழைத்தவரை விட்டு பாதிக்கப்பட்டோரையே குற்றம் சொல்ல பழகிவிடுவோம்.






# மருக்கள் உதிர இயற்கையான வழிமுறைகள்


சருமத்தின் அழகைக் கெடுக்கும் வகை யில் வரும் மருக்களை உதிரச் செய்யும் சில இயற்கை வழிகள் உள்ளன. அவற்றைப் பின்பற்றினாலே மருக்களை எளிதில் உதிர வைக்கலாம்.

உடலில் அக்குள், கழுத்து, மார்பு போன்ற பகுதிக ளில் வரும் மருக்கள், வலியை ஏற்படுத்தாமல் இருக்கலாம். இருப்பினும் அவை அழகைக் கெடுக்கும் வகை யில் இருக்கின்றமையால், அதை எப்படியாவது நீக்க வேண்டும் என நினைப்போம். இன்று சருமத்தின் அழகைக் கெடுக்கும் வகையில் வரும் மருக்களை உதிரச் செய்யும் சில இயற்கை வழிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பின்பற்றினாலே மருக்களை எளிதில் உதிர வைக்கலாம்.

1 1/2 மேசைக்கரண்டி விளக்கெண் ணெயில் ஒரு மேசைக்கரண்டி பேக்கிங் சோடா சேர்த்து நன்கு கலந்து, மருக்களின் மீது தடவி 30 நிமிடம் கழித்து, வெதுவெதுப்பான நீரால் கழுவ வேண்டும். இப்படி ஒரு நாளைக்கு 2 - 3 முறை என 15 நாள்கள் தொடர்ந்து செய்து வந்தால், மருக்கள் உதிர்ந்துவிடும்.

ஒரு எலுமிச்சை பழத்தை இரண்டாக வெட்டி, அதன் ஒரு பாதியைப் பிழிந்து சீறு எடுத்து, பஞ்சுருண்டையில் நனைத்து மருக்களின் மீது தடவுங்கள். இப்படி தினமும் செய்து வந்தால், மருக்கள் விரைவில் காய்ந்து உதிரும். ஒருவேளை இச்செயலால் மருக்களின் தோற்றத்தில் மாற்றத்தைக் கண்டால், தோல் மருத்துவரிடம் சென்று ஆலோசனைப் பெறுங்கள்.





# ஆண்களுக்கு நிகராக பணிபுரியும் பெண்களுக்கு மன அழுத்தம் ஏன்?

அலுவலகத்தில் ஆண்களுக்கு நிகராகப் பணிபுரியும் பெண்களுக்கு அதிக அளவில் மனஅழுத்தம் ஏற்படுவதாக ஆய்வில் தெரிய வந்திருக்கிறது.

இன்றைய அவசர யுகத்தில் ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் ஓடிக் கொண்டிருக்கின்றனர். ஏறக்குறைய ஆண்கள் பார்க்கும் அனைத்துப் பணிகளையும் பெண்களும் மேற்கொள்கின்றனர்.

ஒரே அலுவலகத்தில், ஆண்கள் செய்யும் அதே வேலையைச் செய்யும் பெண்களுக்கு, மன அழுத்தம் அதி



கம் ஏற்படுவதாக அந்த ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. பணிக்குச் செல்லும் பெரும்பாலான பெண்கள் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

பெண்களுக்கு ஏற்படும் மன அழுத் தம் காரணமாக, வேலைகளில் கவ னம் செலுத்த முடியாமை, வெறுமையாக உணர்வது, தன்னம்பிக்கை இழப்பது, குற்ற உணர்வு, முடிவுகள் எடுப்பதற்குச் சிரமப்படுவது, ஞாபக மறதி, அதிதூக்கம் அல்லது தூக்கம் இன்மை, தற்கொலை எண்ணம் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின் றன.

நடுத்தர மற்றும் உயர்மட்ட நிர்வாகப் பணியில் உள்ள 6 சதவீத பெண்கள், பணியின் காரணமாக, ஆண்களைவிட அதிக மன அழுத்தத்துக்கு உள்ளாகின்றனர்.

சொந்த வாழ்க்கைப் பிரச்சினைகளையும், அலுவலகப் பிரச்சினைகளையும் போட்டு குழப்பிக்கொள்வது பெண்களின் மனஅழுத்தத்துக்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது.

அதேநேரம், காரணமே இல்லாமலும் பெண்களுக்கு மன அழுத்தம் ஏற்படுகிறது. பெண்கள் தங்கள் பணியை விரைவாக வும், துல்லியமாகவும் செய்து முடிக்க விரும்புகின்றனர். அதற்கு உரிய ஒத்துழைப்புக் கிடைக்காதபோது துவண்டு விடுகின்றனர் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## அருளாளர்களை புனிதர்களாக்க கூடிவரும் கர்தினால்கள்

அருளாளர்களான திருத்தந்தை 6ஆம் போல் சான் சால்வடோர் பேராயர் ஆஸ்கர் ரொமேரோ திருநற்கருணையை ஆராதிப்போர் சபையை நிறுவிய பிரான்செஸ்கோ ஸ்பினெல்லி அடிகளார் இயேசு கிறிஸ்துவின் எளிய பணியாளர்கள் சபையை நிறுவிய மரிய கத்தரீனா காஸ்பெர் மற்றும் திருஅவையின் மறைப்பணி சகோதரிகள் சபையை நிறுவிய நசரியா இஞ்ஞாசியா ஆகியோரை புனிதர்களாக உயர்த்தும் ஒப்புதல் அறிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவான்:18:37
ஆசிரியர் : அருள்திரு ஏபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## கொரிய தீபகற்பத்தில் புதிய அத்தியாயம்

இதுவரை துப்பாக்கிகளை ஏந்தி நின்ற கரங்கள் இனி ஆயுதங்களைக் களைந்து கரம் குலுக்க தயாராக உள்ளன என்பதை இரு அரசுத் தலைவர்களும் கரம் குலுக்கிய நிகழ்வு தெளிவாக்குகிறது. கொரிய தீபகற்பத்தில் ஒரு புதிய அத்தியாயம் துவங்கியுள்ளது. இது உலக அமைதி நோக்கி எடுக்கப்பட்டுள்ள முதல் அடி என கொரிய ஆயர் பேரவைத் தலைவர் கூறியுள்ளார்.

# அன்னையிடம் நம்பிக்கை கொண்டோராகவே நெதர்லாந்து நாட்டிலுள்ள தமிழ்மக்களும்!

### 'ஆன்மீக உதயம்' ஆசிரியர் அன்ரன் ஜெயக்குமார் தெரிவிப்பு



நெதர்லாந்து தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப்பணியக ஏற்பாட்டில் பெனு திருத்தலம் நீர் ஊற்றை நோக்கி திருயாத்திரை 12 மே 2018 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. மரி அன்னை எல்லாருக்கும் அன்னை என்ற தலைப்பில் நடைபெற்ற மேற்படி திருயாத்திரையை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி ஜோசவ் பொன்னையா ஆண்டகை தலைமை தாங்கி நடத்தினார்.



'ஆன்மிக உதயம்' பத்திரிகை ஆசிரியர் அன்ரன் ஜெயக்குமரர் அவர்கள் (படத்தில் உள்ளார்) நெதர்லாந்து தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப் பணியக ஏற்பாட்டில் பெனு திருத்தலம் நீர்ஊற்றை நோக்கி திருயாத்திரை பற்றித் தொவிக்கும்போது 1998ஆம் ஆண்டு முதல் முதலாக இந்த ஆன்மிகத் திருயாத்திரை ஆரம்பிக்கப்பட்டது. எமது தாய் நாட்டில் கிறிஸ்தவர்கள் என்றாலும் சரி இந்துக்கள் என்றாலும் சரி மரியன்னை என்றால் அன்புடனும் பக்தியுடனும் வழிபடுவர்.

இங்கு எமது நாட்டில் மிகவும் பிரசித்தி பெற்ற மரியன்னை தேவாலயமாம் மருதமடு அன்னையின் தேவாலயம் தொடர்புபடுகிறது.

நெதர்லாந்திலும் எமது தாய் நாட்டு மக்கள் அன்னையிடம் நம்பிக்கை கொண்டவர்களாகவே இருக்கின்றனர். அதன் காரணமாக இப் புலம் பெயர்ந்த மண்ணிலும் எம்மக்கள் தாய் நாட்டை போல பெனு அன்னையிடமும் அந்த அன்னை எமக்கு எப்பவும் பரிந்து பேசுவார்: எமக்கு விடுதலை தருவார் என்ற அசையாத நம்பிக்கை இருப்பதனால் படை எடுக்கின்றனர்.

1998இல் நாம் முதல் முதலாக திருயாத்திரை எடுக்கும் போது 440 பேருடன் தனிய நெதர்லாந்து மக்களுடன் ஆரம்பித்த திருயாத்திரை பின்பு ஜேர்மன் தமிழ் மக்களும் இணைந்து காலம் செல்ல செல்ல ஐரோப்பாவின் பல பாகங்களிலும் இருந்து பெனு அன்னை திருத்தலம் நோக்கி வருகை தருகின்றனர். மக்கள் தொகையும் வருடா வருடம் அதிகரித்து கொண்டே இருக்கின்றது. தற்பொழுது 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வருகை தருகின்றனர்.

நெதர்லாந்து தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் ஒவ்வொரு வருடமும் மே மாதம் இரண்டாம் சனிக்கிழமை பெனு அன்னை திருத்தலம் புனித நீர் ஊற்றை நோக்கிய திருயாத்திரை முன்னெடுத்துச் செல்லுகின்றது. பெனு அன்னை தாய் எமது உறவுகளுக்கு கோடானகோடி அற்புதங்களையும் நன்மைகளையும் செய்து வருகின்றார். அதனால் மக்கள் பெனு அன்னை திருத்தலம் நோக்கி பக்தியோடு குடும்பமாக பங்கெடுக்கின்றனர். புலம்பெயர்ந்தாலும் மொழியால் ஒன்று பட்டு அன்னையிடம் எமக்கு பரிந்து பேச பல நாடுகளில் இருந்து வருகை தந்து அவரின் அன்பை பெற்றுச் செல்லுகின்றனர்.

எம் உறவுகளை சந்திக்கின்ற இடமாகவும் பக்தி முயற்சியில் ஈடுபட எம்மை அழைக்கின்ற ஒரு புனித இடமாகவும் இத் திருத்தலம் அமைவதால் எமது புலம்பெயர் உறவுகளுக்கு இத் திருத்தலம் ஒரு மகிமை நிறைந்த் முக்கியமான இடமாக விளங்குகின்றது.- என்றார்.

## உண்மையின் எண்ணங்கள்

### பெனு திருத்தலம் நீர்ஊற்றை நோக்கி திருயாத்திரை

நெதர்லாந்து பெனு திருத்தலம் நீர்ஊற்றை நோக்கி திருயாத்திரையை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி ஜோசவ் பொன்னையா ஆண்டகை தலைமை தாங்கி நடத்தினர் என்பது சிறப்பு செய்தியாகும். இதற்கான ஊடகப்பணிகளை மேற்கொண்ட ஆன்மீக உதயம் பத்திரிகை ஆசிரியர் அன்ரன் ஜெயக்குமரர் அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர். இலங்கை வாழ் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் சிதறி வாழ்ந்தாலும் தாம் வாழும் நாடுகளில் தமது ஆழமான விசுவாசத்தையும் பாரம்பரியங்களையும் விட்டு விடாது தொடர்ந்தும் தாய் மொழியில் இறைவழிபாடுகளிலும் யாத்திரைகளிலும் உற்சாகமாகப் பங்கேற்று வருகின்றனர்.

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து நெதர்லாந்தில் வசிக்கும் கிறிஸ்தவ மக்களும் இந்து மக்களும் மதவேறுபாடுகளை மறந்து அன்போடும் மகிழ்வோடும் விழாக்களில் பங்கேற்கின்றனர். ஐரோப்பிய ஆயர்கள் தெரிவிக்கும் ஓர் உண்மை புலம்பெயர்ந்து தமிழ் மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு வந்தமையால் ஒரு ஆசீர்வாதம் கிடைத்துள்ளது என்பதாகும். அதாவது தமிழ் மக்கள் விசுவாச அர்ப்பண வாழ்வைப் பார்த்து - அவர்கள் பக்தியுடன் விழாக் கொண்டாடும் தன்மையைப் பார்த்து ஐரோப்பிய நாடுகளில் வாழும் மக்கள் தம் விசுவாசத்தை ஆழப்படுத்தியுள்ளனர்.

இவர்களின் வருகையால் இங்கு நடைபெறும் விழாக்கள் சிறப்பும் மேன்மையும் முன்னுரிமையும் பெற்றுள்ளன. அவர்களின் வருகையால் மூடப்பட்ட ஆலயங்கள் பல திறக்கப்பட்டுள்ளன. மூடப்படும் நிலையில் இருந்த பல ஆலயங்கள் சிறப்புடன் செயற்படுகின்றன. புலம்பெயர் தமிழ் மக்களின் வருகையால் ஐரோப்பிய நாடுகளில் வாழும் மக்களுக்கு கிடைத்த ஓர் ஆசீர்வாதம் இதுவாகும் என்கின்றனர்.

## ஞாயிறு மறைக்கல்வியை கட்டாயமாக்கும் முயற்சி

இலங்கையில் 6 முதல் 19 வயது வரையுள்ள அனைத்து மதங்களின் மாணவர்களுக்கு ஞாயிறு மறைக்கல்வி வகுப்பை கட்டாயமாக்கும் பரிந்துரை ஒன்று ஒப்புதலுக்காகக் காத்திருக்கின்றது. இலங்கை நாட்டின் புத்த மதத்தினர் கத்தோலிக்கர் இந்துக்கள் மற்றும் ஏனைய மதங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு அவரவர் மதங்களின் கல்வி ஞாயிறுகளில் நடத்தப்பட பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஞாயிறுகளில் கல்விப் பாடங்கள் சார்ந்த போதனைகள் நடத்தப்படுவதற்கு எதிர்ப்புகள் எழுந்தமையைத் தொடர்ந்து 2017ஆம் ஆண்டில் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மல்கம் கர்தினால் இறஞ்சித் அவர்களும் புத்தமதத் தலைவரும் இப் பரிந்துரையை அரசிடம் தெரிவித்தனர்.

பேராயர் மல்கம் கர்தினால் இரஞ்சித் அவர்கள் அரசுத்தலைவருக்கு எழுதிய கடிதத்தில் ஞாயிறு நாள்களில் நடைபெறும் ரியுசன் கல்வி வகுப்புகள் காலை 6 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை தடை செய்யப்பட வேண்டும் இதனால் மறைக் கல்வி வகுப்புகளுக்கு இடையூறு ஏற்படாது என்று குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை கத்தோலிக்க திருஅவையின் 12 மறை மாவட்டங்களில் ஆயிரத்து 155 ஞாயிறு மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இவற்றில் ஏறத்தாழ 2 இலட்சத்து இரண்டாயிரம் மாணவர்களுக்கு 13 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கற்றுக்கொடுக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புனித யோசப் வாஸ் அடிகளின் திருச்சுரூபத்தை நிறுவுவோம்

### அவர் இறங்கிய கொழும்புத்துறை துறைமுகத்தில்



எமது நாட்டின் திருத்தூதர் புனித யோசப் வாஸ் அடிகளார் யாழ்ப்பாண மண்ணில் காலடி வைத்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கொழும்புத்துறை துறைமுகத்தில் அவரின் திருச்சுரூபத்தை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் கலாநிதி யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் கொழும்புத்துறை எழிலூரில் நடைபெற்ற புனித யோசப் வாஸ் ஆண்டு நிறைவு தின விழாவின்போது வேண்டுகோள் விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: திருச்சுரூபம் அமைக்கும் பணிக்கு தேவையான உரிய உத்தரவுகளை சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு அனைவருடைய சம்மதத்தோடும் ஒத்துழைப்போடும் இதனைச் செய்யவேண்டுமென்று வலியுறுத்தினார்.

மணியந்தோட்டம் பங்குத்தந்தை எஸ். எம். செபஸ்ரியன் அடிகளாரால் ஏற்பாடு செய்யப்பட்ட புனித யோசப் வாஸ் ஆண்டுநிறைவுதின விழாவின் ஆரம்பத்தில் மேற்படி துறைமுகத்திலிருந்தே புனிதரின் திருச்சுரூபம் எழிலூர் புனித. வேளாங்கண்ணி ஆலயத்திற்கு பவனியாக எடுத்துவரப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

## புனித வாரத்தில் எல்சல்வடோரில் குருவானவர் கொலை

எல்சல்வடோர் நாட்டில் பெரிய வியாழன் சிறப்பு வழிப்பாட்டுசடங்குகளை நிறைவேற்றச்சென்ற வழியில் தீவிரவாதக் கும்பல் ஒன்றால் சான் மைக்கேல் என்ற 36 வயதான குருவானவர் ஒருவர் கொல்லப்பட்டமை குறித்து தன் கண்டனத்தை வெளியிட்டுள்ளது அந்நாட்டு தலத்திருஅவை. மரணம் குறித்து உடனடியாக விசாரணைகள் துவக்கப்பட்ட வேண்டும் என்ற விண்ணப்பத்தையும் அவை விடுத்துள்ளன.

# டோனி தனது முடிவுகள் குறித்து பரிசீலனை செய்ய வேண்டும்

## முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கர் குற்றசாட்டு

சென்னை அணியின் தலைவர் டோனியின் முடிவுகள் குறித்து, இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல் தொடரின் 33 ஆவது லீக் ஆட்டத்தில் சென்னை அணி - கொல்கத்தா அணிக்கு எதிராக தோல்வியைச் சந்தித்தது. இதனைத் தொடர்ந்து, இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான சுனில் கவாஸ்கர், ஆங்கில நாளிதழ் ஒன்றில் கட்டுரை எழுதியுள்ளார்.

அதில் அவர் கூறுகையில்-

'டு பிளீசிஸிஸை தொடக்க வீரராகக் களமிறக்கும் உத்தியை டோனி மறுபரிசீலனை செய்ய வேண்டும். இதனால் ஐ.பி.எல் போட்டியில் அதிக ஓட்டங்கள் குவித்துள்ள அம்பத்தி ராயுடுவால், அதிக பந்துகளை எதிர்கொள்ள முடியாமல் போய்விடுகிறது.

நடுவரிசையில் களமிறங்குவதால் உடனடியாக அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளார் ராயுடு. கொல்கத்தாவுக்கு எதிரான ஆட்டத்தில் பிராவோவை, டோனி சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

இதற்கான காரணத்தைப் புரிந்துகொள்வது கடினம். துடுப்பாட்டம், பந்துவீச்சு





இரண்டிலும் நல்ல நிலையில் உள்ளார் பிராவோ. அதேசமயம் ஜடேஜா ஓரளவு தடுமாறி வருகிறார். இரண்டு பிடிகளை நழுவவிட்டதில் அதைப் பார்க்கலாம். - எனத் தெரிவித்துள்ளார்.

# தெற்காசிய கனிஷ்ட மெய்வன்மைப் போட்டிகள் நேற்று சுகததாஸ விளையாட்டரங்கில் ஆரம்பம்




கொழும்பு, மே.06

தெற்காசிய கனிஷ்ட தடகளப் போட்டிகள் நேற்றுக் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் ஆரம்பமாகியுள்ளன.

இம்முறை போட்டித் தொடரில் இலங்கையிலிருந்து 84 வீர வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளதுடன், இந்தியாவிலிருந்து 59 வீர, வீராங்கனைகள் கலந்துகொள்ளவுள்ளனர். எனவே இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான போட்டியாகவே தெற்காசிய கனிஷ்ட தடகளப் போட்டி தொடர் அமையவுள்ளது.

இரண்டு நாள்கள் நடைபெறும் இப் போட்டியில் 14 தனிநபர் போட்டிகளும், இரண்டு அஞ்சல் ஓட்டப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

2 ஆவது தடவையாகவும் இலங்கையில் நடைபெறவுள்ள இத் தொடரில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு, நேபாளம் மற்றும் பூட்டான் உள்ளிட்ட 7 நாடுகளைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் கலந்துகொண்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சங்காவின் சாதனையை தட்டிச் சென்ற இளம் வீரர்

கொழும்பு, மே.06

இலங்கை அணியின் முன்னாள் ஜாம்பவான் குமார் சங்கக்கார வென்ற, கண்டி திரித்துவ கல்லூரியின் 'ரைட் தங்க பதக்கத்தை' இம்முறை இளம் வீரர் ஹசித பொயாகொட தட்டிச் சென்றுள்ளார்.

கண்டி திரித்துவக் கல்லூரியின் மிகவும் உயரிய விருதாக





கருதப்படும் இந்த விருது கல்லூரியின் சகலதுறைகளிலும் சிறந்து விளங்கும் வீரருக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இந்த விருதை இலங்கை அணியின் முன்னாள் வீரரான குமார் சங்கக்கார 1996 ஆம் ஆண்டு வென்றிருந்தார்.

இலங்கை 19 வயதுக்குற்பட்டோர் அணிக்காக விளையாடி வரும் ஹசித பெயாகொட இன்னிங்ஸொன்றி அதிக ஓட்டத்தை எடுத்த வீரர் என்ற சாதனையை பெற்றார்.

இவ்வருடம் நடைபெற்ற உலகக்கிண்ண தொடரின் நியூஸிலாந்து அணிக்கெதிரான போட்டியில் பொயாகொட 158 பந்துகளில் 191 ஓட்டங்களை பெற்று அசத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் பதவியில் இருந்து பணிநீக்கம்

## பைசர் முஸ்தபா அதிரடி உத்தரவு

விளையாட்டுப் பணிப்பாளர் நாயகம் எச். எம். பி. பி. ஹேரத்தை பணிநீக்கம் செய்யுமாறு விளையாட்டுத்துறை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் பைசர் முஸ்தபா இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார் என அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று ஆரம்பமாகியுள்ள தெற்காசிய கனிஷ்ட தடகளப் போட்டிகளுக்காக இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்கும் வீர, வீராங்கனைகள் மற்றும் விளையாட்டு ஆலோசகர்களுக்குத் தேவையான தங்குமிட வசதிகளைச் சரியான முறையில் செய்து



கொடுக்கத் தவறியதன் காரணமாகவே அவரைப் பதவி நீக்கம் செய்யத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் விளையாட்டுப்பணிப்பாளர் நாயகத்தின் பணியை இடைநிறுத்தத் தீர்மானித்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மைதானத்தில் தாக்கிய மின்னல்: கால்பந்து வீரர் பரிதாபமாக பலி!



கேப்டவுன், மே 06

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உள்ளூர் கால்பந்து போட்டியின் போது மின்னல் தாக்கியதில் வீரர் ஒருவர் பரிதாபமாக இறந்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் வாஷ்ஹூ நகரில் ஒன்று இடத்தில் உள்ளூர் கால்பந்துப் போட்டி நடைபெற்றது. அப்போது திடீரெனக் கடுமையான மின்னல் தாக்கியது.

இதில் மாரிட்ஷ்பர்க் யுனைடெட் கால்பந்து அணி வீரர்கள் 3 பேர் உடலில் தீக் காயங்களுடன் பாதிக்கப்பட்டனர். இதனால் மயக்கமடைந்த அவர்கள் அனைவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் அணித் தலைவர் லுயாண்டோ நிஷான் கேஸ் 'கோமா' நிலைக்குச் சென்றார். இந்நிலையில், தீவிர சிகிச்சையில் பிரிவில் இருந்த அவர், சிகிச்சை பலனின்றி பரிதாபமாக இறந்தார். இந்த தகவலை அவர் விளையாடிய மாரிட்ஷ் பர்க் அணி உறுதி செய்துள்ளது.

# உலகக் கிண்ணக் கால்பந்து போட்டிக்கு தயாராகும் பிரபல வீரர்களின் முகமூடிகள்

2018 ஆம் ஆண்டு உலகக்கிண்ணக் கால்பந்து ரஷ்யாவில் அடுத்த மாதம் தொடங்க உள்ளன. இந்தப் போட்டிகள் ஜுன் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமாகி ஜுலை 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டியில் பிரான்ஸ், ஜேர்மனி, ஆர்ஜென்டீனா, போர்த்துக்கல் உட்பட 32 அணிகள் பங்கேற்று விளையாடவுள்ளன.

தென் அமெரிக்காவில் கால்பந்துப் போட்டி மிகவும் பிரபலமானது. ஆர்ஜென்டீனா, பிரேசில், சிலி, மெக்சிக்கோ நாட்டில் கால்பந்து முக்கியமான விளையாட்டு. மெக்சிகோவில் இருந்து ரஷ்யாவுக்கு ஏராளமான ரசிகர்கள் கால்பந்துப் போட்டியை காண நேரில் செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அப்போது ரசிகர்கள் தங்



களுக்குப் பிடித்த வீரர்களின் முகமூடியை அணிந்துகொண்டு போட்டியை ரசிப்பார்கள். இதனைப் பயன்படுத்தி ரசிகர்களுக்கு விற்பனை செய்ய மெக்சிக்கோ தொழிற்சாலைகள் மெஸ்ஸி, நெய்மர் போன்றவர்களின் முகமூடிகளை தயாரிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

மெஸ்ஸி, ரொனால்டோ ஆகியோரின் முகமூடிகள் இதுவரை 1000 இக்கும் மேல் தயாரித்து உடனடியாக விற்றுத் தீர்ந்துவிட்டதாக அந்தத் தொழிற்சாலை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## கையூட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையூட்டுப் பெற்ற குற்றச்சாட்டில் ஜனாதிபதி செயலகத்தின் பிரதம அதிகாரி, மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆகியோர் கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்ட நிலையில் ஜனாதிபதி நேற்று இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

கையூட்டு மற்றும் மோசடி என்பவற்றுக்கு எதிராக எதுவித பேதங்கள் இன்றியும் எந்தவொரு நபருக்கும் சலுகை அளிக்கப்படாமலும் சட்டத்தை உரியமுறையில் நடை முறைப்படுத்துமாறும் அவர் வலியுறுத்தினார்.

பொலனறுவை றோயல் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற சர்வதேசக்குடும்பநலசேவைகள் தினக் கொண்டாட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

மக்களின் கோபத்துக்கும் வெறுப்புக்கும் உள்ளாகும் வகையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் செயற்படக் கூடாது.

சிறந்தவொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக அரச சேவையிலிருந்து கையூட்டு முற்றாக இல்லாதொழிக்கப்பட வேண்டும்.

நான் அமைச்சராகச் செயற்பட்ட காலத்திலும் ஜனாதிபதியாகப் பதவி வகித்துவரும் கடந்த மூன்று வருட காலத்திலும் கையூட்டு, ஊழல், மோசடி, திருட்டு, வீண் விரயம் மற்றும் அரச சொத்துக்களின் முறையற்ற பாவனை என்பவற்றைத் தடுப்பதற்காக எதுவித வேறுபாடுகளும் இன்றிச் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றேன்.

மத்திய வங்கி தொடர்பில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்பாடுகளை உரியவாறு முன்னோக்கி கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டதைப் போன்று சிறிலங்கன் விமான சேவையில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பில் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவும் எதிர்காலத்தில் மிக முக்கியமான தகவல்களை நாட்டுக்கு வெளிப்படுத்தும்.

சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள எமது சுகாதாரசேவையிலிருந்துகையூட்டு இல்லாதொழிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது.

எமது நாட்டின் இலவச சுகாதார சேவையை மேலும் பலப்படுத்தி முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான சகல நடவடிக்கைகளும் அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளப்படும் – என்றார்.

குடும்ப நல சேவை உத்தியோகத்தர்களுக்கான புதிய சீருடையும் இந்த நிகழ்வில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

நாட்டின் சுகாதாரத் துறையின் முன்னேற்றத்துக்காக மேற்கொள்ளும் சிறப்பு சேவையை பாராட்டிச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் குடும்ப நல சேவைகள் சங்கத்தின் தலைவர் தேவிகா கொடிதுவக்கு உள்ளிட்டோருக்கு ஜனாதிபதி இதன்போது நினைவுப் பரிசில்கள் வழங்கி வைத்தார். (ஐ)

## முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும் உறுப்பினர்களுக்கு முதலமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த சில வருடங்களாக வடக்கு மாகாண சபையே முள்ளிவாய்க்கால்நினைவேந்தலை ஏற்பாடுசெய்துநடத்திவருகிறது. வழமைபோன்று இந்த முறையும் அது தொடர்பில் ஒழுங்குகளை மேற்கொள்ள இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனைவரும் ஒருமித்து ஒரே இடத்தில்நினைவுகூரவேண்டும் என்று யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. அன்று மதியம் 12.30மணிக்குப் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு நினை வேந்தலை நடத்துவது என்றும் தொடர்ந்து அஞ்சலி இடம்பெறும் என்றும் அவர்கள் நேற்று முன்தினம் விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளனர். அனைவரும் எந்தவித பாகுபாடுமின்றி அதில் கலந்துகொள்ளவேண்டும் என்றும் அவர்கள் அறிக்கையில் கோரியுள்ளனர். (ஐ)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களுக்கு இந்தச் சிறப்பு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற நிகழ்வில் ஆளுநர் ரெஜினோல்ட் குரே, 23 பட்டதாரிகளுக்கு இந்த நியமனத்தை வழங்கினார்.

யாழ்ப்பாணத்தில் 17பேர், வுனியாவில் 3 பேர்,மன்னார் கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவர் வீதம் இந்த நியமனம் வழங்கப்பட்டது.

பொது நிர்வாக சேவைகள் திணைக்களச் செயலாளர் சரஸ்வதி மோகனேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சட்டத்தரணி இ.இளங்கோவன் உள்ளிட்டவர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ)

## நாட்டைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேரர், வண. கோன்கஸ் தெனியெ ஆனந்த தேரர், அகுரதியேநந்ததேரர்உள்ளிட்ட பலரும், நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

இங்கு உரையாற்றிய பேராசிரியர் இந்துரகரே தம்மரத்ன தேரர், இலங்கையில் உள்ள சில பிரிவினைவாதிகள் நாட்டைப் பிளவுபடுத்தலாம் என்று நம்புகிறார்கள். அவர்கள் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள 20 ஆவது திருத்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று கூறினார்.

13 ஆவது திருத்தச்சட்டம் நடைமுறையில் இருக்கும் போது, நிறைவேற்று அதிகாரத்தைஒழிப்பதுஆபத்தானது என்றும், பௌத்த பிக்குகள் சுட்டிக்காட்டினர்.நாட்டைப்பிளவுபடுத்தக் கூடிய இந்தத் திருத்தச்சட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு, ஜனாதிபதியோ, பிரதமரோ ஆதரவு அளிக்கக் கூடாதுஎன்றும்அவர்வலியுறுத்தினார். (ஐ)

## வடக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேயால் நேற்று இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.

இதன்மூலம் வடக்கு மாகாணச் செயலாளர்கள் நியமனத்திலிருந்த இழுபறி நிலை முடிவுக்கு வந்தது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளராகக் கடமை வகித்த எஸ்.சத்தியசீலன், தற்போது மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளராக மாற்றம் பெற்றுள்ளார். மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளராக அவர் முன்னரும் பதவி வகித்திருந்தார்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளராகவிருந்த ரவீந்திரன் மத்திய அரசின் அமைச்சுச் செயலாளராக மாற்றம் பெற்றுச் சென்றார். அதனால் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் பதவியில் வெற்றிடமேற்பட்டது.

வடக்கு மாகாணச் செயலாளர்கள் நியமனம் தொடர்பில் மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேயும் பதில் முதலமைச்சரும் கல்வி அமைச்சருமான கலாநிதி க.சர்வேஸ்வரனும் கடந்த 19ஆம் திகதி சந்தித்தனர்.

இதன்போது, மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளராகப் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மோகனதாஸ் மாற்றப்படுவதுடன், பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராகப் பயிற்சி முகாமைத்துவத்துக்குப் பொறுப்பாகவிருக்கும் சிவபாதசுந்தரம், மாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராகவும் பயிற்சி முகாமைத்துவத்துக்குப் பொறுப்பாகத் தெய்வேந்திரன் நியமிக்கப்படுவார் என்று ஆளுநரால் பதில் முதலமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நியமனத்தை ஏற்க மறுத்த பதில் முதலமைச்சர், தமமால் பரிந்துரைக்கப்படுபவர்களை மட்டுமே செயலாளர்களாக நியமிக்க முடியும் என முரண்பட்டார்.

அத்துடன், அப்போது இந்தியாவில் இருக்கும் முதலமைச்சருடன் தொடர்பு கொண்டு இந்த நியமனங்கள் தொடர்பில் சர்வேஸ்வரன் பேசினார்.

கல்வி அமைச்சின் செயலாளராகத் தெய்வேந்திரன் நியமிக்கப்படாவிடின், அனைத்து நியமனங்களையும் உடன் நிறுத்துமாறு முதலமைச்சர் தொலைபேசியிலேயே கேட்டுக்கொண்டார். அதனையடுத்து ஆளுநரால் அன்றைய தினம் வழங்கப்படவிருந்த செயலாளர் மாற்றலை நிறுத்திவைக்குமாறு பதில் முதலமைச்சர் கேட்டுக் கொண்டார். அதனால் மாற்றல் கடிதங்களை வழங்குவதை ஆளுநர் பிற்போட்டிருந்தார்.

இதேவேளை, தெய்வேந்திரனுக்குஎதிராகமுன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடுத்து ஆளுநரின் பணிப்பில் அவர் அதிகாரங்கள் அற்ற பதவி நிலையில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பெற்றோல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டபோதும் ஒப்புதல் வழங்கப்படவில்லை. இதற்கு எதிர் வரும் செவ்வாய்க்கிழமை ஒப்புதலளிக்கப்படும் எதிர்பார்க்கப்படுகிறது.

பெற்றோலின் விலையை 15 ரூபாவாலும் டீசலின் விலை 10 ரூபாவாலும் அதிகரிப்பதற்கு அமைச்சரவைஒப்புதலளிக்கும் என நிதி அமைச்சின் உயர் மட்டம் தெரிவித்தது. (ஐ)

## கண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றச்சாட்டில் மேலும் மூவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் பேச் சாளர் தெரிவித்தார்.

பூஜாப்பிட்டிய, அம்ப தன்ன மற்றும் ஹகவத்த ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் மூவரும் வாக்குமூலங்கள் பெறப்பட்ட பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

கண்டி மாவட்டத்தில் திகன உட்பட சில பகுதிகளில் மார்ச் முதல் வாரத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட மகசன் பலகாய என்ற அமைப்பின் தலைவர் அமித் வீரசிங்க உட்பட 27 பேர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழகத்திலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

14 பேரையும் நேற்று அதிகாலை 2 மணியளவில் யாழ்ப்பாணம் பருத்தித்துறையை அண்மித்த கடற்பரப்பில் வைத்துப் பருத்தித்துறைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

திருகோணமலையைச் சொந்த இடமாகக் கொண்ட இவர்கள் 2006ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் காரணமாகக் கடல்வழியாகத் தமிழகம் சென்றுள்ளதுடன் கடந்த பன்னிரெண்டு வருடங்களாக புதுக்கேட்டையிலுள்ள இலங்கை அகதிமுகாமில் வசித்து வந்துள்ளனர்.

இவர்கள் வசித்த அகதி முகாமில் போதிய வசதிகள் இன்மை மற்றும் வதிவிடப் பிரச்சினை இருந்த நிலையில் இவர்கள் கடல் வழியாகச் சட்டவிரோமான முறையில் நாடு திரும்பியதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு வருகை தந்தவர்களில் ஒன்பது மாதக் குழந்தை உட்பட 5 சிறுவர்கள், மூன்று ஆண்கள் மற்றும் மூன்று பெண்கள் அடங்குகின்றனர்.

இவர்களைப் படகு மூலம் அழைத்து வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு படகோட்டிகளையும் கடற்படையினர் கைது செய்திருப்பதுடன் இவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விசாரணையின் பின்னர் மல்லாகம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தவிருப்பதாகக் காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர்.(ஐ-7)

## பொலிஸாருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே பொலிஸ் உத்தியோகத்தர் மீது வாள்வெட்டு நடத்தப்பட்டது.

திருட்டு உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவரே, பொலிஸ் உத்தியோகத்தர்மீதுதாக்குதல்நடத்தினார்என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-7)

## மாட்டிறைச்சிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

11.30 மணியளவில் இனந்தெரியாத குழு ஒன்றால் தீக்கிரையாக்கப்பட்டது.

இந்தக் கடை வலி.கிழக்குப் பிரதேச சபையினரால் நிர்வகிக்கப்படும் நிலையில் சம்பவம் குறித்து கடை நடத்துபவரால் வலி.கிழக்குப் பிரதேச சபையினருக்கு அறிவிக்கப்பட்டதுடன் அச்சுவேலிப் பொலிஸ் நிலைய[illegible]லும் முறையிடப்பட்டுள்ளது.

தீக்கிரையாக்கப்பட்ட கடை[illegible] அருகில் இன்னுமொரு மாட்டு இறைச்சிக் கடையும் உள்ளது. அதற்கு எந்தச் சேதமும் ஏற்படுத்தப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, அந்தப் பகுதியிலிருந்த சைக்கிள் கடையொன்று கடந்த வருடம் எரியூட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வாள்வெட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டனர் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், கைதடி, நுணாவில் மற்றும் வவுனியாப் பகுதியைச் சேர்ந்த 5 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து 4 வாள்களும் கைப்பற்றப்பட்டன.

சுன்னாகம் பகுதியில் வாள்வெட்டுவன்முறையைமேற்கொள்வதற்கு எத்தனித்தபோதே பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம், சுன்னாகம் பொலிஸார் எடுத்த நடவடிக்கையிலேயே சந்தேகநபர்கள் ஐவரையும் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் பல வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வாக்குமூலங்கள்பெறப்பட்ட பின்னர் சந்தேகநபர்கள் ஐவரும் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ-7)

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டிக்காட்டியுள்ளனர்.

புதிய அமைச்சரவை மாற்றத்திற்கேற்ப அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்றவர்களின் மத்தியில் ஏற்பட்டுள்ள விரக்தி நிலையே இவ்வாறானதொரு நிலைக்கு வித்திட்டுள்ளதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

– இவ்வாறு விரக்தியடைந்துள்ள அமைச்சர்கள் சிலர், தங்கள் பதவிகளை துறந்து நாடாளுமன்ற உறுப்பினர்களாகச் செயற்படத் தீர்மானித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

ஆட்சியிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் மத்தியிலும் விரக்திநிலை தோற்றம் பெற்றுள்ளதால், அவர்களில் சிலர் பதவிகளிலிருந்து விலகி எதிர்த்தரப்பில் அமர்வது குறித்து கவனம் செலுத்தி வருகின்றனர். அந்த வகையில், தெற்கு அபிவிருத்தி அமைச்சர் பகிரங்கமாகவே தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஒன்றிணைந்தஎதிரணியினரும் அமைச்சரவை மாற்றம் குறித்து அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர்.

அமைச்சரவை மாற்றம் ஏற்பட்டுள்ள இந்த சந்தர்ப்பத்தில் ஐ.தே.க. மற்றும் ஸ்ரீ.சு.க.யினர் எதிரணியில் அமர்ந்தால், நாடாளுமன்றத்திற்குள் தோற்றம் பெறும் கடுமையான நெருக்கடியை எவராலும் தடுக்க முடியாது எனவும் அரசியல் ஆய்வாளர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## தெருத்தேங்காய் வழிப் பிள்ளையாருக்கு!

# திருட்டுத் தேங்காய் சாபத்திற்கு!! தேங்காயின் விதிப் பயன் என்ன...?

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த பகுத்தறிவாளர்களின் (?) செய்கைக்கு குருநாகலில் நடந்த கூட்டத்தில் (கவனிக்கவும்:- குருநாகல் மஹிந்தர் வென்ற தொகுதி) எதிர்வினையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்ன சொன்னார் தெரியுமா?

தற்பொழுது தேங்காயின் விலை குறைந்துள்ளது. தேங்காய் உடைத்து சாபமிடுபவர்கள் ஒன்றிரண்டல்ல, நாடு முழுவதும் பத்து லட்சம் தேங்காயாவது உடையுங்கள். அவ்வாறு செய்தால் நாடு முழுவதும் தேங்காய்களுக்கு தட்டுப்பாடு வரும். தேங்காயின் விலை உயரும். வட மேல் மாகாண மக்கள் அதனால் பயனடைவார்கள்.

அரசின் தென்னந் தோட்டங்களில் தேங்காய்களை திருடி கோயிலில் உடைக்க வேண்டாம். எவ்வளவோ திருடியவர்களுக்கு தேங்காய் திருடுவது பெரிய விடயமல்ல.

இந்தப் பேச்சு ரணில் விக்கிரம



சிங்காவின் வலது சாரி முதலாளித்துவச் சிந்தனையின் வெளிப்பாடு.

திருட்டுத் தேங்காய் உடைத்து சாபமிட்டால் அதனைக் கடவுளே பார்த்துக் கொள்வார் - என்று நல்லாட்சியின் மகளிர் விவ கார அமைச்சர் சந்திராணி பண்டார அனுராதபுரத்தில் நின்று சொன்னார்!

இறுதியாக நடந்த இலங்கை அதிபர் தேர்தலுக்கு முன்னர் ஒருநாள் மதியம் காலி வீதியில் அமைந்த அலரி மாளிகையின் முன்னால் நின்று தேங்காயின் மீது கற்பூரம் கொளுத்தி அதனை வீதியில் அடித்து ராஜபக்ஷ ஆட்சிக்கு சாபமிட்ட ஒரு பெண்ணைப் பற்றியும் அறிந்திருப்பீர்கள்.

தனது கணவர், ஊடகவியலாளர் பிரகித் எகனிலியகொட காணமல் போய் ஆயிரம் நாள்கள் கடந்தும் அவருக்கு என்ன நடந்தது ? என்பது தெரியாத நிலையில் அந்தப் பெண் கதறிக்கதறி தேங்காய் உடைத்து சாபமிட்டதனால் தான் - அன்றைய அதிபர் தோல்வியுற்றார் என்று அவரின் ஆதரவாளர்கள் நம்பியிருப்பதன் விளைவா அதன் பின்னர் அவர்கள் சீனிகம தேவாலயத்தில் மைத்திரி - ரணில் கூட்டு நல்லாட்சிக்கு எதிராக நடத்திய தேங்காய் உடைப்பு சாபமிடும் போராட்டம் என்றும் யோசிக்கத்தூண்டுகிறது!!!

பாவம் தேங்காய் !!!! அது என்ன பாவம் செய்ததோ????

தேங்காயின் பயன்பாடு பற்றி சிறுவயதில் நாம் அறிந்ததற்கும், இன்றைய இலங்கை அரசியல்வாதிகள் தமது செய்கையின் மூலம் கூறும் பயன்பாட்டுக்கும் இடையில் பகுத்தறிவுவாதம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது!

**சிவாஜிலிங்கமும் உடைத்தார் தேங்காய்**

சிங்களத் தலைவர்கள்தான் இவ் வாறு தேங்காய் உடைக்கிறார்கள் என்று பார்த்தால் தமிழ்த்தலைவர்களும் தேர்தல் வெற்றிக்காக உடைக் கிறார்கள். இதில் வேடிக்கை என்ன வென்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச்சேர்ந்த வடமாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் கடந்த 2016 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடந்த ஜனாதிபதித்தேர்தலில் ஹிலாரி கிளிண்டன் வெற்றி பெறவேண்டும் என்று வடக்கில் நல்லூர்க் கந்தன் ஆலய முன்றிலில் ஆயிரத்து எட்டு தேங்காய்கள் உடைத்தார்.

சீனிகம தேவாலயத்தில் மார்க்ஸின் பிதாவின் புதல்வர் தினேஷ் குணவர்தனாவும் தேங்காய் உடைக்கிறார், வடக்கிலே தமிழ்த் தேசியத்தின் புதல்வர் சிவாஜிலிங்கமும் உடைக்கிறார்.!!

அதற்கு அவர் தரப்பில் சொல்லப்பட்ட காரணம்:

ஹிலாரி கிளிண்டன் வெற்றி பெற்று அதிபரானால் இலங்கைத் தமிழர்களுக்கு நன்மை ஏற்படும் என்று நம்புகிறோம். அமெரிக்காவின் வலுவான தலையீட்டின் மூலமாகத்தான் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வைக் காண முடியும். இலங்கைத் தமிழர்களின் எதிர்காலத்துக்கு ஹிலாரியின் வெற்றி மிக முக்கியமானது. அவர் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக நல்லூர் கந்த சாமி கோயிலில் தேர்தல் நாளன்று, ஆயிரத்தெட்டு தேங்காய்கள் உடைக்கின்றோம்.

சமீபத்தில் நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலத்தில் யார் தரப்பு வெற்றிபெறவேண்டும்? என்று சிவாஜிலிங்கம் தேங்காய் உடைத்தார் என்பதுதான் தெரியவில்லை?!

தமிழகத்திலும் சட்டமன்றத் தேர்தல் நடந்தபோது ஜெயலலிதாவின் வெற்றிக்காகவும், அவர் சிறை சென்ற சமயம் அவர் விடுதலையாகவேண்டும் என்பதற்காகவும், அவர் நோயுற்றபோது சுகமாக வேண்டும் என்பதற்காகவும் அவரது கட்சியின் எம்.எல்.ஏ.க்கள், ஆதரவாளர்கள் ஆயிரத்தெட்டு தேங்காய்கள் உடைத்து பிரார்த்தனை செய்தனர்.

இவ்வாறு இவர்கள் அனைவரும் ஏதோ ஒரு காரணத்துக்காக ஆலயங்களில் தேங்காய் உடைக்கிறார்கள்.

எனது பால்ய காலத்தில் 25 சதத்திற்கும் தேங்காய் வாங்கியிருக்கின்றேன். இன்று இலங்கையில் தேங்காய் 60, 70, 80, ரூபாவுக்கும் சில சமயங்களில் 100 ரூபாவுக்கும் விற்பனை ஆகிறது.

இலங்கையிலும் தமிழகத்திலும் வறுமைக்கோட்டின் கீழே எத்தனையோ ஆயிரம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் வாழ்வா தாரத்திற்கு உதவவேண்டிய இந்த பகுத்தறிவுக் கொழுந்து (?) தலைவர்கள், பதவி அதிகார பலத்திற்காகவும், எதிரணிக்கு சாபமிடுவதற்காகவும் தேங்காய்களை அடித்து நொறுக்கிக் கொண்டிருக்கின்றன.?!

இலங்கையில் தேங்காயின் விலை அதிகரித்து வரும் நிலையில், தேங்காய் ஏற்றுமதியை நிறுத்துமாறு, இலங்கை நுகர்வோர் பாதுகாப்பு சங்கம் கேட்டுக் கொண்டதாக செய்திகள் வெளிவந்தன.

தேங்காய் எந்த விலைக்கு உயர்ந்தாலும் ஆயிரத்தெட்டுத் தேங்காய்கள் உடைக்கும் கலாசாரத்திற்கு எம்மவர்கள் முற்றுப்புள்ளி இடமாட் டார்கள்.

**ஆயிரத்தெட்டு உடைப்பின் ரகசியம்**

அதுஎன்னஆயிரத்தெட்டு...? என்று ஒரு சோதிடம் தெரிந்த நண்பரைக் கேட்டேன். அவர் இந்த இணைப்பை அனுப்பியிருந்தார்:

நவீன கணினியுகத்தின் பாய்ச்சலில் இளம்தலைமுறை பரவசமுற் றுள்ள இக்காலகட்டத்தில், மூத்த தலைமுறை அரசியல்வாதிகள் மக்களின் பயன்பாட்டுக்குரிய தேங்காயை தேர்தல் வெற்றியை நோக்கி நகருவதற்கும் சாபமிடுவதற்கும் சூனியம் செய்வதற்கும் ஆயுதமாக்கும் செயலை, இன்றைய சுவாரஸ்யமான கோமாளிக்கூத்தாக ரசித்து கடந்து கொண்டிருக்கின்றோம்.

இது இவ்விதமிருக்க தேங்காயை மக்களின் பயன்பாட்டுக்கு ஏற்றவாறு குடிசைக் கைத்தொழிலுக்கு மாற்றியிருக்கும் முன்னாள் சிறை வாசி தம்பதிகள் பற்றிய செய்தி தமிழ் நாடு ஈரோடு மாவட்டத்தில் அத்தியூரையடுத்துள்ள மலையடிவாரத்திலிருந்து கிடைக்கிறது!

இங்கு வசிக்கும் அன்புராஜ் என்பவர் முன்னர் மலையடி வாரத் தில் ஆடு, மாடு மேய்த்துக்கொண்டிருந்தவர். அதன் பின்பு சந்தனக் கடத்தல் வீரப்பனின் கூட்டாளிகளில் ஒருவரானார். இவர் சிறையிலிருந்த காலத்தில், பசுமை விகடன் இதழைப் படித்து, தனது விவசாய அறிவை வளர்த்துக்கொண்டவர். அங்கு சிறை யிலிருந்த ரேகா என்பவரையே காதலித்து மணம் முடித்தார். சிறையிலிருந்து விடுதலையாகி வந்தபின்னர் குடிசைக் கைத்தொழிலாகத் தனது வீட்டிலேயே மரச்செக்கு அமைத்து தேங்காய் எண்ணெயுடன் கடலை எண்ணெய், நல்லெண்ணெய்யும் உற்பத்தி செய்து புதிய வாழ்வை பயனுள்ளதாக தொடங்கியிருக்கிறார்.

இவ்வாறு ஒரு முன்னாள் சிறைக் கைதி தம்பதிகள், தமக்கும் தமது மக்களுக்கும் பொருளாதர மேம்பாட்டிற்காக தேங்காயை பயன்படுத்தி வரும் காலத்தில் தான், அரசியல்வாதிகள் தங்கள் தேவைகளின் நிமித்தம் தேங்காய்களை ஆயிரக்கணக்கில் உடைத்துக் கொண்டிருக்கிறார்கள்!!! பாவம் தேங்காய்! அதன்விதியும் இப்படியா இருக்கிறது...?



# நர மாமிசத்தை நாடிய காரணம்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதனை பிரோன்ஸ் என்றும் அழைக்கிறார்கள். இந்த வைரஸ் தாக் குதல் ஏற்பட்டால் ஸ்ட்ரோக் ஏற்படுவது, கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு சிரிப்பு இதனால் மூச்சுத் திணறி மரணம் உண்டாவது ஆகியவை ஏற்படும்.

ஆரம்பத்தில் இந்த வைரஸ் தாக்குதலுக்கு என்ன காரணம் என்று கண்டுபிடிக்க முடியவில்லை பின் ஆராய்ச்சியாளர்களின் தொடர் ஆய்வின் முடிவில் நரமாமிசம் சாப்பிடுபவர்களுக்கு ட்விஸ் டட் ப்ரோட்டீன் நம் உடலில் வந்து சேர்கிறது நம் உடலில் இருக்கும் ப்ரோட்டீனுக்கும் புதிதாக எடுத்துக் கொள்ளக்கூடிய ப்ரோட்டீன் சேர்ந்த பட்சத்தில் இந்த வைரஸ் உருவாகிறது. இந்த வைரஸ் தாக்குதல் ஏற்பட்டால் அது முதலில் நம் மூளையைத் தான் தாக்குகிறது.



**தன்னைத் தானே...**

சில மனிதர்களுக்கு தன் உடலையே பிய்த்து உண்ணும் குணாதிசயம் இருக்கிறது. அதாவது தங்களது தசைகளையே



கடித்து சாப்பிடுவார்கள். இதனை ஓட்டோ கனி பலிசம் என்கிறார்கள்.

மிகத் தீவிரமான அளவில் டயாப்பட்டிக் நியூட்ரோபதியினால் பாதிக்கப்பட்டிருந்தாலோ அல்லது வெளியுலகத்தினால் தீவிரமான மனச் சிதைவிற்கு ஆளாகியிருந்தாலோ இப்படி தங்களை தாங்களே வருத்திக் கொள்வர். இது மரபணு ரீதியாகவும் வரக்கூடும்.

மருத்துவர்கள் இதனை ஓர் குறைபாடு என்றே வர்ணிக்கிறார்கள். இந்தப் பிரச்சினையினால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் நாக்கை அடிக்கடி கடித்துக் கொள்வர். நகங்களை, தோலை கடித்து உண்பது இவற்றில் ஆரம்பக்கட்டம்.

**ஸ்டாலினின் காலத்தில்...**

1932-33 காலகட்டத்தில் ஜோசப் ஸ்டாலின் ரஷ்யாவில் விவசாயத்தை மாற்றி அமைக்கப் போவதாக சொல்லி எல்லாருடைய நிலங்களை கைப்பற்றினார். இதில் உக்ரேனிய மக்கள் தான் பெரிதும் பாதிக்கப் பட்டார்கள். அவர்கள் தங்கள் நிலத்தை கொடுக்க மாட்டோம் என்றார்கள். ஸ்டாலினும் விடவில்லை, அவர்களுக்கு தொல்லை கொடுக்கும் விதமாக.... நிலத்தை ஒப்புக் கொடுக்க சம்மதிக்கும் வரையில் உணவுப்பொருள்கள் கிடைக்காமல் செய்தார். மனிதனால் உருவாக்கப் பட்ட மிகப் பெரிய வறுமை என்று சொன்னால் இதைக் குறிப்பிடலாம். இந்த நேரத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பசியினால் உயிரிழந்தார்கள். அதோடு, பலரும் நரமாமிசம் சாப்பிடப் பழக் கப்பட்டிருந்தார்கள். ★



# மாகாண சபையை டக்ளஸ் பொறுப்பெடுக்க விருப்பம்



மாகாணசபையைப் பொறுப்பெடுத்து அதை அர்த்தமுள்ள நிர்வாகமாகச் செயற்படுத்த விரும்புகின்றேன் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றின் அரசியல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஆரம்ப காலங்களில் புலிகள் இந்தச் சபை முறைமையை நிராகரித்திருந்தார்கள். இது அவர்களுடைய அரசியல் நிலைப்பாடாகும்.

அதன் பின்னர் நெருக்கடிகள் நிறைந்த சந்தர்ப்பத்திலும் அதைப் பொறுப்பேற்று நிர்வாகம் செய்தவர்கள் அதனைச் சரியாக நிர்வகிக்காததன் விளைவாக அது செயலற்றுக் கிடந்தது.

இந்தக் காரணங்களால் தமிழ் மக்களது பெரும் தியாகங்களுக்கு மத்தியில் கிடைக்கப் பெற்ற இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பலாபலன்களையும் மாகாண சபையின் நன்மைகளையும் இறுதி இலக்கை நோக்கி பயணிக்கும் வாய்ப்பையும் தமிழ் மக்கள் இழந்திருந்தனர்.

நெருக்கடியற்ற ஒரு சூழ்நிலையில் அந்த வாய்ப்பு மீண்டும் தமிழ் மக்களை நோக்கி வந்தபோது சந்திரனைக் கொண்டுவந்து அருகில் தருவோம், நட்சத்திரங்களை உடைத்துத் தருவோம் என உணர்ச்சிப் பேச்சுக்களைப் பேசி அதிகாரங்களைப் பெற்றவர்கள் கிடைக்கப் பெற்ற அரிய வாய்ப்பையும் சரியாக நிர்வகிக்கவில்லை.

அவர்கள் குற்றச்சாட்டுக்களையும் குறைகளையும் முன்வைப்பதனூடாகத் தமது இயலாமையை வெளிப்படுத்துகிறார்களே தவிர மாகாண சபையின் உச்சப் பலாபலன்களைத் தமிழ் மக்கள் பெற்றுக்கொள்வதற்காக அர்த்தமுள்ள முயற்சிகளையோ அல்லது விருப்பமுடனோ அவர்கள் செயற்படவில்லை.

இவ்வாறு முடங்கிக் கிடக்கும் மாகாணசபை முறைமையை மீண்டும் திறம்படச் செயற்படுவதற்கு மீண்டும் தமிழ் மக்களுக்கு ஒரு வாய்ப்பு வெகு விரைவில் வரவுள்ளது. அதைத் தமிழ் மக்கள் சரியான முறையில் பயன்படுத்தவேண்டும்.

நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் மக்களோடு வாழ்ந்து மக்களுக்கான சேவைகளைச் செய்தவர்கள் என்ற அடிப்படையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கரங்களுக்கு வடக்கு மாகாணசபை கிடைக்கப் பெறுமாக இருந்தால் நான் ஏற்கனவே கூறியதுபோல எமது தாயகப் பிதேசத்தை வளம் கொழிக்கும் பூமியாக மாற்றியமைப்பதுடன் எமது மக்களது பொருளாதார வறுமைகளை இல்லாதொழித்து தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு இறுதித் தீர்வை அடையும் திசை நோக்கி வழிநடத்துவேன் என்ற நம்பிக்கையும் அதற்கான உழைப்பும் உள்ளார்ந்த விருப்பும் எம்மிடம் உள்ளது.

இந்த அடிப்படையிலேயே நடைபெறவுள்ள வடக்கு மாகாணசபை தேர்தலில் போட்டியிடவேண்டும் என்று விரும்புகின்றேன். நான் மக்களை விட்டு ஓடியதும் இல்லை. ஓடப் போவதும் இல்லை. குறை கூறிக் கொண்டு இருக்கவும் போவதில்லை.

மாகாணத்தில் அதிகாரங்கள் குவிந்து கிடக்கும்போது மத்திய அரசுகளை எவ்வாறு கையாள வேண்டும் என்ற நீண்டநாள் அனுபவம் எனக்குண்டு – என்றார். (ஐ)

## காலி முகத்திடலில் மகிந்த அணியின் மே தினப் பேரணிக்கு அனுமதி மறுப்பு!



கொழும்பு, ஐம 06

காலி முகத்திடலில் மே தினப் பேரணியை நடத்துவதற்கு, கூட்டு எதிரணிக்கு அரசு அனுமதி மறுத்துள்ளது.

இலங்கையில் மே தினப் பேரணிகள் எதிர்வரும் 7 ஆம் திகதி நடத்தப்படவுள்ளன.

இந்த நிலையில் காலி முகத்திடலில் பேரணியை நடத்தக் கூட்டு எதிரணி திட்டமிட்டிருந்தது.

ஆனால், காலிமுகத்திடலில் கூட்டு எதிரணியின் பேரணிக்கு அரசு அனுமதி அளிக்க மறுத்துள்ளது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## பொதுஜன பெரமுனவுக்கு தாவும் 16 சு.க. எம்.பிக்கள்

கொழும்பு, மே 06

பதவி விலக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் உட்பட 16 பேரும், காலி சமனலை விளையாட்டு அரங்கில் கூட்டு எதிரணியினரால் முன்னெடுக்கும் மே தினப் பேரணியில் இணைந்து கொள்ளச் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி அவர்கள் பிற்காலத்தில் தங்களுடன் இணைந்து செயற்படவும் முடிவு செய்துள்ளதாகக் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த அரசால் மக்களின் அன்றாட வாழ்க்கைச் செலவு, வரிச்சுமையும், பொருள்களின் விலையும் அதிகரித்துள்ளது. இவ்வாறு பொருள்களின் மீது விதிக்கப்படும் வரிகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமே ஊழல் மோசடிகளில் ஈடுபடுகின்றது எனப் பார்த்தால், மறு புறத்தில் ஜனாதிபதி தலைமையிலான சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்கள் சிலரும் ஊழலில் ஈடுபடுகின்றனர். அண்மையில் தேசிய மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் 2 கோடி ரூபாவை இலஞ்சமாக பெற்றமை அதற்குச் சான்று என திலும் அமுனுகம சுட்டிக்காட்டினார்.

தற்போது நாட்டில் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றமானது அரசின் மீது பல சந்தேகங்கள் எழச் செய்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## கிளிநொச்சியில் மழை மகிழ்ச்சியில் மக்கள்





கிளிநொச்சி, மே 06

பல மாதங்களுக்குப் பின் கிளிநொச்சியின் பல பகுதிகளில் நேற்று மழை பெய்தது. இதனால் பொது மக்களுக்கும் விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்தனர்.

கடந்த சில மாதங்களாகக் கிளிநொச்சி மாவட்டம் கடும் வறட்சிக்கு முகம் கொடுத்து வந்தது. கடும் வெப்ப நிலை காரணமாகப் பொது மக்கள் பாதிக்கப்பட்டதுடன் விலங்குகளும் வறட்சியால் வாடின. இந்த நிலையில் நேற்றுப் பெய்த மழை கடும் வெப்ப நிலையைத் தணித்துள்ளது. (ஐ)

## சாகும்வரை உண்ணாவிரதம் மேர்வின் சில்வா எச்சரிக்கை!

அநுராதபுரத்தில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க விஜிதபுர கோட்டையை அழிப்பதற்கு எதிராகச் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் நடத்த போகிறேன் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

"விஜிதபுரக் கோட்டை அழிப்பதானது புத்தகாயவை தரை மட்டமாக்குவதற்கு இணையானது. இது நாட்டின் முகப்பு. இதனை அழிப்பவர்கள் அரசில் இருப்பார்கள் என்றால், அவர்கள் எல்லாளனின் பரம்பரைக்குப் பிறந்தவர்களாக இருப்பார்கள்.

இது குறித்து தேடி அறிய அநுராதபுரத்திற்குச் செல்ல உள்ளேன். விஜிதபுரக் கோட்டையை அழிப்பதற்கு எதிராகச் சாகும் வரையான உண்ணாவிரதப் பேராட்டத்தைத் தொடங்கவும் தயாராகஇருக்கின்றேன்" என மேர்வின் சில்வா குறிப்பிட்டார்.

## இளம் பெண் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு - வந்தாறுமூலை விஷ்ணு கோவில் வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் இருந்து, இளம் தாய் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வந்தாறுமூலை விஷ்ணு கோவில் வீதியில் வசிக்கும், 24 வயதான அழகரத்தினம் டிசாந்தினி என்னும் இளம் குடும்பப் பெண்ணே, சடலமாக மீட்கப்பட்டவராவார். இவரது சடலம், வீட்டின் வாசல் கதவருகே மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்றபோது பெண்ணின் 31வயதான கணவனும், ஒரு வயதுக் குழந்தையும் வீட்டில் இல்லை எனவும், கணவனின் அலைபேசி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## எதிர்கால அபிவிருத்தி குறித்து

# ஜப்பானிய நிபுணர் குழு ஜனாதிபதியுடன் பேச்சு



கொழும்பு, மே 06

ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ அபேயின் சிறப்பு ஆலோசகர் கலாநிதி ஹிரோரோ இசுமி தலைமையிலான ஜப்பானிய அதிகாரிகளின் சிறப்புக் குழுவொன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜப்பானுக்குச் சென்றிருந்தபோது, பிரதமர் ஷின்சோ அபேயுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின்போது எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய இந்தச் சிறப்புக் குழு இலங்கை வந்துள்ளது.

இலங்கையில் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படக் கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான ஆராய்வதற்கே இந்தக் குழு இங்கு வந்திருக்கிறது.

இந்தக் குழுவினருடனான சந்திப்பின் போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மின்சக்தித் திட்டங்களைத் துரிதப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து தெளிவுபடுத்தியுள்ளார்.

எதிர்காலத்தில் மின்சார நெருக்கடி ஒன்று ஏற்படும் சாத்தியங்கள் உள்ளதால் அவசர கதியில் மின்சக்தித் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஜப்பானிய உதவியுடன் திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம், கிழக்கில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் திட்டங்கள் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலைய அபிவிருத்தி மற்றும் கடல்சால் கண்காணிப்பு தொடர்பாகவும் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.05.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.